
கல்கி


KALKI





ADWAVE/TSR/1019

Kalki Shopping Page







AUTHORISED DEALERS :

VIVEK & CO.,
133, Royapettah High Road,
Madras - 600 004

SHANTHI ELECTRONICS,
821, Mount Road,
Madras - 600 002

PALLAVA & CO.,
624, T. H. Road,
Madras - 600 081

RATNA FAN HOUSE,
2, Rajabadar Street,
Madras - 600 017

VIVEK & CO.,
205, Purasawalkam High Road,
Madras - 600 007

OMMURUGA CYCLE MART,
547, T. H. Road,
Madras - 600 021


PALLAVA & CO.,
5, Thirukachi Nambi Street,
Kanchipuram - 631 503

Kalki Shopping Page

Kalki Shopping Page

How to buy
the best TV in town ?
Read other
TV advertisements.
Then come and
see ours 'live'!

Bharat TV




Available at :.
MAHAVEERA
417, Mint Street,
Madras-600 001
Phone : 34063

While others are busy talking about their TV sets, we are busy selling ours!


Bharat TV

more performance than promises.



Available at :
S.C. SHAH
158, Mount Road,
Madras-600 002
Phone : 87531

doss *Easy* TV plan



மல்டி சானல்
15.செ.மீ. டெலிவிஷன்
மற்றும் ஆன்டன்னு
ஆட்டோமாட்டிக் ஸ்டபிலைசர்
நீலஸ்கிரீன், லைசென்ஸ

	உடனடிக் கட்டணம்	12 மாதங்கள்	15 மாதங்கள்	18 மாதங்கள்
DYANORA T - 481	Rs. 875/=	Rs. 223/=	Rs. 184/=	Rs. 159/=
televista REGENT	825/=	208/=	172/=	148/=
ALLWYN AT 318	875/=	223/=	184/=	159/=

மற்ற மாடல்களும் இத்திட்டத்தில் கிடைக்கும்

வேறு எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

தாஸ்
தரமான பொருட்களின்
தரமான விற்பனையாளர்

doss
Dependable dealer of
dependable durables

Round Tana, ANNA NAGAR, Phone: 611271. 9.30-1 and 4-8.30. SUNDAY HOLIDAY.

ரவுண்ட்டானா, அண்ணாநகர் சென்னை 600040

Kalki Shopping Page

கல்கி



1979 ஜுன் 3
சித்தார்த்தி வைகாசி 20
மலர்: 37 இதழ்: 44

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

எம். ஜி. ஆருக்கு இரட்டை மாலை!

தேர்தல் என்று நடக்காமலேயே ஜனநாயகத்துக்குத் தஞ்சை ஒரு மகத்தான வெற்றியைத் தேடித் தந்துவிட்டது. ஜனநாயக விரோத சக்திகளுக்கு ஒரு மாபெரும் தோல்வியை அளித்திருக்கிறது.

விமான நிலையத்தில் இந்திராவைச் சந்தித்த ஜோதிடர் என்ன சொன்னாரோ நாம் அறியோம். இந்திரா தஞ்சைத் தேர்தலில் நிற்பதில்லை என்று தீர்மானித்து விட்டார். அதுமட்டுமல்ல, தந்திரமாகப் பழியை எம். ஜி. ஆர். மீது சுமத்த நினைக்கிறார்.

ஓர் அகில இந்தியக் கட்சியின் அனைத்திந்தியத் தலைவர் என்று கூறிக் கொண்டு, இன்னொரு மாநிலக் கட்சியின் தலைவர் தமக்கு ஒத்துழைப்புத் தர வில்லை, அதனால் தாம் தேர்தலுக்கு நிற்கவில்லை என்று கூறுவதை விட வெட்கக் கேடான விஷயம் வேறு இருக்க முடியாது. 'எம். ஜி. ஆரின், அ.இ.அ.தி.மு.க. கட்சியின் ஆதரவு இல்லாவிட்டாலும் நான் தேர்தலில் நிற்பேன், வென்று காட்டுவேன்' என்றல்லவா இந்திரா கூறியிருக்க வேண்டும்?

ஆனால் மக்களிடையே தமக்கிருந்த அளப்பரிய செல்வாக்கினைப் படிப்படியாகத் தாமே அழித்துக் கொண்டுவிட்ட இந்திராவால் இன்று அப்படித் தைரியமாகக் கூற முடியவில்லை. எனவே வெற்றிகரமாக வாபஸ் வாங்கி விட்டார்!

இவ்விதம் பின்வாங்கும்போது, இந்த உண்மையை ஒப்புக் கொண்டிருந்தால் கௌரவமாக இருந்திருக்கும். அல்லது, 'தஞ்சை, சிக்மகளூர் அல்ல' என்பதைத் தாம் தக்க சமயத்தில் புரிந்து கொண்டதாகக் கூறியிருந்தாலும் பாராட்டியிருக்கலாம்.

ஆனால் அதை விடுத்து, எம். ஜி. ஆர். மனத்தைப் பிரதமர் கலைத்து விட்டார், அதனால் இந்திரா தேர்தலுக்கு நிற்கவில்லை என்று பொருள்பட ஆர். வி. சுவாமிநாதன் கூறியிருப்பதில் அர்த்தமுமில்லை, சாணக்கியமுமில்லை. அ.இ.அ.தி.மு.க.வுக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் இருந்து வரும் ஓரளவு ஒத்துழைப்பும் தமது இந்த அறிக்கையால் பாதிக்கப்படும், அகில இந்திய ரீதியில் இதனால் தமது கட்சி மேலும் பலவீனப்படும் என்பதை ஆர். வி. எஸ். உணர்ந்ததாகத் தெரியவில்லை. இது சாணக்கியமின்மையைக் காட்டுகிறது.

இந்திராவுக்கு அ.இ.அ.தி.மு.க. ஆதரவு தரக் கூடாது என்று பிரதமர் எப்படிக் கூற முடியும்? அ.இ.அ.தி.மு.க. கட்சிப் பிரச்னையில் மொரார்ஜி எப்படித் தலையிட முடியும்? இந்திரா ஒரு ஜனநாயக விரோதி என்ற, எல்லாருக்கும் தெரிந்த ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டியதற்கு அதிகமாகப் பிரதமர் ஏதும் எம். ஜி. ஆரிடம் இது விஷயமாகப் பேசவில்லை. கண்ணியம் காத்திருக்கிறார். எனவே ஆர்.வி.எஸ்.ஸின் அறிக்கை அர்த்தமற்றதாகவும் ஆகிறது.

இந்திராவுக்குத் தஞ்சைத் தேர்தலில் தமது கட்சியின் ஆதரவு இல்லை என எம். ஜி. ஆர். முடிவெடுத்திருந்தால் அது எம். ஜி. ஆரின் சொந்த முடிவுதானேயொழிய வேறில்லை.


எம். ஜி. ஆரின் ஆதரவுடன் இந்திரா தஞ்சையில் வெற்றி பெறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். நிறுவப்படவிருக்கிற விசேஷக் கோர்ட்டுகள் நாளை இந்திராவைக் குற்றவாளியாக்கித் தண்டனை விதித்தால், இந்திரா நாடாளுமன்ற பதவியை மீண்டும் இழக்க நேரிட்டால், அப்போது எம். ஜி. ஆரின் நிலை என்ன? இந்திரா தஞ்சையில் தோல்வி அடைகிறார் என்றே வைத்துக் கொள்வோம். நேருஜியின் மகள் இந்திரா, அனைத்திந்தியக் கட்சியின் அகில


பாரதத் தலைவராக இருந்தும், எம். ஜி. ஆரின் ஆதரவு இருந்தும் தோல்வி கண்டார் என்றால் அப்போது எம். ஜி. ஆரின் நிலை என்ன? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.


எனவே சரியான சமயத்தில் எடுக்கப்பட்ட முடிவாக இல்லா விட்டாலும் சரியான முடிவை எடுத்த எம். ஜி. ஆரை வாழ்த்தவே வேண்டும்.

இது தவிர மற்றுமொரு சரியான முடிவுக்காகவும் முதல்வரை வாழ்த்துகிறோம். புது தில்லியில் தாம் நடத்தவிருந்த ஊர்வலத்தை ரத்து செய்ததுதான் அது. 'நெல் கொள் முதல் விலையை அதிகரித்து நிர்ணயிக்க வேண்டும்' என்று நெல் பயிரிடும் மாநிலங்களின் அரசுகள் ஒன்றாகச் சேர்ந்து செய்துள்ள கோரிக்கையை மத்திய அரசு சுலபமாக நிராகரிக்க முடியாது. இதுபோன்ற பிரச்னைகளில் மத்திய அமைச்சர்களுடன் மாநில அமைச்சர்களும் முதல்வர்களும் சக்தி வாய்ந்த முறையில் பேச்சு வார்த்தை நடத்தி, உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள வேண்டுமே யொழிய மத்திய அரசிடம் செல்வாக்கே இல்லாதவர்கள் போலவும், தொழிற்சங்க வாதிகள் போலவும் வீதிக்கு வந்து போராடுவது என ஆரம்பித்தால் அது பரிகாசத்துக்குரியதாகி விடும்.

இரண்டு சரியான முடிவுகளுக்காகவும் முதல்வருக்கு இரட்டை மாலைகள் அணிவித்துப் பாராட்டுகிறோம்.







வாரியார் விளக்குகிறார்!

(திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களைச் சந்தித்து ஆன்மீகத் துறையில் தற்போது மக்களிடையே உள்ள ஈடுபாடு, அடிப்படை மனநோக்கு சம்பந்தப்பட்ட சில சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டபோது அவர் அளித்த பதில்கள்.)

கேள்வி: சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அதிகமாகி அடிப்படை அம்சமும், அவசியமும் ஆன ஆழ்ந்த இறை வழிபாட்டில் மக்கள் செலுத்தும் ஈடுபாடு தற்போதைய சூழ்நிலையில் குறைந்துள்ளதுபோல் தோன்றுகிறதே. இது சம்பந்தமாக ஏதேனும் விளக்கம் அளிக்கிறீர்களா?

வாரியார்: உங்கள் கூற்றைச் சரியானதாக ஏற்றுக் கொள்ள முடியாது. தாங்கள் குறிப்பிட்டதற்கு மாறாகத் தற்போது மக்களிடையே தெய்வ நம்பிக்கையும், பக்தி சிரத்தையும் அதிகரித்து உள்ளன என்பதுதான் என் அபிப்பிராயம். ஆனால் ஒன்று. பக்தி அதிகரித்து உள்ளதற்கு எதிரிடையாக மக்களின் பண்பு குறைந்துள்ளது.

கேள்வி: தங்களது கூற்றை ஏற்றுக் கொண்டாலும் பண்புடன் கூடாத பக்தி எவ்விதத்தில் மக்களை நல்மார்க்கத்தில் செலுத்த முடியும்?

வாரியார்: பண்புடன் கூடாத இறை பக்தியில் பலன் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக ராவணனையே கொள்ளலாம். ஆழ்ந்த இறைபக்தி இருந்தும் பண்பு கெட்டதால் அவன் அழிந்துதானே போனான். இதனால் மக்கள் இறை பக்தியுடன் தங்களது பண்பு நலன்களை உயர்த்திக் கொண்டால்தான் இறைவனது அருளை முழுமையாகப் பெற முடியும்.

கேள்வி: 'இறைவா, எனக்கு நீ இதனைச் செய்து கொடுத்தால் உனக்கு அபிஷேகம் செய்கிறேன். உனது உண்டியலில் இவ்வளவு பணம் போடுகிறேன்!' போன்றெல்லாம் இறைவனிடம் வேண்டிக் கொண்டு ஒரு வியாபாரம் போல் இறையின் அருளையும் பொருள் செல்வத்தையும் இணைத்து நினைப்பது எவ்விதத்தில் சரியானது?

வாரியார்: 'இறைவன் எல்லாம் அறிந்தவன். நமது குறை நிறைகளை உணர்ந்தவன். நாம் வேண்டாமலேயே நமது தேவைகளை உணர்ந்து அவன் செய்வான்' என்கிற மன முதிர்ச்சி எல்லோருக்கும் வந்துவிட முடியாது. இத்தகைய மன முதிர்ச்சி இல்லாதவர்கள்தான் பொருளையும், இறையின் அருளையும் இணைத்து நினைக்கும் பாமர மக்கள். தங்களது மன முதிர்ச்சிக்கு ஏற்ப இவர்கள் வழிபடுவதால் இவர்களது வழி

பாடு சரியானதல்ல என்று ஒதுக்கிவிட முடியாது. ஆனால் இவர்கள் தங்களது மனநோக்கை உயர்த்திக் கொண்டு முதிர்ச்சியான மனப்பக்குவத்துடன் இறைவனை வணங்க முயற்சி செய்ய வேண்டும்.

கேள்வி: சாதாரண மானுடனின்று சற்று மாறுபட்டு ஓரளவு தெய்வானுக்ரஹம் பெற்றுள்ளதாகக் கருதப்படும் மானுடரை (Godmen) தெய்வத்துக்கு இணையாக மக்கள் வழிபடுவது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

வாரியார்: மானுடரை இறைவனுக்கு இணையாக வழிபடுவது எனக்கு ஏற்பு இல்லை. ஆனால் இறைவன், ஆச்சார்யன், அடிகளார் ஆகிய மூவரும் வழிபாட்டுக்கு உரியவர்களாக சாஸ்திரம் கூறுகிறது. அடிகளார் என்று குறிப்பிடும்போது அப்பூதி அடிகள், நம்மாழ்வார் போன்று அத்தகைய பதவிக்குப் பொருத்தும் குணசீலங்கள் உள்ளவர்களைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கேள்வி: இறைவனை வழிபடுவோர் ஆலயத்திற்குச் சென்றுதான் வழிபட வேண்டும் என்ற அவசியம் உள்ளதா? வீட்டிலேயே இறைவனை நினைத்து வழிபடுவதால் இறைவனது அருள் கிடைக்காதா?

வாரியார்: மின்சாரம் தானாக வெளிச்சம் தர முடியாது. மின்சாரத்தை பல்பினுள் செலுத்தினால்தான் வெளிச்சம் பெற முடிகிறது. அம்மாதிரியே ஆலயம் சென்று இறைவனிடம் மனத்தை ஒருமித்து நிலைப்படுத்தி வழிபடுவதுதான் சாலச் சிறந்தது. என்னதான் மன முதிர்ச்சி இருந்தாலும் வீட்டிலே வழிபடும்போது இறையின் பால் ஈடுபாடு விலகுவதற்கு வாய்ப்பு உண்டு.

கேள்வி: ஆகம விதிகள்படி அமைக்கப் பெறுமல், ஏராளமான கோவில்கள் நடைபாதைகள் உட்பட பல இடங்களில் தற்போது அமைக்கப்படுவதைக் காண்கிறோம். இத்தகைய கோவில்கள் பற்றியும், இவற்றில் இறை வழிபாடு செய்வது பற்றியும் தங்கள் அபிப்பிராயம் என்ன?

வாரியார்: உடலை மறைக்கத் துணி உடுத்த வேண்டியது அவசியம்... ஆனால் பேண்ட் போடுவதா... அதிலும் டெரிலின் பேண்ட் போடுவதா... அல்லது வேஷ்டி உடுத்துவதா என்பதெல்லாம் அவரவர் வாழ்க்கை வசதி நிலையையும், மனப் பிடித்தத்தையும் பொறுத்தது. கடவுள் பக்தி வேண்டும் என்பதுதான் அடிப்படை. அவரவர் வாழ்க்கை வசதி நிலைக்கு ஏற்பவும், சௌகர்யத்துக்கும், மன நோக்குக்கு ஏற்பவும் கோவிலில் சென்று வழிபட்டாலும் இறைவன் அருள் நிச்சயம் உண்டு.

நாட்டில் கோவில்கள் பெருகுவது ஆஸ்திக உணர்வு மக்களிடையே பரவுகிறது என்பதைத்தான் காட்டுகிறது.

கேள்வி: கருமாரியம்மன் கோவிலுக்குக் குறிப்பிட்ட வாரங்கள் சென்று வணங்கினால் நினைத்தது கைகூடும் என்று ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் பிரபல்யம்... பிறகு காலத்தில் இது குறைந்து மாங்காடு அம்மன் கோவிலுக்குச் சில வாரங்கள் சென்று வணங்கினால் எதிர்பார்க்கும் நற்பயன் கிடைக்கும் என்று ஒரு நம்பிக்கை...

க்ளோஸ் அப்

திரு எஸ். ஏ. சுப்பிரமணியம்



● தாம் முப்பத்தாறு மாதங்களில் பெறவிருக்கும் சம்பளம் முழுவதையும் வங்கியில் டெபாஸிட் செய்து, அந்தத் தொகையை ரூபாய் ஐம்பதாயிரமாக முழுமையாக்கி ஒரு 'டிரஸ்ட்' அமைத்துக் கோவை மாவட்டம் சூலூரில் உள்ள எல்லாக் குழந்தைகளின் கல்வி நலன்களுக்காக ஜாதி மதப்பாகுபாடு எதுவும் இல்லாமல் பயன்படுத்தப் போகிறார் பள்ளிக் கல்வித் துறையில் இணை இயக்குனராகப் பணியாற்றும் சூலூர் திரு எஸ். ஏ. சுப்பிரமணியம்.

தமிழ்நாடு அரசு, தன் ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்தி உத்தரவிட்டுள்ளது. இதன்படி ஆகஸ்ட் '80இல் ஓய்வு பெற வேண்டிய இவர் மேலும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றலாம். இந்தச் சலுகையை இப்படிப் பொதுப்பணிக்குப் பயன்படுத்தும் முடிவை இவர் அறிவித்துள்ளது மிகவும் முன்மாதிரியானது.

சூலூரில், மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தார். இவர் அங்கே படித்தது எட்டாம் வகுப்பு வரையில்தான். பின்னர் கோவையிலும் திருச்சியிலும் படித்துப் பட்டம் பெற்றுச் சென்னை மெஸ்டன் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். பத்தொன்பது ஆண்டு காலம் மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். தமிழ்நாடு சர்வீஸ் கமிஷனால் 1966இல் மாவட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமரர் 'கல்கி'யின் எழுத்துக்களில் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர், திருச்சியில் படித்தபோது, கல்கி ஆற்றிய எழுச்சிமிக்க சொற்பொழிவைக் கேட்டதை இப்போதும் நினைத்து மகிழ்கிறார்.

திரு. சோ. சிவபாதசுந்தரம்

● "எவ்வளவுதான் புதிய நாகரிகங்கள் வந்தாலும் பழைமை மணம் குறையாமல் உள்ளவை வெனிஸ் நகரமும் மதுரையும் தான்" என்று கூறும் சிவபாதசுந்தரம் மதுரை என்றாலே தம்மை மறந்துவிடுகிறார்.

ஆண்டுக் கணக்கில் திட்டங்கள் போட்டுத் தகவல்கள் சேகரித்து நூல் எழுதத் தொடங்கும் போது மதுரைக்குச் சென்றுவிடுவார். ஒரு சாதாரண லாட்ஜில் நான்கைந்து வாரங்கள் தங்கி, செய்தித் தாளைத் தொடாமல், வானொலி



க்ளோஸ் அப்

யைக் 'கேட்காமல் தம்மைத் தனிமைப் படுத்திக் கொண்டு ஐந்நூறு பக்கங்கள் வரை நேரடியாக ''டைப்'' செய்துவிடுவார்.

அப்படி ஒரு நூலின் கடைசி அத்தியாயத்தை எழுதி மன நிறைவுடன் மீனாட்சி ஆலயத்துக்குச் சென்று வழிபட்டபோது பிரசாதம் வழங்கிய அர்ச்சகர், இவர் தோளில் ஒரு மலர்ச் சரத்தையும் அணிவித்தாராம். ''அன்று வைசாக பௌர்ணமி என்று பிறகு தான் தெரியும். அப்போது நிறைவு செய்திருந்த நூல் 'கௌதம புத்தரின் அடிச்சுவட்டில்'' — என்று சொல்லி அந்தப் பொருத்தத்தை நினைத்து மெய் சிலிர்க்கிறார் சிவபாத சுந்தரம்.

திரு. கண. முத்தையா

● நேதாஜி தோற்றுவித்த இந்திய தேசிய இராணுவத்தினரின் நலன்களுக்காக ஒரு குழு அமைக்கப் பட்டது. முன்னாள் இராணுவத்தினருக்கு அரசு வழங்கும் எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் உண்டு என்று அறிவித்ததைத் தொடர்ந்து திரு கண. முத்தையாவும் அந்த நிவாரணக் குழுவில் சேர விண்ணப்பிக்கச் சென்றார்.

சுபாஷ்போஸின் நேர்முக உதவியாளராகப் பணியாற்றிய மேஜர் சாமி என்பவர்தான் இந்த நிவாரண வேலைகளை ஒழுங்கு செய்தார். கண. முத்தையாவுடன் கொண்ட நெருக்கமான உறவு காரணமாய் அவர் கேட்டாராம்.

''இந்தியா சுதந்திரமடைய வேண்டும் என்கிற நேதாஜியின் குறிக்கோள்தான் நிறைவேறிவிட்டதே. நமக்காக இனிமேல் எந்தச் சலுகையைப் பெற வேண்டும்?''

கண. முத்தையா, உணர்ச்சி வசப்பட்டவராய்த் தம் கருத்தை மாற்றிக் கொண்டு விண்ணப்பத்தை அங்கேயே கிழித்துப் போட்டாராம். நிவாரணக் குழுவில் கண. முத்தையாவும் மேஜர் சாமியும் உறுப்பினர்கள் ஆகாதது மட்டுமில்லை. இருவரும் அரசின் சலுகை, உதவி எதையும் பெறவும் இல்லையாம். பர்மாவில் போர்க் கைதியாக ஓராண்டு இருந்தபோது இவர் மொழி பெயர்த்த ராகுல் சாங்கிருத்தியாயனின் இரண்டு நூல்கள் இதுவரை பத்துப் பதிப்புக்கள் வெளியாகியுள்ளன. 'வால்காவிலிருந்து கங்கை வரை'. 'பொதுவுடைமை தான் என்ன?' என்பவை அந்த நூல்கள்.

பழக்கமான, மனத்துக்குப் பிடித்த வேலை என்கிற அளவில் 1946ல் தொடங்கிய ''தமிழ்ப் புத்தகாலயம்'' தரமான நூல்களையே வெளியிடுவது என்ற கொள்கையில் இயங்கி வருவதாய்க் கூறுகிறார் திரு. கண முத்தையா.



இம்மாதிரி வழிபடும் தெய்வத்தின் ரூபத்தைக் கால ஓட்டத்துக்கு ஏற்றாற்போல் மாற்றிக் கொள்வது ஒரு நாகரிகம் போல் பரவுவதைக் காண்கிறோமே! இது எவ்விதத்தில் சரியானது என்று கூற முடியுமா?

வாரியார்: நான் முன்பு குறிப்பிட்டதுபோல் தெய்வ சிந்தனையும், பக்தி வழிபாடும் இருக்க வேண்டும் என்பதுதான் அடிப்படை. அவரவர் தங்களது மனத்துக்குப் பிடித்தது போல் இறையை எந்த ரூபத்தில் வழிபட்டாலும் பயன் உண்டு.

கேள்வி: ஜீவ ஹிம்சை செய்வது பாப காரியம் என்பது ஹிந்துமத சித்தாந்தம். இதன்படி எவ்வுயிரைக் கொன்றாலும் அது பாபமாகும். அப்படியிருக்க, பசுவைக் கொல்வதைத் தடுக்க மட்டும் போராடுவதும், சட்டம் இயற்றுவதும் எவ்விதத்தில் சரியானது?

வாரியார்: எந்த உயிருக்கு ஹிம்சை விளைவித்தாலும் அது பாபம்தான். ஆனால் பசுவைக் கொல்வது மிகப் பெரிய பாபகாரியம் ஆகும். குழந்தையை வளர்க்கும் தாயின் பாலுக்கு இணையாகக் கருதப் படுவது பசுவின் பால் தான். மனிதன் இறந்த பின்னர் அவனது வாயில் கடைசியாக விடப்படுவதும் பசுவின் பால்தான்.

'வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்' என்று அந்தணருக்கும், வானவருக்கும் அடுத்த ஸ்தானத்தைப் பசுவிற்கு அளித்து சாஸ்திரம் கூறுகிறது.

இவ்வாறிருக்க, பசுவதையைத் தடுக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். பசுவதை செய்யும் எந்த நாடும் தழைத் தோங்க முடியாது.

கேள்வி: ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுவதைத் தடுக்கும் விதமாகச் சட்டம் (Anti Religious Conversion Bill) கொண்டு வர மத்திய அரசு முயற்சி செய்கிறதே. அதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

வாரியார்: அவரவர், அவரவரது மதத்தில் இருக்க வேண்டியது அவசியம்தான்! இதனைப் பாதுகாக்கும் விதமாகச் சட்டம் இயற்றுவது சரிதான்!

கேள்வி: ஒரு ஆன்மா எடுக்கும் பல பிறவிகளில் சிறந்தது மானுடப் பிறவிதான் என்றும், முந்தைய பிறவியில் புண்ணியம் செய்திருந்தால்தான் இப்பிறவி கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது. இம்மாதிரி ஒரு முறை மானுடப் பிறவி எடுக்கும் ஆன்மா அப்பிறவியில் செய்யும் புண்ணியங்களின் அடிப்படையில் மறுபடியும் மானுடப்பிறவி எடுக்க வாய்ப்பு உண்டா?

வாரியார்: ஹிந்து மத சாஸ்திரப்படி இத்தகைய வாய்ப்பு நிச்சயம் உண்டு. வேதவதி சீதையாகப் பிறந்ததையும், நளாயினி திரௌபதியாகப் பிறந்ததையும் நமது இதிகாசங்கள் வாயிலாக அறிகிறோம்.

பிறவிகளிலேயே உயர்ந்தது மானுடப் பிறவி. முந்தைய ஜென்மத்தில் பெரும் புண்ணியம் செய்திருந்தால்தான் இப்பிறவி கிடைக்கும் என்பது சரிதான். அதேசமயம் இப்பிறவியில் பாபங்கள் செய்வதால் மறு பிறவியில் ஈன ஜன்மம்தான் கிடைக்கும்.

பேட்டி: நாயகன்
புகைப்படம்: மன்னை மூர்த்தி

கார்த்திகா ராஜ்குமார்

'புரூட்டஸ் 79'

சாம்பசிவம் தம் வழக்கமான காலை நேரப் பூஜைகளை முடித்துக் கொண்டு முன் அறைக்கு வந்தபொழுது, ராஜா — அவரின் மாணவன், காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

அவனைப் பார்த்ததும் அவர் முகத்தில் புன்னகை மலர்ந்தது. ராஜா — அவரின் மாணவர்களிலேயே அவருக்கு மிகவும் பிடித்த மாணவன். ராஜாவின் அப்பா... பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் பியூன். ஏழைக் குடும்பமானாலும், நல்ல நேர்மையான குடும்பம்....

''ராஜா உனக்குப் புரியாத கணக்கைச் சொல்லித் தரேன். கொஞ்ச... நாழி பொறு.. வேலை கிடக்கு... முடிச்சுட்டு வந்திடறேன்'' என்று அவர் கொல்லைப் பக்கம் போன பொழுது, அவர் கூடவே போனான் ராஜா.

''என்ன சார், தொவைக்கணுமா? நான் செய்யறேனே சார்...''

அவருக்குச் சிரிப்பாக வந்தது.

''ஏண்டா... துணி தோய்ச்சுப் போட்டு, ஐஸ் வைக்கலாம்னு பார்க்கிறயா... ம்ம்... சரி... அதோ பார் அந்தத் தொட்டியிலே நீர் ரொப்பு...'' என்றார்.

அவர் துவைக்க, துவைக்கக் கிணற்றிலிருந்து தண்ணீரைச் சேந்தி அந்தப் பெரிய சிமெண்ட் தொட்டியில் ஊற்றிக் கொண்டிருந்தான் ராஜா.

''சார்! நா ஒண்ணு கேட்கலாமா?...''

''ம்ம்... கேளு...''

''தினம் தினம் ஏன் சார் பூஜை பண்ணிட்டு இருக்கீங்க...''

''ராஜா... நாம தினத்துக்கும் சாப்பிடறோமில்லையா?... அது மாதிரி தான் இதுவும்... இந்தப் பூஜை... மந்திரம்... வேதம்... எல்லாம் நம்ம ஆத்மாவுக்கு... சாப்பாடு மாதிரி... நாமும் நம்மளைத் தூய்மையா... வைச்சுக்கிறதுக்கும், ஆண்டவனோட அருள் பெற்று... சமாதானத்தோடேயும் சந்தோஷத்தோடேயும்... இருக்கிறதுக்குத் தாண்டா... இந்தத் தினசரி... பூஜை...''

''ஏன் சார்... அப்போ... வெறும் பூஜை.. பண்ணிட்டா... மட்டும்... எல்லாமே கிடைச்சிடுமா... சார்! கெட்டவன் கூட... பூஜை தினத்துக்கும் பண்ணினா... சாமி... எல்லாத்தையும் குடுத்திடுவாரா?''

அவர் வியந்து போனார்.

வியந்தபடியே உள்ளே வந்தவரின் முகம் சட்டென்று விகாரமாக மாறியது. கத்தினார்.

''டேய் ராஜா... இங்கே வா.. இந்தக் கர்மமெல்லாம்... இங்கே... எப்படி வந்தது?...''

அதிர்ச்சியும், வியப்புமாக வேகமாக வந்து பார்த்தான் ராஜா. அங்கே அவனுடைய செல்ல 'சீசர்' தன் கறுத்த பெரிய உடலைச் சுமக்க முடியாமல் சுமப்பது போல, நாக்கை வெளியில் தொங்கப் போட்டபடி நின்று கொண்டிருந்தது.

'இதைப் போயா... இவர்... கர்மம்னு... சே...' அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

ஒரு கணம் வெறித்தான். பின் தலை குனிந்தபடி வெளியில் நடந்தான். சீசரும் வெடுக்கென்று எழுந்து அவனைப் பின் தொடர்ந்தது.

ராஜா சென்று வெகு நேரம் ஆகியும், அப்படியே பிரமை பிடித்தவர் போல இருந்தார் சாம்பசிவம். ராஜாவிடம் கோபமாகப் பேசுவது... இது தான் முதல் தடவை. அவன் பார்த்து விட்டுப் போன அந்தப் பார்வை, அவர் மனத்தை உறுத்த, குழப்பமும், சங்கடமுமாக இருந்தது அவருக்கு.

'நான் ஏன் இப்படி ஆத்திரப் பட்டு... கத்தினேன்?... இந்த ராஜா... என்னமா... பார்த்துட்டுப் போயிட்டான்? இந்த நாய்களைப் பார்த்தாலே... எனக்கு ஒரு... 'அவர் ஷன்'... அலர்ஜி... மாதிரின்னு... இந்த ராஜாவுக்கு... எப்படிச் சொல்லுவேன்? சொன்னாத்தான் நம்புவானா?...''

இருபது வருடத்துக்கு முன் நடந்த அந்தக் காட்சிகள் அவர் மனத்தில் நிழலாடின.

ஒரு தடவை அவரும், அவர் தங்கை கமலமும், வந்து கொண்டிருந்த பொழுது... யாரோ சீண்டி விட்ட வெறிநாய் அவர்களைத் துரத்தியது... சாம்பசிவம் சட்டென்று ஒரு மறைவில் ஒதுங்கிக் கொள்ள... அந்த நாய்.. துரத்தி... கமலாவைக் கடித்து விட்டது.

நாட்டு வைத்தியர் வந்து... ஏதோ கட்டுப் போட்டார். பத்தியமாக இருக்கச் சொன்னார். ஆனால்... அந்த மூன்றாவது வாரத்தில் ஒரு நாள் கமலம் திடீரென்று ஊளையிட்டவுடன், அவர் உடல் பயங்கரமாகச் சிலிர்த்துப் போனது... அதைக் கேட்டு... நடுநடுங்கிப் போனார். கமலம் அடிக்கடி... நாய் போல் ஊளையிட்டு... ஊளை யிட்டு... துடிதுடிக்க... ஒருநாள் ஓய்ந்தே போனாள்:

அன்றிலிருந்து... நாய்களைப் பார்த்தாலே இனம் புரியாத வெறுப்பு அவர் மனத்திலிருந்து... கொப்பளிக்க, ஆத்திரங்கள் பொங்க... பார்க்கும் நாய்களை... எல்லாம் கல்லை எடுத்து... அடித்து... துரத்தி...

நாளாக, நாளாக அந்த வெறி தணிந்து போனாலும், அந்த வெறுப்பு மட்டும் அப்படியே இருந்தது.

''ராஜா... என்னை மன்னிச்சுடுப்பா... எல்லா விஷயத்தையும் உன் கிட்டச் சொன்னாதான் நீ என்னைப் புரிஞ்சுக்க முடியும்...' இப்படித் தீர்மானித்த பின்தான் அவருக்கு நிம்மதி ஏற்பட்டது போலிருந்தது.

அடுத்த நாள்...

பக்கத்து ஊருக்குச் சென்று, போன காரியத்தை முடித்து விட்டு, மதிய வேளைக்கு மேல் தான் வீடு திரும்பினார் சாம்பசிவம். கொல்லைப்

புறத்தில் பாக்கியிருந்த தோட்ட வேலையை முடிக்கச் சென்றார். எல்லாவற்றையும் முடித்து விட்டு, செடிகளுக்கும், தண்ணீர் ஊற்றி முடித்து விட்டு, களைப்புடன் சோர்வாக வீட்டினுள் வந்தவர், அதிர்ந்து போனார். அவர் உடல் 'ஜிவுஜிவு' என்று சூடேற முகம் விகாரமாக மாறியது...

''ஏய்... சனியனே போ...'' அலறினார்.

உள்ளே முன்னறையிலிருந்த சீசர், அவர் வாங்கிக் கொண்டு வந்த பொட்டலத்தைக் கடித்து, பிரிக்க முயன்று கொண்டிருந்தது. அவரின் குரல் கேட்டதும், மெல்ல நிமிர்ந்து பார்த்தது.

பின் எதுவுமே நடக்காதது போல், மீண்டும் அதைப் பிரிக்க முயன்ற பொழுது, அவரின் ஆத்திரம் எல்லையைக் கடந்தது.

உடலெல்லாம் பதற, சூடேற, நடுங்க என்ன செய்வதென்று புரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தார். அருகிலிருந்த இரும்புப் பூண் போட்ட அந்தக் கனத்த தடி அவர் கண்ணில் பட, பாய்ந்து சென்று அதை எடுத்து, அதன் பக்கத்தில் வீசி எறிந்தார்... ஆனால் அவர் வீசுவதைப் பார்த்த சீசர் சட்டென்று நகர...

மறுகணம் வீலென்ற அலறலுடன் சீசர் சுருண்டு விழுந்தது. அந்த அலறலில் வெலவெலத்துப் போனார் சாம்பசிவம். உடல் கிடுகிடுவென்று நடுங்க.. மெல்ல சீசரின் அருகில் வந்து பார்த்தார்.

அசைவற்று... சலனமின்றிக் கிடந்தது சீசர். அதன் தலையின் பின்புறம் மெல்லியதாக ரத்தம் வந்து கொண்டிருந்தது. அந்தத் தடியை எடுத்து நடுங்கும் கைகளால், சீசரை அசைத்துப் பார்த்த பொழுது... அதன் உடல் தொய்ந்து விழ... அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனார்.

''சுகவரா... இப்ப நான் என்ன பண்ணுவேன்? இப்படி ஒருசோதனைக்குளென்னை ஆளாக்கிட்டியே...!''


அவருக்கு அழ,அழ ஆறவே இல்லை. அவரின் ஆற்றாமை விம்மல்களாக வெளிப்பட்டுக் கொண்டிருந்த பொழுதுதான் 'அந்த எண்ணம்' அவருக்கு உதித்தது.

'இதை... யாருக்கும்... தெரியாமல்... மறைத்து விட்டால்... பின்புறத் தோட்டத்தில் புதைத்து விட்டால்...'

சீசரின் பெருத்த, கருத்த உடலைத் தூக்கி... குழியில் போட்டு... மண் வெட்டியினால் மண்ணைத் தள்ளி... மூடி... விட்டு... லேசான மன நிம்மதியும், கண்ணீருமாக வீட்டினுள் நுழைய வந்தவருக்கு உலகமே தலைகீழாகச் சுற்றுவது போலிருந்தது...

எதிரே.

ராஜா... சூன்யப் பார்வையுடன், கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிய,



கையில் ரத்தக் கறையினுடனிருந்த அந்தத் தடியுடன் நின்றிருந்தான்.

ஓடி வந்து ராஜாவின் கைகளைப் பிடித்துக் கொண்டார். வார்த்தைகள் வெளிவராமல் திக்கியது.

''ராஜா... ரா... ஜா... உன் சீசர் செத்துப் போயிடுச்சப்பா... தெரியாம தவறிப் போய் ... நானே... கொ... ன்.... னு...ட்...டேன்... நான் ஆத்திரத்திலே... தடியைத் தூக்கி வீசினேன்.... சத்தியமா... அது மேலே வீசணும்னு... வீசலே...அதைத் துரத்தணும்னு... தான் போட்டேன்... சீசர்... நகர்ந்து... அது மேலே... தடி... பட்டு... ராஜா... இதுக்கு... நா.... என்னடா... பண்ணுவேன்...''

''...''

''ராஜா... டேய்... பேசுடா... எனக்கு எப்படி மன்னிப்புக் கேட்கிறதுன்னே... புரியலையடா...

தன் கைகளைப் பிடித்து அழுது கொண்டிருந்த அவரின் கைகளை 'வெடுக்'கென்று உதறி விட்டு, ஆத்திரத்துடன் கையிலிருந்த அந்தத் தடியை, வீசி எறிந்து விட்டு மெதுவாக வெளியேறினான் ராஜா.

அவனைக் கூப்பிட முயன்று, வார்த்தைகள், தொண்டையிலிருந்து எழும்ப மறுக்க, அப்படியே நிலைகுலைந்து நின்றார் சாம்பசிவம்.

''சார்! இன்றைக்குப் புதுப்பாடம் நடத்தறேன்னு... சொன்னீங்களே!''... ஞாபகப் படுத்தினான் முதல் பெஞ்சிலிருந்த சோமு.

அவருடைய மனம் அவருடன் ஒத்துழைக்க மறுத்தது. ''இன்றைக்கு வேண்டாம்... வெறும் ரிவிஷனை மட்டும் வைச்சுக்குவோம். சரி... எந்தப் பாடம்...''

''இங்கிலீஷ் நான்டி—டெய்ல்... சார்'' அந்தப் பையன்கள் கோரஸாகக் கத்தினார்கள். அவருக்கு எரிச்சலாக வந்தது.

''உஷ்... சரி... சரி... கத்தாதீங்க...'' என்றபடி நடத்திய பாடங்களிலிருந்து கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

''ஹூ இஸ் அகஸ்டஸ்?''

''சார்... நான்... சொல்லட்டுமா...'' என்றபடி பல கைகள் உயர்ந்தன. எப்பொழுதும் முதலில் கையைத் தூக்கும் ராஜா வெற்றுப் பார்வையுடன், வெறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் அவர் உள்ளம் பொருமியது. சிரமப்பட்டுத் தம் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டார்.

''ஹூ கில்ட் ஜூலியஸ் சீசர்? சுந்தரம்?''

ராஜாவின் பக்கத்திலிருந்த சுந்தரத்தைக் கேட்டவுடன், எப்பொழுதும் போல், விழித்தபடியே எழுந்து நிற்க, அதை எதிர்பார்த்தவராய், ''நெக்ஸ்ட்... ராஜா...'' என்றார்.

ராஜா, மௌனமாக எழுந்து நின்றான், தலை குனிந்தபடி.

''ராஜா... உன்னைத்தான் கேட்கறேன், சொல்லு... ஹூ கில்ட் ... சீசர்!... வாயைத் திறந்து சொல்லேன்...''

''யு... யு... கில்ட் சீசர். நீங்க தான் கொன்னீங்க...'' அப்படியே உறைந்து போனார் சாம்பசிவம். மற்ற மாணவர்கள் எல்லோருமே திகைத்துப் போனார்கள்...

அடுத்த இரண்டு நாட்களாக ராஜா பள்ளிக் கூடத்துக்கு வரவில்லை. தவித்துப் போனார் சாம்பசிவம். ஒரு வேளை தம் மேல் இருக்கும் ஆத்திரத்தை இப்படிக் காட்டுகிறானோ என்று கூட நினைத்தார். எதுவுமே புரியாத குழப்பங்களுடன், நேரிலேயே போய்ப் பார்த்தாலென்ன என்ற முடிவுடன் ராஜாவின் வீட்டை நோக்கி நடந்தார்.

வீட்டுக்குள் பேச்சுச் சத்தம் கேட்கவே தயங்கி நின்றார்.

''இதைப் பாரு ராஜா... இப்படி நீ வருத்தப் பட்டுட்டே இருந்தா சீசர் திரும்பி வரும்னு சொல்லு... நாங்களும் சேர்ந்து அழறோம்... என்ன...?''

சாம்பசிவத்திற்குக் கண்கள் கலங்கின. தயங்கியபடி உள்ளே நுழைந்தார். திரும்பிய ராஜாவின் அப்பா, சாம்பசிவத்தைப் பார்த்தவுடன் ஒருகணம் வியந்து போனார்.

''என்ன சார்... இது... அதிசயமா... திடீர்னு...?''

''சும்மாதான் வந்தேன். ராஜா வரல்லியே... அதான் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்...'' என்றார் சாம்பசிவம், தம் உணர்ச்சிகளை வெளிக்காட்டாதபடி.

''பாருங்க... சார், நீங்களாவது சொல்லுங்க... சீசர் காணாம போனதிலேயிருந்து, இவன் இப்படித்தான் சார்... சரியா சாப்பிடறதில்லே... ஸ்கூலுக்கும் ஒழுங்கா போறதில்லே... இவன் கூட பெரிய தொந்தரவாப் போச்சு சார்...'' சலித்துப் போன குரலில் சொன்னார் ராஜாவின் அப்பா.




மேலட்டை

சோலை மலரொளியோ நினது சுந்தரப் புன்னகைதான்!

வண்ணப் படம் எடுத்தவர்:
உத்ரா





ராஜா யாரிடமுமே சேகரைப் பற்றிய விஷயத்தைச் சொல்லவில்லை என்று தெரிந்ததும் மனம் நெகிழ்ந்து போனார் சாம்பசிவம்.

''ராஜா... ராஜா...''

கம்மிப் போன குரலில் உணர்ச்சியுடன் சாம்பசிவம் கூப்பிட்டவுடன் வெற்றுப் பார்வையுடன் நிமிர்ந்து பார்த்தான். அந்த 'வெறுமை' அவரைத் தடுமாற வைத்தது.

''ராஜா... கொஞ்சம் வெளியே வர்றியா.. கொஞ்சம் பேசணும்... ப்ளீஸ் வர்றியா...''

அவர் வெளியில் செல்ல, மௌனமாக அவர் பின் சென்றான் ராஜா. சற்றுத் தூரம் வந்ததும், அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு அவனையே ஒரு கணம் பரிதாபமாகப் பார்த்தார் சாம்பசிவம். பின் தழு தழுத்த குரலில். ''டே...ய்... ராஜா... என்னை மன்னிச்சிடு... உன்னோட இந்த நிலைக்கு நான்தான்டா காரணம்! என்னை மன்னிச்சிடுடா... நடந்ததை எல்லாம், நீ யார் கிட்டேயும் சொல்லலைன்னு தெரியறப்போ... எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலைடா... ஆனா... அன்னைக்கு வகுப்பிலே ஏன்டா அப்படி நடந்திட்டே...?'' என்றார்.

''...''

''ராஜா... ஒரு விதத்திலே... நீ அப்படி பண்ணினது கூட பரவாயில்லே... நான்தான் உன் ஆத்திரங்களை வெளிக்காட்ட முடியாதபடி பண்ணிட்டேனே... ஆனா... அதுக்கப்புறமா... நீ இப்படி வராம இருக்கிறது...''

ஆத்திரத்துடன் கத்தினான் ராஜா.

''சார்! என்னை ஏன் இப்படி வதைக்கிறீங்க... என்னைக் கொஞ்சம் நிம்மதியாத்தான் இருக்க விடுங்களேன்... நான் வந்தா என்ன?...வராட்டி... உங்களுக்கென்ன?...''

அவனுடைய வார்த்தைகள், அவர் மனத்தில் இடியாய் இறங்க, கல்லாய் சமைந்து போனார் சாம்பசிவம். ராஜாவைப் பிடித்திருந்த கைகள் தளர்ந்து போய் விழுந்தன. பின் மெல்ல தம்மைச் சுதாரித்துக் கொண்டு, பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்தபடியே தளர்ந்த நடையுடன் திரும்பி நடந்தார் சாம்பசிவம். அவர் போவதையே வெறித்துக் கொண்டிருந்தான் ராஜா.

அன்று இரவு முழுவதும் ராஜாவுக்கு மனம் முள்ளாய் உறுத்த, தவித்துப் போனான். பிச்சை கேட்பது போல, பரிதாபமாகச் சாம்பசிவம் கெஞ்சிய வார்த்தைகள் அவன் மனத்தில் மீண்டும் எதிரொலித்தன.

அவர் அவனை பாசத்துடனும், பரிவுடனும் நடத்திய நாட்கள், அன்புடன் அவனுக்குச் செய்த உதவிகள்,பாடங்களில் சந்தேகங்களைத் தீர்த்து வைத்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் மனத்தை உலுக்கின...

நினைத்துப் பார்க்கப் ... பார்க்க... தான் ரொம்பவும், கொடூரமாக, நன்றி உணர்வே இல்லாமல் நடந்து கொண்டதைப் போல அவனுக்குத் தோன்றியது.

அடுத்த நாள் காலை.

பள்ளிக் கூடத்துக்கு வந்ததும், அங்கங்கே மாணவர்கள் கும்பல் கும்பலாக நின்று பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் ராஜாவுக்கு என்னமோ போலிருந்தது... அவசரம் அவசரமாக 'ஆசிரியர்களின் அறை'க்குப் போய்ச் சாம்பசிவத்தைத் தேடினான். அங்கே இல்லை. குழப்பத்துடன் பல இடங்களில் தேடியும் அவரைப் பார்க்க முடியாமல் போகவே, என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. எதிரில் வந்த வரதனிடம் கேட்டான்.

''வரதா... நம்ப 'சாம்பசிவம் வாத்தி யாரைப் பார்த்தியா?...

''அடேடே!... உனக்கு இன்னும் விஷயம் தெரியாதா?... உன் புருட்டஸ் வேலையை ராஜினாமா செய்துட்டுப் போயிட்டாராம்..''

அதிர்ந்து போனான் ராஜா.

''என்னது... என்னடா... சொல்றே?'' வார்த்தைகள் தட்டுத்தடுமாறி வந்தன...

''ஆமான்டா... உன் புருட்டஸ் தான்... போயாச்சு!... பசங்க எல்லாம் கும்பல்... கும்பலா நின்னு... பேசிட்டு இருக்காங்களே... தெரியலையா? ராஜினாமா செய்துட்டு ஊருக்கே போயிட்டாராம்...'' என்று வரதன் சொல்லி விட்டுப் போன பின்பும், நம்ப முடியாமல், உடைந்து நொறுங்கிப் போன மனத்துடன், கலங்கிய கண்களுடன் அப்படியே நின்று கொண்டிருந்தான் ராஜா.

ஜெயகாந்தன்

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

10. அவ்வையம்மாளின் நியாயங்கள்

பொன்னம்மாள் இதையெல்லாம் கேட்டு மனத்துள் அதிர்ந்து போனாள். 'போயும் போயும் இப்படிக் கெட்டழிகிற ஒருவனுக்கா தன் மகளைக் கொடுக்க வேண்டும்?' என்று அவள் வருந்தினாள். தன் மாமியார் அவ்வையம்மாள் சொல்லுகிற நியாயங்களும் சரிதானா என்று அவளது தாயுள்ளம் பரிசீலித்தது.

காந்திமதிக்கு இரவெல்லாம் இன்று தூக்கம் வராது. பொன்னம்மாளிடமும் அவ்வையம்மாளிடமும் தனியாகப் பேசிக் கொள்ளலாம் என்று நினைத்துத் தற்போதைக்கு மௌனமானாள். அதற்கு மேல் நம் வீட்டு நகையை யாரைக் கேட்டு அந்த வெள்ளையம்மாளுக்கு வெகுமானம் வழங்கினானாம் இந்தச் சிங்காரம்? அதைப் பற்றியும் தம்பியிடம் பேசி நல்லதனமாக அவனை வழிக்குக் கொண்டுவந்து அந்தச் சங்கிலியைத் திரும்ப வாங்கி விடவேண்டும் என்று மனத்துள் தீர்மானித்துக் கொண்டாள் காந்திமதி.

இந்தக் கப்பல்காரியை நம்பிச் சிங்காரத்தை விட்டது தான் தப்பு. அவள் அவனைச் சரியாகக் கவனிக்காமல், கண்டிக்காமல், செல்லம் கொடுத்துக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டாள்... அதனால் தான் இந்த நிலைமை — என்று அந்த மகாசபை இறுதியில் ஏகமனதாய்த் தீர்மானம் செய்தது.

கோதை வாசலுக்கும் கூடத்துக்கும் அமைதியில்லாமல் நடந்து கொண்டிருந்தாள். சிங்காரத்தைப் பற்றி அவள் கேள்விப்படுவதை யெல்லாம் நம்பவே முடியவில்லை.. சற்று முன் காந்திமதி வந்து இவளிடம் சண்டை பிடிப்பது மாதிரி சிங்காரத்தின் நடவடிக்கைகளை விவரித்து, 'இதெல்லாம் தெரிந்து கொள்ளாமல் நீ என்ன பிள்ளை வளர்க்கிறாய்?' என்று குற்றம் சாட்டிவிட்டுப் போனாள்.

சிங்காரத்தின் கூடப் பிறந்தவர்களே அவனைப் பற்றி இவ்வளவு தூற்றலாகப் பேசுவதை என்ன உரிமை கொண்டு தான் தடுக்க முடியும் என்று நினைத்தபோது தனது நிராதரவான நிலைக்காகவும் கோதையின் மனம் வருந்தியது.

என்ன இருந்தாலும் சிங்காரத்துக்கும் வெள்ளையம்மாளுக்கும் உள்ள உறவை இவர்கள் இவ்வளவு கேவலமாகச் சித்திரிப்பதைக் கோதை மனம் தாங்கவுமில்லை; நம்பவுமில்லை. எல்லாவற்றைப் பற்றியும் உண்மையான விளக்கத்தை விளக்குச் சாமியாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று ஒரு மணி நேரமாய் அவரைத் தேடுகிறாள்; அவரைத்தான் வழக்கம்போல் காணவில்லை.

எங்கே போனார் இந்தச் சாமியார்? தோப்புக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்த முருகேசன், 'அவரைக்காணோம்' என்று வந்தான்.

''சிங்காரம் இப்பல்லாம் அக்கரைப் பக்கம் போறதில்லையே?'' என்று முருகேசனை விசாரித்துக் கொண்டே கூடத்தில் கிடந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து விசிறிக் கொண்டாள் கோதை.

''இல்லீங்கம்மா.... நாளு பூராத் தோப்பிலேதானே இருக்காரு!... எனக்கே ஆச்சரியமா இருக்குது. இப்ப எவ்வளவு பொறுப்போடு இருக்காரு நம்ம சிங்காரம் பிள்ளை? ஏம்மா நம்ப பொன்னம்மாவோட பொண்ணையா சிங்காரம் பிள்ளைக்குக் கட்டப் போறீங்க? சவாக!.... நல்லா இருக்கும்... அப்பறம் பாருங்களேன் நம்ப சினுக்கு எப்பிடி மாறிப் போயிடுறாருன்னு....'' என்று உற்சாகமாகக் குதித்துச் சொல்லிக் கொண்டு போனான் முருகேசன்.

''என்னப்பா முருகேசா! ரொம்பக் குமாளமா இருக்கே.... என்ன விசேஷம்?'' என்று எதிரில் வந்த தம்மீது மோதிக்கொள்வது போல் ஓடிய முருகேசனை அதட்டிச் சிரித்துக் கொண்டு விளக்குச்சாமி வந்தார்.

''எங்கே சாமி போயிடுவீங்க திடீர் திடீர்னு'' என்று கேட்டாள் கோதை.

''எனக்கு என்ன வேலை இல்லையா? அதெல்லாம் முந்திக் காலம் அம்மா.... சாமியாரைச் சும்மா உக்காத்தி வெச்சிப் பேசிக்கிட்டு இருந்தாரு பெரியவரு. இப்ப வர வர நம்ப சினுக்கு என்னை எம்மாம் வேலை வாங்குறாரு தெரியுமா? வாய்க்கால்லே ஊறப்போட்டிருக்கிற மட்டைங்களை எடுத்து வெளியே போடுன்னு வந்து நின்னுக்கிட்டாரு. எல்லாரும் வேலை செஞ்சிக்கினு இருக்கிறப்ப— அவருதான் எசமான், இடுப்பிலே கையை வளிச்சிட்டு நிப்பாரு — நாம்பளும் அப்படி நின்னுக்கிட்டு இருந்தா பாக்க நல்லா இருக்குமா? ஆளுங்களோட சேர்ந்து நானும் முழங்கால் தண்ணியிலே நின்னு வேலை செஞ்

சிட்டு வரேன்...'' என்று சிங்காரத்தைப் புகழ்ந்து கொண்டே தூணடியில் சாய்ந்து உட்கார்ந்தார் சாமியார். மடியிலிருந்து இரண்டு வெங்காயத்தை எடுத்து உரித்துக் கொண்டே ''எம்மாடி! ஒரு கை அரிசி குடுக்கச் சொல்லு'' என்று உத்தரவு போட்டுக்கொண்டு உள்கட்டுப் பக்கம் திரும்பி, ''யாரும்மா அது அடுப்பங்கரையிலே? ஒரு கை அரிசி கொண்டாறியா?'' என்று குரல் கொடுத்தார்.

பின்கட்டிலிருந்து ஓர் உழக்கில் கொஞ்சம் அரிசி எடுத்துக் கொண்டு வந்தாள் முருகேசனின் மனைவி. அவள் வந்து போகும் வரை விசிறியால் விசிறிக் கொண்டு தன் மனப் புழுக்கத்தை ஆற்றிக் கொண்டு மௌனமாயிருந்த கோதை அவள் தலை மறைந்த பிறகு குரலைத் தாழ்த்திக் கொண்டு சாமியாரிடம் கேட்டாள்.

''என்ன சாமி, மனுஷாள் இப்படி இருக்காங்க?... கூடப் பொறந்தவனை தம்பியைப் பத்தி இப்படித் தூக்கினா நமக்கெங்கே சாமி வாய் வருது 'அப்படியெல்லாம் இல்லே'ன்னு சொல்ல? ஏன் சாமி? நான் வளர்த்த குழந்தை தான் சிங்காரம். ஆனாலும் தோளுக்கு உயர்ந்தவன் தோழன்னு சொல்லுவாங்க— அந்த மாதிரி இப்ப அவன் பெரிய ஆம்பிளை ஆயிட்டான். அதனாலே என்ன சாமி— புத்தி கெட்டா போகும்?.... உங்களைக் கேட்டால் எல்லா உண்மையும் தெரியுமோன்னுதான் கேக்கறேன். சொல்லுங்க சாமி. சிங்காரம் கெட்ட பையனா?'' என்று கேட்டு விட்டு, மௌனமாக அவர் யோசிக்கும் கணங்களைப் பொறுக்க முடியாத அவசரத்துடன் சொன்னாள்: ''கொஞ்ச நாழிக்கு முன்னே காந்தி வந்து சொல்ற அபமாண்டத்தை யெல்லாம் நல்லவங்களாலே காது கொடுத்துக் கேட்க முடியாது. வெள்ளையம்மாளுக்கும் சிங்காரத்துக்கும் முடிச்சுப் போட்டுச் சொல்றாங்களே! சொல்லுங்க சாமி, உங்களுக்கு எதுவும் தெரியாமலிருக்காது.''

''ஓர் அளவுக்கு மேல் இருந்தா எதையும் அப்பிடித்தான் சொல்லுவாங்க. சரி அதெல்லாம் பழைய கதை. இப்ப சிங்காரம் அக்கரைப் பக்கமே போறதில்லையே! ஆச்சு, மூணு மாசம். சித்திரை, வைகாசி, ஆனி... நம்ம வூட்டு இளைய ராணிக்குக் கல்யாணம் ஆன கையோட அக்கரைக்குப் போற வழக்கத்தை நிறுத்திட்டுதே தம்பி!'' என்று நாட்களை எண்ணிச் சரியாகக் கணக்குச் சொன்னார் சாமியார்.

''என்ன சாமி, ஆச்சரியமா இருக்கே... ம்.... அந்த வெள்ளையம்மாளுக்கு என் வயசு இருக்காது?.... அவளைப் போயிச் சொல்றாங்களே! சிங்காரத்தை அவ புள்ளை மாதிரி நினைக்கிறா. இது அவ காதிலே விழுந்தா? பாவம்! நம்ப வூட்டுப் பொண்களைப் பத்தி அவ என்ன நினைப்பா? அவ நினைக்கறது இருக்கட்டும். இவளுக என்ன பொம்பளைங்க! தூ! '' என்று மனம் குமட்டிக் கொண்டு அங்கலாய்த்தாள் கோதை.

''என்னமோ முக்கிய சமாசாரமாப் பேசிக்கிட்டு இருக்காப்பிலே இருக்கு. வரலாமில்லே?'' என்று அவ்வையாரம்மாளின் குரல் வாசற்புறத்திலிருந்து ஒலித்தது. முழங்காலின் மீது ஒரு கையை ஊன்றி இன்னொரு கையால் இடுப்பைத் தாங்கிக் கொண்டு படியேறி வந்து கொண்டிருந்த அவ்வையம்மாளைப் பார்த்து ''வாங்க வாங்க. நீங்க இல்லாமல் முக்கிய சமாசாரம் என்ன



பேசப் போறேளும்?'' என்று சம்பந்திக் கிழவியை மரியாதையுடன் வரவேற்றுச் சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்தாள் கோதை.

''நீ உக்காரம்மா.... சும்மாத்தான் வந்தேன்'' என்று சொல்லிக் கொண்டு சுவரோரமாயிருந்த பலகையொன்றை இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள் கிழவி.

இந்தச் சாமியார் போகட்டும் என்பது போல், வந்து உட்கார்ந்து வாயைத் திறக்காமல் அவள் காத்துக் கொண்டிருப்பதைக் கவனித்த சாமியார், தமது வழக்கப்படி சொல்லிக் கொள்ளாமல் இடத்தைக் காலி பண்ணினார். போகும்போது உழக்கிலிருந்த மீதி அரிசியை மடியில் கட்டிக் கொண்டார். அதைக் கவனித்தவாறு மோவாயில் கை யூன்றி உட்கார்ந்திருந்த கிழவி சாமியார் போனதும், ''இந்த மாதிரி மருடேசன் வீட்டுப் பிள்ளை சொத்தெல்லாம் வெந்தது பாதி வேகாமல் பாதி தின்னு தீர்த்துக்கிட்டு இருக்காங்களே!.... இது கெடக்கு ஆழாக்கு அரிசி என்ன பிரமாதம்... அதுக்குச் சொல்லலே... எல்லாத்தையும் நம்பிப் பெரியசாமி கிட்ட அந்த மனுஷன் விட்டுட்டுப்போனப்பவே நான் நெனைச்சேன்.... இப்பிடித்தான் ஆகும்னு.... நாம என்ன பண்ண முடியும்? சிங்காரம் விளையாட்டுப் பிள்ளைதானே!... உனக்குத் தெரியுமா அம்மா?... சிங்காரம் வெள்ளையம்மாளுக்கு அம்பிகை அம்மா கழுத்திலே கிடந்த சங்கிலியை எடுத்துத் தானம் குடுத்துட்டானுமே...'' என்று சொன்னதும் கோதை இடைமறித்தாள்.

''இல்லே இல்லே... அது சிங்காரத்துச் சங்கிலிதான். அவன் கழுத்திலேதான் எனக்குத் தெரிஞ்ச நாளாகக் கிடக்குது—'' என்றதும், 'உனக்கு ரொம்பத் தெரியுமோ?' என்பது போல் கிழவி உதட்டைப் பிதுக்கிச் சிரித்தாள்.

''யாரு கழுத்திலே கெடந்திருந்தா என்ன? ஆக மொத்தம் மருடேசன் பிள்ளை வீட்டுப் பொருளு இப்படி மாளுவாரியாப் போகுது.... அது கெடக்கட்டும். இந்தப் பெரியசாமி இருக்கானே—'' என்று சொல்லிக் குரலை ரகசிய ஸ்தாயியில் இறக்கிக் கொண்டு மீதியைச் சொன்னாள்: ''அந்தத் தாசி வீட்டுக்கு வண்டி வண்டியா நெல்லும் தேங்காயும் அனுப்பறான். தோப்பிலேருந்து போறபோது தேங்கா வித்த பணத்தையெல்லாம் மூட்டையாக் கட்டிக்கிட்டு அவ வீட்டுக்குத்தான் போறான். இப்பல்லாம் இந்த வீட்டிலே அவன் தங்கறதே இல்லே. பாவம், அந்த மங்களம் பொண்ணு எப்பவும் போல மாடா உழைச்சிக்கிட்டிருக்கு.... அது போவட்டும், நமக்கென்ன? நான் சொல்ல வந்தது என்னன்னா, சிங்காரத்துக்கு அமுதுவைக் கட்டி வைக்கணும்னு பேசிக்கிறாவ... நாம்ப யாரும் அதைத் தடுக்க முடியாது.... அது நல்லதுதான்.... ஆனா அதுக்கு முன்னாலே செய்ய வேண்டியதை ஒழுங்காச் செய்துடணும் இல்லே! சிங்காரத்துக்கு அவன் சொத்தையெல்லாம் ஒப்புத்துக்க வேண்டிய வயசு வந்தாச்சு. பெரியசாமி அதையெல்லாம் ஒப்படைக்க வேண்டியதுதான். நான் கேக்கறது என்னன்னா, இந்த ஆறு ஏழு வருஷமா அதுலேருந்து வந்த வருமானத்துக் கெல்லாம் ஜாடா ஒரு கணக்குப் போட்டு வள்ளிசாக் குடுப்பானு பெரியசாமி? இல்லே அவன் வைப்பாட்டிதான் குடுக்க விடுவாளா?.... இந்த நிலைமையிலே அமுதுவை இன்னொரு மங்களமாக்கிவிடப் பாக்கி நீங்களான்னு கேக்கறேன்.... நான் கேக்கறது தப்புன்னு சொல்லம்மா'' என்று ஒரு பாரதப் பிரச்னையைத் தொடங்கி வைத்தாள் அவ்வையாரம்மாள். அவளது கவலையில் ஆழ்ந்துள்ள நியாயங்களைக் கோதையும் யோசித்தாள். (தொடரும்)

தர்மசங்கடம் தம்பு!



கண்ணதாசன்



நீதிகேட்கிறேன்

விலைவாசி ஏறாத நாடொன்று கூறுவாய்
விரைவில்நான் செல்ல வேண்டும்
வீராப்புப் பேசாத அரசியலைக் காட்டுவாய்
வேதமாய் ஆக்க வேண்டும்
கொலைகாரர் இல்லாத ஊரொன்று சொல்லுவாய்
குடியேறிப் பார்க்க வேண்டும்
குடியைக் கெடுக்காத அரசொன்று கூறினால்
கோஷத்தில் வாழ்த்த வேண்டும்.
சிலைவைக்க இந்நாட்டில் இடமொன்று காட்டினால்
சேவைக்கு வைக்க வேண்டும்
சிரித்துக் கெடுக்காத நபரொன்று தோன்றினால்
தினமும் வணங்க வேண்டும்
மலையோடு நதிகளும் வாழ்கின்ற நாட்டிலே
மனிதத் துவங்க விலையே
மாபெரிய மதுரைநகர் ஆள்கின்ற தேவியே
மங்கைமீ னாட்சி உமையே!

பொய்வாழ்க்கை வாழ்கின்ற போலிகள் வாழ்விலே
புகழ்கூட வருகின்ற தே
பூட்டைத் திறக்காமல் வீட்டுக்குள் நுழைவார்க்கும்
புதுவாழ்வு கிடைக்கின்ற தே
கைபோட்ட இடமெலாம் காசையே பார்ப்போரை
கலைவள்ளல் என்கின் றதே
கண்ணீரில் பெண்வாழ்வைக் கரைந்தோட விடுவார்க்குக்
கைலாகு தருகின்ற தே
செய்யாத குற்றங்கள் செய்வார்க்கு எந்நாளும்
செல்வங்கள் வளர்கின்ற தே

தேரோட்டத் தெரியாத முட்டாள்கள் பலருக்குக்
காரோட்டத் தெரிகின்ற தே
மைவார்த்த கண்ணோடு கைகோர்த்த சொக்கனை
மடிவார்த்த வண்ண மயிலே
மாமாயக் கண்ணனவன் பாசமிகும் தங்கையே
மதுரைமீ னாட்சி உமையே!

கடுகளவும் குறையிலா ஸ்ரீராமச் சந்திரன்
கானகம் போன தென்ன
கருணைஇலா ராவணன் தவம்செய்து தவம்செய்து
கயிலையை வென்ற தென்ன
கொடுமைகளின் மன்னர்கள் நாடாளு வோர்களாய்
கொட்டம் அடித்த தென்ன
கோடையினில் வருகின்ற புயலொன்று தான்வந்து
கொடுமை அழித்த தென்ன
ஆடைஇலா நாள்முதல் அறிவார்ந்த நாள்வரை
அநியாயம் வென்ற தென்ன
அநியாயக் காரர்கள் சரியான நேரத்தில்
அடியோடு சாய்ந்த தென்ன
வாடைமலர்க் கூந்தலில் வண்ணமணிச் சொக்கனை
வளைத்தாளும் வண்ண மயிலே
வடமதுரைக் கண்ணனெனும் தருமதுரை தங்கையே
மதுரைமீ னாட்சி உமையே!



பர்வதவர்த்தனி



பாரம் சுமக்கிறவர்கள்

ஜங்ஷனுக்கு முந்தின சிறு ரயிலடி. அங்கே ரயில் நிற்கவே முகாந்திரமில்லே. ஆனல் நின்றது. நிறைய பேர் வேகமாக இறங்கி விட்டார்கள்.

உட்கார்ந்த இடத்திலிருந்து ஜங்ஷனே ஒருமுறை எட்டிப் பார்த்தாள் பானு. டிரைவர் மாதிரிதானிருந்தது. அவரும் கீழே யிறங்கி நின்றிருந்தார். 'ஒரு வேளை... கார்டும் நிற்கிருரோ' என்று திரும்பிப் பார்க்க மனம் கருதினலும், அவள் திரும்பிப் பார்க்கவில்லே. அவரும் நின்றிருப்பார்.

ஏறத்தாழ அனேவருமே இறங்கி விட்டார்கள். யாரோ ஒருவன் எதிர் பெஞ்சில் புகைத்துக் கொண்டிருந்தான். பானுவை அவன் பொருட்படுத்தவேயில்லே.

மேலேயிருந்த தன் சிறு பெட்டியைத் தூக்கி மடி மீது வைத்துக் கொண்டாள் அவள்.

சில குதிரை வண்டிக்காரர்களும், சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் சிலரும் ஒவ்வொரு பெட்டியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''ஜங்ஷனுக்கு வண்டி போகாது. எல்லோரும் இறங்கணும்.''

யாரோ ஒரு வண்டிக்காரன் சொன்னதும் எதிரே உட்கார்ந்திருந்த ஒரே ஆசாமியும் கேள்வியேதும் கேளாமல் மிக அமைதியாக எழுந்து கீழே போனன்.

பானுவும் மெல்ல எழுந்தாள்.

ஒரு சமயம் கல்லாய்க் கனத்த மனம், மற்ருெரு நேரம் அணுவாய் மிதந்தது.

படியருகே நின்று எட்டிப் பார்த்தாள்.

அனேவருமே வெளியே போய் விட்டிருந்தார்கள்.

வாலிப முறுக்குடன் ஒருவன் அவளருகே வந்து நின்று பெட்டியை வாங்கக் கையை நீட்டினன். பானு கையை இழுத்துக் கொண்டாள்.

''லக்கேஜ் இல்லாத சவாரி கெடைக்குமான்னு காத்திட்டிருந்தேன். நல்லவேளே, நீங்க வந்தீங்க!''

பானு சிரித்தாள். அவளேக் கூட வரவேற்க ஓர் ஆள்! பேஷ்!

''ஜங்ஷன் வரை டிக்கட் எடுத்திருக்கேன். இங்கே காட்டிட்டு வெளியே போகலாமா?''

''எங்கிட்டே பெட்டியைக் குடுங்க. ஒங்களே யாரும் டிக்கட்டே கேக்க மாட்டாங்க!''

''ஆளுக் காசு வாங்காமல் சவாரி இட்டுக்கிட்டுப் போக ஆள் வேணும். எங்கிட்டே காசில்லே!''

''மொதல்லே வண்டியைவிட்டுக் கீழே யிறங்கி வாங்க.'' பானு இறங்கினள்.

அவன் வெளியே போவான் என்றுதான் நினைத்தாள். ஆனல் காலியாகக் கிடந்த மரத்தடி பெஞ்சுக்குப் போனன் அவன். சிறு தயக்கத்துடன் அவளும் பின்னே சென்ருள்.

''எந்த ஊர்?''

''எதைச் சொல்றது?''

''பொறந்தஊர்? இங்கே எங்கே போகணும்?''

''ஜங்ஷனுக்குப் போனலே எங்கே போறதுன்னு எனக்குத் தெரியாது. எப்படியோ... புலிக்குப் பயந்து நெருப்பிலே விழறவபோல இங்கே வந்துட்டேன்.''

''நல்லாப் பேசறே?''

''இந்த வாயை வச்சுக்கிட்டுப் பொழைக்க முடியாதே?''

ரயிலடி கிளப்பிலிருந்து தேநீர் வாங்கி வந்தான் அவன்.

''இன்னும் பல்லே வெளக்கல்லே.''

''பரவாயில்லே குடி.''

அவள் அதை வாங்கிக் கொண்டாள்.

''ஒன்னேப் பார்த்தா வாழ்க்கையிலே வழிதவறி ஓடிவந்தவளேப் போல் இருக்குது.''

''அந்தத் தப்பை இது வரை செய்யலே. நடந்துடுமோன்னு கவலேயாயிருக்கு. நடந்தா என்னன்னு துணிச்சலாவுமிருக்கு.''

தேநீரை உறிஞ்சியவாறே அவள் பேசிய போது அது மூக்கில் ஏறியது.

அமேசான் நதி கடலில் சங்கமமாகிற முகத்துவாரத்திலிருந்து நூறு மைல்கள் வரை கடலில் நல்ல தண்ணீர் பரவியுள்ளது. அமேசானின் தண்ணீர் அவ்வளவு வேகமாகப் பாய்கிறது. அதுவரை கடல் நீரைக் குடிக்க முடியும்!

—பி. நாராயணன்.

''யாரோ நெனைச்கக்கறுங்க.''

''வீட்டிலே ஆத்தாக் கெழவிதான். போது விடிஞ்சி பாயைப் பார்த்துட்டு ஒப்பாரி வைக்குதோ என்னவோ? அவ கட்டிக்கலாம்... அந்த வயசுக்குள்ள ஒரு கெழவனைக் கட்டிக்கோன்னு பலவந்தப் படுத்துது. சோத்துக்கில்லேதான். அதுக்காக?''

''துணிச்சலா சொல்லி ஏதாவது வேலைக்குப் போறது?''

''என்ன வேலை கெடைக்கும்? நான் படிச்ச படிப்பு மூணு கிளாஸ்.''

''வயித்தைக் கழுவிக்க வேலைக்குப் பெரிய படிப்பெல்லாம் வேணும்மா.''

''நல்லா புத்தி. இந்த ரயில் நீளத்துக்குச் சொல்றே. ஒன்னையே எடுத்துக்க. நல்லாப் படிச்சிருந்தேன்னு. இந்த வேலைக்கு... ரிக்ஷா இழுக்க வருவியா?''

சிரித்தான் அவன்.


''சரி. கெட்டும் பட்டணம் சேர்னு சொன்னுங்க. நீ யென்னடான்னு கெட்டுப் போக வந்துட்டியாக்கும்?''

மௌனமாக இருந்தான் அவன்.



கிரிக்கெட் கற்கலாம்! 37

கோச்: கே. சந்திரசேகர்
படம்: ராஜ்.. தலைப்பு: குண்டுமணி



''நான் சொல்றதைக் கேள். நீ செய்துட்டு வந்திருக்கிற ஒரு முடிவிருக்கே, இது தற் கொலைக்குச் சமானம்.''

''...''

''இதைவிட உள்ளூர் குளத்திலேயே எறங்கியிருக்கலாம்.''

''நான் கோழையில்லே.''

''நிச்சயம் கோழைதான். இத்தனை பெரிய உலகத்திலே பொழைக்க வழியில்லேன்னு நீயா ஒரு முடிவெடுத்து இந்தத் துணிச்சல்லே வந்தியே? நீ பெரிய கோழைதான்.''

''நீ ஒரு பொண்ணாயிருந்தா என்ன செய் திருப்பே?''

''நிச்சயம் ஒன்னை மாதிரி செய்ய மாட் டேன். உங்காத்தா கிட்டே சொல்லி வீட்டி லேயே ஒரு இட்லி கடை போடச் சொல்லு. வியாபாரம் பண்ணு. கல்யாணம் செய்துக்க விருப்பமில்லேன்னு அடிச்சுப் பேசு. ஒங்க ரெண்டு பேர் வயித்தைக் கழுவ அந்த வியா பாரம் போதுமே?''

''இந்த மாதிரி ஆலோசனை சொல்றவங்க யாருமே இல்லாததால் தான்... இப்படித் தப்பா முடிவெடுத்து ஓடி வந்துட்டேன்!''

சிரித்தான் அவன்.

''அப்போ எதிர் வண்டியிலே ஊருக்குப் போறயா?''

''போயிடறேன்.''

''எந்த முடிவையும் அவசரப்பட்டு எடுக் காதே. யோசனை செய்து சொல்லு.''

''ஒண்ணு சொல்றேன்... ரொம்ப யோசிச் சுத்தான் கேக்கறேன். நீ வாழ்வு குடேன் எனக்கு?''

''நான் ரிக்ஷாக்காரன். ஊர்லேந்து ஓடி வர ஒவ்வொரு பொண்ணுக்கும் வாழ்வு தந்திட்டிருக்க முடியுமா?''

''அப்படியில்லே... நீ ஒரு ரிக்ஷாக்காரன் போலவே என் கிட்டே பேசலே?''

''...''

''ஒம் பேரென்ன?''

''பேரா? கிருஷ்ணன். காலேஜ் போய்ப் படிச்சேன். பட்டம் வாங்கிக்கிட்டு வெளியே வந்தேன். வயித்துப் பொழப்புக்கு வேலை கெடைக்கலே. அலைஞ்சேன். இந்த மாதிரி தான் ரயிலேறி வந்து இந்த ஊர்லே எறங் கினப்போ, ஒரு பெரிய மனுஷனைச் சந்திச் சேன். பாங்க் ஒண்ணிலே ஜாமீன் போட்டுக் கடனுக்கு ரிக்ஷா வாங்கித் தந்தாரு. பெரிய கவுரவமா அதை மதிச்சி... ஏறத்தாழக் கடனெல்லாம் அடைஞ்சிட்டுது. இப்போ சீக்கிரமே நான் ரிக்ஷா ஓனர்!''

''நீ உண்மையிலேயே ஒரு லட்சியவாதி!''

''பைத்தியம். பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதே. ஒழைக்கத் தெரிஞ்சவனுக்குப் பொழைக்க முடியாதுன்னே இல்லே.''

''நெஜம்தான். நானும் பி. யூ. சி. வரைக் கும் படிச்சவதான். வறுமை. அதுக்குமேலே போக முடியலே!''

''மூணு கிளாஸ்னு சொன்னே?''

''சும்மாச் சொன்னேன். அது கெடக்கட் டும். நான் கேட்டது?''

''அதுவா? அதைப் பத்தி இப்போ ஒண்ணும் சொல்றதுக்கில்லே. மொதல்லே எனக்குத் தொழில் நிரந்தரமாகட்டும். மற்றதெல்லாம் ரெண்டாம் பட்சம். நீ உன் விலாசத்தைக் கொடுத்துட்டுப் போ. ஒரு ஆறு மாசம். அதுக்குள்ளே ஒன் இட்லி வியாபாரம் பெரிசாயிடும்.''

பயணச் சீட்டு வாங்கி அவளிடம் கொடுத்து அவளை ரயிலில் ஏற்றியதும் அவன் கேட்டான்.

''சொன்னதெல்லாம் நினைவிருக்குமா?''

''எல்லாமே நினைவிருக்கு. நிச்சயம் நீங்க வருவீங்கன்னு நம்பறேன்.''

''நம்பிக்கைதான் வாழ வழிகாட்டி.''

''கிழவி அடிக்கக் கடிக்க பண்ணினால் நான் திரும்ப வந்துடுவேன். உன்னோட அட்ரஸ்?''

வண்டி கிளம்ப மணியடித்ததும் அவள் கேட்டாள். ஒரு கணம் அமைதியாகவே இருந்தான் அவன். திடீரென்று –

''சீக்கிரமாக் கீழே எறங்கு. நீ திரும்பிப் போனா உருப்பட மாட்டே. இங்கேயே உன் இட்லிக் கடையைப் போடு. உன் கிழவிக்கு அப்பாலே தபால் போட்டுக்கலாம்...''

பெட்டியைத் தூக்கிக் கொண்டான் கிருஷ்ணன்.

தன் மனம் சுமந்த பாரத்தையும் அவன் மீதேற்றிய அவள், பின்னால் நடந்து கொண்டிருந்தாள்.



உபகாரம் பண்ணும் ஆகாரம்

மதுரையிலுள்ள என் நண்பன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவன் கவிதைப் பற்றுடையவன். வீட்டு வாசல் கதவின் மேல்

'வேலிபோல் கதவு அடைத்திருந்தால்
'காலிங் பெல்லை' அழுத்தி அழை'

என்று எழுதியிருந்தான். மேலும் சில:

வரவேற்பறையில் :

'இல்லவள் மாண்பினால் இனிப்பு கூடின்
நல்லவள் யாளுள்ளேன் காரம்தர'

சமையலறையில் :

'காரம் குறைத்த ஆகாரம் அதுவே பெரிய உபகாரம்.'

படுக்கையறையில் :

'சமத்துவங்கள் ஒப்புக்கொள்ளப் படும் சயனஅறை'

தகவல்: ரவிராஜ்.

கனவா-நிஜமா? 23

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




ஆச்சரிய மிகுதியால் 'அண்ணா....!' என்று கூப்பிட்ட குரலுக்கு அதைப் புரிந்து கொண்டு பதில் குரல் வரவில்லை. ஆனால் வேங்கை மார்பன் நிலை குலைந்து தன் குதிரையிலிருந்து கீழே விழுமளவுக்கு அவ்வளவு வேகத்துடன் வாள் அவனைத் தாக்கிக் கீழே தள்ளியது.
ஆ... ஹ்... ஹ்... ஹா....
வேங்கைமார்பன் படுகாயமடைந்து கீழே சரிந்ததும் அவன் குதிரை மீது தாவி ஏறிக் கொண்டது அந்த உருவம் — அடிமை.
எனக்கும் இந்தப் போருக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. ஆகவே நான் இங்கிருந்து விலகி வெகுதூரம் போகிறேன்.
மன்னர் வஜ்ரபாகு குதிரை மீதேறிப் போர்க் களத்திலிருந்து வெளியேறிச் செல்வதையும், வேங்கைமார்பனைத் தாக்கியதையும் மாயர்புரி வீரன் ஒருவன் பார்த்து விடுகிறான். அவன் கை வில் வேகமாகச் செயல்படுகிறது.
தார்த்தாரியர்களை வெற்றி கொண்டார் அதிராமதேயர்.
அரசே! புறமுதுகிட்டு ஓடியவர்களைத் தவிரக் கைதியான தார்த்தாரியர்களை என்ன செய்யலாம்?
அவர்களின் ஆயுதங்களையும் குதிரைகளையும் பறித்துக்கொண்டு எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்து விரட்டி விடுங்கள். நான் இன்னும் ஒரு முக்கியமான காரியத்தை முடிக்க வேண்டியுள்ளது.
போர்க்களத்தின் மற்றோர் கோடியில் படுகாயமுற்ற வேங்கைமார்பருக்குச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறான் மல்லன்.
அண்ணா... அண்ணா...! நம் அரசரை எதிரிகளின் பாசறையில் பார்த்தேனே... அவர் என்னவானார்....
இளவரசே... அமைதியாக இருங்கள்... நம் மன்னரையா இங்கு பார்த்தீர்கள்? நீங்கள் ரொம்பவும் குழம்பிப் போயிருக்கிறீர்கள்
தொடரும்

அன்பைத்தேடி வம்பைவாங்கிறோம்!

● டைரக்டர் ராமண்ணா ''படத்தைப் பார்த்துத் திருந்துகிறான் மனிதன் என்பது நம்ப முடியாத ஒன்று. தவறான செய்கைகளையும் வன்முறைச் சம்பவங்களையும் சினிமாவில் பார்த்து மனிதன் கெடுவதும் இல்லை'' என்று கூறியுள்ளதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சென்ற வாரம் டி. வி.யில் காண்பித்த ''அன்பைத் தேடி'' படத்தில் ஒரு காட்சியில் சிவாஜி கணேசன் தன் வீட்டு டிரைவரையும், சமையற்காரரையும், ''ரத்தம் வரும்வரைக்கும் சுவரில் முட்ட வைப்பேன்'' என்று கூறி அவ்வாறே செய்கின்றார். அதைப் பார்த்து என்னுடைய வீட்டில் அப்பொழுது இருந்த மூன்று சிறுவர்களும் ஒவ்வொருவரும் மற்ற இருவரையும் பார்த்து, ''உங்களை இரத்தம் வரும் வரைக்கும் சுவரில் முட்ட வைப்போம்'' என்று கூறி அடித்துக் கொள்ள ஆரம்பித்தனர். இது போன்றே வயது வந்தவர்களும் சினிமா காட்சிகளைப் பார்த்து விட்டு அதுபோன்றே நடக்க முற்படுகின்றனர்.

சென்னை–17 ''மதுரை மணியன்.''

● 'ஒரு நக்ஸலைட்டின் வெற்றி' என்ற தலைப்பில் 'சுவர்க்க பூமி' எனும் நாடகத்தைப் பற்றி விமரிசனம் வந்துள்ளது. அந்த விமர்சனத்தைப் படித்ததும் அந்நாடகத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுகிறது. அந்நாடகம் மதுரைக்கு வருமா...?

'நாலு பேரிடம் நாலு நூல்கள்!' வித்தியாசமாகத்தான் எதையுமே செய்கின்றீர்கள். செய்ய நினைக்கின்றீர்கள். உங்கள் முயற்சி தொடர வாழ்த்துக்கள்.

ராஜ்பவனில் என்ன நடக்கிறது என்பதை கவர்னரது பேட்டியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

மதுரை சக்திநாயனார்

● 'நெருப்பினை நிலவென்றும் நீசனைத் தலைவனென்றும் கருப்பினை வெண்மையென்றும், கழுதையை யானையென்றும் கூறும் இந்தத் தேசத்தில் பிறந்தேன் பாவி' என்று ஆதங்கத்துடன் அரசவைக் கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ள கவிதையைக் கண்டேன். கண்ணீர் மல்கினேன்!

'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்' என்றும் 'ஏன் பிறந்தனன் இத்துயர் நாட்டிலே' என்றும் பாரதியார் துடிதுடித்துப் பாடியுள்ள பாடல் அடிகள் நினைவில் எழுந்தன!

பம்மல் வி. ச. வாசுதேவன்

● ''வியாசர்பாடி விபரீதம்'' படித்தேன். அடுத்த பக்கத்தைப் புரட்ட முடியாமல் என் கண்கள் கண்ணீரால் குளமாகியது.

செங்கோட்டை சீதாராஜன்

● 'நாலு பேரிடம் நாலு நூல்கள்' என்ற தலைப்பில் என்னுடைய படைப்பான சினிமா கைடு பற்றிச் சைதை சுந்தரேச குருக்கள் விமர்சித்திருக்கிறார். நன்றி. ஆனால் புத்தகத்தின் தலைப்பு தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சினிமா டைரி அல்ல. என்னுடைய புத்தகத்தின் பெயர் சினிமா கைடு.

நடிகர் நடிகைகளின் விலாசங்களைத் துருவி, துருவித் தேடிப் பிடித்து விலாசத்தை எழுதிய 'மை' காய்வதற்குள், அவர்கள் விலாசம் மாறிவிடுகிறார்கள். நடிக நடிகையர்களுக்கு விலாசம் தேவையில்லை. பெயர் எழுதி, சென்னை என்று எழுதினாலேயே போய்ச் சேர்ந்து விடும்.

சினிமா கைடு ரசிகர்களுக்கு ஒரு பஞ்சாங்கம் என்று பொருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு ஒரு சபாஷ். அவருடைய யோசனைகள் சில அடுத்துவரும் சினிமாகைடில் இடம் பெறும்.

சென்னை–17 அன்பு


● 'வேண்டாம் அணுகுண்டு' என்ற தலையங்கம் ஒப்பற்ற தலையங்கம்.


ஆழ்ந்த மனிதாபிமானம், அமைதிக்காகப் பாடுபடும் நன்னெஞ்சம், தக்க தருணத்தில் சரியானவற்றை எழுதுதல், இவை இத்தலையங்கத்தில் நன்கு பிரதிபலித்தன.


சென்னை–11 தே. சேதுராமன்

● 'என்ன பெயர் வைக்கலாம்?' என்ற சிறுகதையில் 'மேலே குவிந்திருந்த மலர் மாலைகளைவிட அந்த ஏழையின் கடைசி நேரப் பரிசு எல்லோர் கண்களிலும் நீரைப் பெருக்கியது...'? என்ற வரிகள் என் உள்ளத்தைத் தொட்டன.

சென்னை–1 நாகை ஜி. அகமது







மெய்கண்டார் மேன்மொழி

(சைவ சம்பிரதாயம் அதன் மூல புருஷ'ரான மெய்கண்ட தேவரின் பெயரில் 'மெய்கண்டார் சாத்திரம்' என்றும் வழங்கும். ''சிவஞான போதம்'', அதன் விளக்கவுரை இவற்றில் விரியும் அவரது அரும் கருத்துக்களில் சிலவற்றை இங்கு எளிய தமிழில் ஆக்கி அளிக்கிறோம்.)

ஜீவாத்மா உண்மையில் யார்? ஐம்புலன்களால் அறியப் பெறும் ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் இவற்றுள் ஒரு புலன் உணருவதை மற்றொரு புலன் அறிவதில்லை. உதாரணமாக, காது கேட்பதைக் கண் கேளாது; கண் பார்ப்பதைக் காது பாராது. ஆகவே, இந்தப் புலன்கள் ஜீவாத்மா அன்று. இவற்றைக் கருவியாகக் கொண்டு பயனை அறியவல்ல அறிவாகவும், உயிராகவும் ஒன்று இருக்கிறதே. அந்த அறிவே, அந்த உயிரே ஜீவாத்மா. இந்த ஐம்பொறி முதலான கருவிகளின் காரியமின்றி, இவை எதுவும் நானல்ல எனக் கழித்து நிற்கும் நிலையில் ஐந்தெழுத்து வடிவாக * இலகும் அறிவே 'நீ' என அறிவாயாக. இது மாயையும் அல்ல, சிவமும் (பிரம்மமும்) அல்ல. மாயையின் ஆட்டங்களால் பாதிப்புறுததால் இது மாயை அல்ல. சிவத்தைப் போன்ற ஆற்றல் இந்த ஜீவாத்மாவுக்கு இல்லாததால் இது சிவமும் அல்ல. சிவமே அருள்கொண்டு உணர்த்தினாலும், அறிவுறுத்தினாலும் மட்டுமே உணரவும் அறியவும் கூடியதான ஜீவன் சிவனுக்கு வேறுபட்டதே.

ஒரு கயவானது மூன்று இழைகளை முறுக்கிய பாசத்தால் (கயிற்றால்) கட்டப்பட்டிருப்பது போல ஜீவனானது ஆணவம், கர்மம், மாயை என்ற மும்மலத்தால் ஸம்ஸாரத்தில் கட்டுண்டிருக்கிறது. தனது விரிந்த உண்மை நிலை அறியாமல் அணு அளவினதாக (குறுகியதாக) தன்னை எண்ணுவது ஆணவ மலம். நற்செயல், தீச்செயல்களால் ஏற்படும் புண்ய, பாபங்கள் கர்ம மலம். உலகபோகங்கள் தான் மாயா மலம். ஜீவன் மட்டுமே இவற்றுக்கு ஆளாகுமேயன்றி சிவம் ஆட்படாது. அந்த சிவமாகிய பசுபதியே ஜீவப் பசுக்களுக்கு உடைமையானாக இருப்பவன். அவனது அருளே மும்மல பாசத்திலிருந்து ஜீவப்பசுவை விடுவிக்கும்,

விடுபட்ட மோக்ஷ நிலையில் ஜீவனும் சிவன் போல அகண்டமாகி, முற்றறிவு பெற்றபோதிலும் சிவனது ஆற்றல் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில் ஆற்றல்) ஜீவனுக்கு ஏற்படுவதில்லை. நித்ய ஸுகத்தைத் தருபவனாக சிவன் இருக்க, அதனைப் பெற்று அநுபவிப்பவனாக ஜீவனானவன் மோக்ஷத்தில் இருக்கிறான். இது, சிவனைப் பிரிந்து ஜீவனில்லை எனினும் ஜீவனே சிவனாகி விடாத பேத — அபேத நிலை.

உடலில் உயிர் கலந்திருப்பது போல இறைவன் உயிர்களில் கலந்து சாரத்தில் அவையே ஆகியிருந்தாலும், உடலுறுப்புக்கள் தனித்தனித் தன்மை பெற்றிருப்பதால் உயிர் அவற்றுக்கு வேறாக நிற்பது போல், ஜீவர்களின் தனித் தன்மைகளினின்று இறைவன் வேறுபட்டும் நிற்கிறான். ஆயினும் உயிர் இருந்தாலே உடல் உறுப்புக்கள் வெவ்வேறாகத் தொழிற்படவும் முடிவதுபோல், ஜீவர்களைத் தொழிற் படுத்துபவனாக இறைவனே உடனாயும் நிற்கிறான். அகரம் என்ற உயிரெழுத்தின் தொடர்பின்றிப் பிற எழுத்து எதுவுமே ஏற்பட முடியாது. இதனால் எல்லா எழுத்தும் அகரமே ஆகி விடாதல்லவா? சிவன் என்ற அகரம் இவ்வாறே ஜீவ சமூகமான மற்ற எழுத்துக்களுக்கு ஆகும்.

கண் ஒன்றைக் காண்பதாகச் சொன்னாலும் அறிவும், உயிரும் அற்ற நிலையில் கண் திறந்திருந்தாலும் எப்படிக் காணாதோ அவ்வாறே அறிவு கொண்ட உயிர்களான ஜீவர் அனைவருக்குள்ளும் பேரறிவாக, பேருயிராக இறைவனே இருப்பதால்தான் ஜீவர்களுக்கு அநுபவங்கள் விளைகின்றன.

ஆயினும் பசுபதிக்கு இயல்பாக உள்ள இரக்கத்தால் சமய சாத்திரங்கள், ஆசாரியர்கள், ஆலயங்கள், ஆசாரங்கள் இவற்றைத் தந்து பந்தத்திலிருந்து மீள வாய்ப்புத் தருகிறான். இந்த இரக்கமே அவனது சக்தி. சிவமும் சக்தியும் கதிரவனும் ஒளியும் போலப் பொருந்தி நிற்பது ஞானிகளுக்குப் புலனாகும்.

சிவஞானம் நமக்குள்ளேயே இருப்பதாயினும் குரு உபதேசத்தாலேயே வெளிப்படும் — குழந்தையைக் கண்டாலே தாய்க்குத் தன்னுள்ளிருந்து பால் சுரப்பது போல.

'நாம் சிவனது உடைமைப் பொருளே, நாம் அறிவதும் செய்வதும் அவன் அருள் விளக்கத்தினாலேயே' என்று உணரும் அடிமைத் திறம் வாய்க்கப் பெற்றால், எந்த உடம்பில் நின்று எவ்வினை செய்தாலும் வினையாலாகிய பந்தம் விளையாது.

தொகுப்பு: ரா. கணபதி

* நம: சிவாய என்பதும் ஐந்தெழுத்து: அ-உ-ம-பிந்து நாதம் இவை சேர்ந்த ஓம்காரமும் ஐந்தெழுத்தே.

அத்தியாயம் 38

மருத்துவ மனையிலிருந்து சத்யா வீடு திரும்பி இரண்டு நாட்கள் ஆகி விட்டன. கட்டுக்களைப் பிரித்து விட்டிருந்தார்கள். ஓரிரு ஆழமான காயங்களில் மட்டும் பிளாஸ்திரி போட்டிருந்தார்கள். அவன் கட்டிலுக்கு நேராகச் சுவரில் தாயார் தனபாக்கியத்தின் படத்தை மாட்டி அதற்கு அன்றுடம் பூச்சரம் அணிவித்து வந்தான் கயிலாசனு.

உடம்பிலிருந்த வேதனையெல்லாம் வெகுவாகக் குறைந்து விட்டிருந்த நிலையில் இப்போது டாக்டர் உத்தரவுப்படி ஓய்வாகப் படுத்திருப்பதுதான் சத்யாவுக்குப் பெரும் தொல்லையாக இருந்தது. 'இன்னும் ஒருவாரம் பெட் ரெஸ்ட் என்று சொல்லியிருக்கிறாரே எப்படி நேரத்தை ஓட்டப் போகிறேனோ' என்ற அலுப்பில் 'உம்' என்று பெரிதாகப் பெருமூச்சு எழுப்பினான். வந்தது வரட்டும்

கி. ராஜேந்திரன்



என்று தீர்மானித்தவன் போல் எழுந்து கட்டிலில் அமர்ந்தான்.

அவன் பெருமூச்சு ஒலியைக் கேட்டு விட்டுத் தானோ அல்லது யதேச்சையாகவோ உள்ளே நுழைந்த வைத்தியலிங்கம், "சத்யா! நீ கம்ப்ளீட் ரெஸ்ட்லே இருக்கிறதா உறுதியளித்ததால்தான் டாக்டர் உன்னை வீட்டுக்குப் போக அனுமதிச்சார். கட்டிலை விட்டு இறங்கப்படாது. எது வேணும்னாலும், கட்டிலுக்குப் பக்கத்திலேயே காலிங் -பெல் வைச்சிருக்கே, அடிச்சா நானோ கயிலாவோ ஓடி வந்து கவனிச்சுக்கறோம்" என்றார்.

"ஆகட்டும் அப்பா" என்றான் சத்யா. "வயசுக் காலத்திலே உங்களுக்கு நான் தான் ரொம்பக் கஷ்டம் கொடுக்கறேன்."

"அசடு! அப்படியெல்லாம் பேசக் கூடாது. மனசைச் சரியா வைச்சுக் கிட்டால்தான் உடம்பும் சீக்கிரம் குணமாகும். ஃபானைக் கொஞ்சம் குறைக்கட்டுமா? ரொம்ப வேகமாக ஓடுதா?" என்று கரிசனத்துடன் கேட்டார் வைத்தியலிங்கம். ஒரு தாயின் பாசத்தை, பரிவை அவர் குரலிலே புதிதாக இப்போது உணர்ந்தான் சத்யா.

அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. "அப்பா என்னை மன்னிப்பீங்களா அப்பா?" என்றான்.

"ஏன், மன்னிக்காமல் என்ன? மன்னிக்க முடியாத குற்றமாக இந்த உலகத்தில் எதுவுமே இடையாது. தெரியுமா? ஆனா ஒண்ணு, மன்னிப்பைப் பெற நாம் நம்மைத் தகுதி உடையவர்களாக்கிக் கொள்ள வேண்டும். மனம் வருந்தித் திருந்தணும். அப்போ நிச்சயம் மன்னிப்புக் கிடைக்கும். மன்னிக்க வேண்டியவங்களும் மன்னிப்பாங்க, ஆண்டவனும் மன்னிப்பார்."

"மனம் வருந்தினால் போதாது, அப்பா! இனி யோக்கியமா வாழத் தீர்மானித்தாலும் போதாது. செய்த தவற்றுக்குப் பிராயச்சித்தமாக நான் ஏதாவது பண்ணணும்னு விரும்பறேன்."

"நிஜமாகவா சத்யா? நிஜமாகவா சொல்றே?"

''நிச்சயமாத்தான் அப்பா. ஆனா பிராயச் சித்தமாக என்ன பண்ணுவது என்றுதான் புரியலே.''

''என்ன ஆச்சர்யம் பாரு சத்யா! நானும் இதே விஷயத்தைத்தான் யோசிச்சுக்கிட்டிருந் தேன். பிராயச்சித்தம் ஒன்றும் கண்டுபிடிச் சேன். ஆனா அதை எப்படி உன்கிட்ட சொல்ற துன்னு தயங்கிக்கிட்டிருந்தேன்.''

''என்ன பிராயச்சித்தம் அப்பா? சொல் லுங்க, நிச்சயமா நிறைவேற்றுகிறேன். என் மனசு அப்பத்தான் சாந்தி அடையும்.''

''ரொம்ப கஷ்டமான பிராயச்சித்தம் சத்யா!''

''பரவாயில்லேப்பா சொல்லுங்க!''

''அகிலா என்டர்பிரைஸஸ் மீது உனக்கு எந்தவிதமான பாத்தியதையும் கிடையா துன்னு எழுதிக் கொடுத்துடணும்!''

''பூ இவ்வளவுதானேப்பா! இப்பவே எழுதிக் கொண்டாங்க, கையெழுத்துப் போட றேன். அந்தக் கம்பெனி மீது இனி எந்த உரிமையும் எந்த நாளும் கொண்டாட மாட் டேன்!''

''தாங்க்யூ மைடாய்! நான் எவ்வளவு சந்தோஷப் படறேன்னு உன்னால் ஊகிக்கவே முடியாது! வக்கீலை வரச் சொல்லி இருக்கேன். கட்சிக் காரங்களைப் பார்த்து அனுப்பிட்டு



சுமார் ஒன்பது மணிக்கு வரேன்னு சொல்லியிருக்கார்.''

''ஆமாம்பா, வக்கீல்கிட்டே சொல்லி இன்னிக்கே கம்பெனியைச் கலோ பேரிலே எழுதி வைச்சுடுங்க. கம்பெனி மட்டுமில்லே. இன்னும் உங்களுக்கு இருக்கிற சொத்து முழுவதையும் அவளுக்கே கொடுத்திடுங்க. தீபக்கை அவள் கல்யாணம் செய்துக்க நீங்க சம்மதம் கொடுத்தாச்சுன்னு எனக்குத் தெரியும். கலோ சொன்னா. நான் ஏதோ பொறுமைப் பட்டுத் தீபக்கை வெறுத்தேனே யொழிய, அவன் ரொம்ப நல்லவன் என்பதை உள்மனம் ஆரம்பத்திலிருந்தே நன்றாக உணர்ந்துதான் இருந்தது. நல்லவன் என்பதோடு கெட்டிக்காரனும் கூட. கலோவையும் அவளோட சொத்தையும் நல்லா வைச்சுக் காப்பாற்றுவான்.''

''இல்லே சத்யா, நான் கம்பெனியை கலோவுக்கு எழுதி வைக்கப் போறதில்லே. இன் ஃபாக்ட் கம்பெனி பேரிலே என்றைக்கும் உரிமை கொண்டாட மாட்டேன்னு அவளையும் எழுதிக் கொடுக்கச் சொல்லப் போறேன்; அவ என் பேச்சைத் தட்டமாட்டா. எனக்குத் தெரியும். வக்கீல் வரும்போது கையெழுத்துக்குத் தேவையான டாக்குமெண்டுகளைத் தயாரிச்சுக்கிட்டுத்தான் வருவார்.''

''எனக்குமில்லே, கலோவுக்குமில்லேன்னு, பின்னே யாருக்கு அப்பா கம்பெனியை எழுதி வைக்கப் போறீங்க?''

''அதிலே வேலே செய்கிற தொழிலாளிங்களுக்கே அதை எழுதி வைச்சுடப் போறேன், சத்யா!''

''என்னது! என்னது!'' என்று வியப்புடன் வினவினுன் சத்யா.

''ஆமாம் சத்யா, காளமேகத்தோடு எவ்வளவோ மன்றாடிப் பார்த்தேன். 'சட்ட பூர்வமாத் தர வேண்டிய மினிமம் போனஸுக்கு மட்டும் இப்போ ஒத்துக்குங்க. கம்பெனி லாபகரமா நடந்தா அடுத்த வருஷம் உங்க கோரிக்கைகளை நிறைவேற்றறேன்'னு சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கலே. 'தொழிலாளர் சம்மதிக்க மாட்டாங்க'ன்னு சொல்லிட்டார். எப்போ அவங்களுக்கு நிர்வாகத்தில் நம்பிக்கை இல்லேயோ அப்ப நான் அந்த நிறுவனத்தைக் கட்டிக் காக்க நினைக்கிறதிலே என்ன அர்த்தம்?... அதனுல்... அதனுல்...''

''அதனுல் அவங்களுக்கே கம்பெனியை எழுதி வைச்சுடப் போறீங்களா அப்பா! அழகுதான். அவங்களாலே நாலு நாள் கூட நிர்வாகம் பண்ண முடியாது! அது உங்களுக்கும் தெரியும்.''

''நாலு நாள் நிர்வாகம் பண்ணுவாங்களோ நாற்பது நாள் பண்ணுவாங்களோ அது அவங்க பாடு. எனக்கு அதிலே இனி சம்பந்தமில்லே. தலைவலி நீங்கி நான் நிம்மதியா இருக்கேன். இப்பத்தான் தொழிலாளிங்களுக்கு நிர்வாகத்தில் பங்குன்னு ரொம்ப பேச்சு அடிபடுதே. தொழிலாளிங்களே தொழிலகத்தை ஏற்று நடத்த அரசும் ஆதரவு தருதே. அதனுல் நான் மனமுவந்து கொடுத்துடறேன். அவங்க நடத்தட்டும். புத்திசாலிகளாயிருந்தால் அருள்ராஜ்போல் ஒரு அனுபவசாலியைத் தலைவனு வைச்சுக்கிட்டு சிறப்பா நடத்தலாம். அசடுகளாயிருந்தால் ஒருத்தரோடு ஒருத்தர் தலைமைப் பதவிக்குப் போட்டி, சண்டை போட்டுக்கிட்டுக் கம்பெனியைக் குட்டிச்சுவர் பண்ணலாம். என்னவோ நடந்துட்டுப் போறது, போ!''

''அப்பா! இருபது வருஷமா வளர்த்து வந்த ஒரு கம்பெனியை, பார்த்துப் பார்த்துச் சிறுகச் சிறுக வளர்த்த ஒரு தொழிலகத்தை இவ்வளவு சுலபமா விட்டுக் கொடுக்க உங்களுக்கு எப்படி மனம் வந்தது, அப்பா?''


''நம்ம தொழிலாளிங்க எழுப்பிய கோஷங்கள்தாம் இந்தத் தியாகத்தைச் செய்ய எனக்குத் தெம்பு கொடுத்தது சத்யா! அவங்க என்ன கோஷம் போட்டாங்க, தெரியுமா?''

'வேஷம் போடாதே!
வயிற்றில் அடிக்காதே!' ''

அந்தக் கோஷங்களைத் திரும்பவும் தம் வாயாலேயே கூறியபோது வைத்தியலிங்கத்துக்கு நாத் தழுதழுத்தது.

'' 'நஷ்டப் பாட்டுப் பாடாதே!
எங்க கஷ்டம் தீராதே!
மகன் வந்தான் மானம் போச்சு!
அப்பன் வந்தான் நியாயம் போச்சு!' ''

ததும்பி நின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வைத்தியலிங்கம் தொடர்ந்தார்: ''...அப்படீன்னு கூச்சல் போட்டாங்க. என்னோட நியாய புத்தி எங்கும் போகலே, தொழிலாளர் நலனைத்தான் நான் விரும்பறேன்னு காட்டப் போறேன், சத்யா! என் நல்லெண்ணத்தை இனிமேலும் அவங்க சந்தேகிக்க முடியாது இல்லையா?'' என்றார்.



சோகத்தையும் ஜோக் வடிவில் சொல்லலாம்!

"சம்பள உயர்வு கேட்க உனக்கு எப்படித் தோன்றியது?"

"எனக்குக் கூடத் தோன்றவில்லே, சார். என் பிள்ளைகள்தான் பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் தினமும் மூன்று வேளை சாப்பிடுவதைக் கண்டுபிடித்து விட்டன."

—சன்ஸ் வீக்லி. —சாமி.



அத்தியாயம் 39

சத்யா கத்திக் குத்து பெற்ற கணத்திலிருந்தே நித்யா இனி தனக்கு அங்கே வேலை இராது என்பதை உணர்ந்திருந்தாள். 'ஏன் மறுநாளும் அதன் பின்னரும் ஆபீஸுக்கு வந்தோம்?' என்று அவளுக்கே தோன்றியது.

"ஸ்ரீ யோகாம்பிகை அதிஷ்டானம்"

ஸ்ரீ யோக கருமாரி அம்மன் அதிஷ்டானம்

திருவேற்காடு, சென்னை-600 077


உலக நலனுக்கு 7-வது ஆண்டு

"ஸ்ரீசத சண்டி மஹா ஹோமம்"

8-6-79 முதல் 10-6-79 வரை நடைபெறும்

8-6-79 வெள்ளி கலச ஸ்தாபனம் 50 ஆவர்த்தி ஸப்தசதி பாராயணம் ஷோடச கணபதி ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம்.

9-6-79 சனி ஸப்தசதி 50 ஆவர்த்தி பாராயணம், நவக்கிரஹ ஹோமம், துர்க்கா ஹோமம் யோகஸ்கந்தர் ஹோமம்.

10-6-79 ஞாயிறு வைகாசி பௌர்ணமி காலை 5 முதல் கோபூஜை, கஜபூஜை, வடுகபூஜை, கன்னிகா பூஜை, சுவாசினிபூஜை மஹாபூர்ணாஹுதி, வஸோர்த்தாரை, ஸ்ரீ யோக கருமாரி அம்மனுக்கு மஹா அபிஷேகம், மஹா தீபாராதனை.

புதுக்கோட்டை Dr. K. V. வைத்தியநாத சாஸ்திரிகள் ஸ்ரீ வித்யா உபாஸகர்களால் கிரமப்படி ஹோமங்கள் நடைபெறுகின்றது.

ஆச்சாள்புரம் ஆகம வித்வான்கள் அம்பாளுக்கு உபசாரங்கள் அலங்கார தீபாராதனை செய்வார்கள்.

ப்ரவசன ரத்னாகர, பண்டிதாவதம்ஸ, வேத சாஸ்திர புராண ப்ரவசன திலகம், உத்தமோபன்யாச சக்ரவர்த்தி, தர்மப்ரவசன ரத்னம், ப்ரும்மரிஷி மார்க்கானுஷ்டான ஸம்ராட் மஞ்சக்குடி ஸ்ரீ K. ராஜகோபால சாஸ்திரிகள் மஹா பூர்ணாஹுதி நேரத்தில் வருகை தந்து ஜெகன் மாதாவை பற்றி உபன்யாசம் வழங்குவார்.

மாலை ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி பெரியவாள் ஜெயந்தி உத்ஸவம் நடைபெறும். புதுக்கோட்டை ஸ்ரீ அதிஷ்டானம் ஸ்ரீமத் சாந்தானந்த ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் பிரதிஷ்டை செய்துள்ள ஸ்ரீசக்ர பூர்ண மஹா மேருவிற்கு விசேஷ நவாவர்ணபூஜை நடைபெறும்.

இரவு ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம் ஸ்ரீ மஹா சன்னிதானம் அளித்த ஸ்ரீசக்ர அங்கி அம்பாளுக்கு அணிவித்து அலங்கார தீபாராதனை நடைபெறும்.

ஒரு சங்கல்ப ஹோமத்திற்கு ரூ. 150ம் வெள்ளி யோக கருமாரி அம்மன் டாலர் வேண்டுபவர் ரூ: 21ம் ஸ்ரீ சண்டி வெள்ளி ரக்ஷை வேண்டுபவர் ரூ. 21ம் மேற்படி முகவரிக்கு அனுப்பவும்.

தலைவர் :


தவத்திரு அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

உபதலைவர் :

அம்பிகை அடிமை ஸ்ரீ N. சங்கரன்

காரியதரிசிகள் :

ஸ்ரீ M. V. சுவாமிநாதன் B.Com, ஸ்ரீமதி K. S. ஜானகி அம்மாள்



சென்னை அப்பாசாமி ரியல் எஸ்டேட், மாம்பலம் சாரதி புக்ஷாப் ஆகியவற்றின் உரிமையாளரான ஸ்ரீ S. அப்பாசாமி அவர்களின் குமாரத்தி சௌ. உஷாவுக்கும் சென்னை சாம்பசிவம் கம்பெனியின் உரிமையாளர் ஸ்ரீ சாம்பசிவம் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி ஜானகிராமன் B.A.க்கும் சென்னையில் ஹேமமாலினி கல்யாண மண்டபத்தில் 17-5-79 அன்று மிகச் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. காலையில் முகூர்த்தத்திற்கும் மாலையில் நடந்த வரவேற்பிற்கும் ஏராளமான நண்பர்களும் நகரப் பிரமுகர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். தமிழ்நாடு ஆளுனர் ஸ்ரீ பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் மாலையில் நடந்த வரவேற்பிற்கு வந்திருந்து மணமக்களை ஆசிர்வாதம் செய்தார். வாழ்க மணமக்கள்.

'பேசாமல் ஒரு ராஜினாமாக் கடிதத்தைத் தபாலில் அனுப்பிவிட வேண்டியதுதானே?... செய்யலாம்தான், ஆனால் அதற்குப் பிறகு என்ன பண்ணுவது? மறுபடி கால்கேர்ல் தொழில்தான் காத்திருக்கிறது. அந்த மானம் கெட்ட பிழைப்பைத் தவிர்க்க முடியுமென்றால் நல்லதுதானே? ஏதோ ஒரு வேலை, மாதம் பிறந்தால் சம்பளம், சத்யாவின் ஆசைகளுக்கு அடிபணிய வேண்டிய அவசியமும் இனி இராது என்றால் எவ்வளவு நிம்மதி!' — மனத்தின் அடித்தளத்தில் அவளுக்கு ஒரு நப்பாசை, 'வைத்தியலிங்கம் அல்லது அருள்ராஜ் அவள் நிலைக்கு இரங்கி, தொடர்ந்து இருந்து விட்டுப் போகட்டும், ரிஸப்ஷனிஸ்ட் என்றில்லா விட்டாலும் ஏதோ ஒரு வேலை கொடுப்போம் என்று எண்ண மாட்டார்களா...?'

ஆனால் பாவம், அவள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. எதற்காக இங்கே வந்தோம் என்ற நினைப்பே இல்லாமல் அவள் ஆனந்தின் பாச்சிலர் அபார்ட்மெண்டுக்கு வந்து சேர்ந்தாள். தன்னந்தனியாக விடப்படும்போது யாரிடமாவது சற்றுப் பேசினால் தேவலாம் என்றிருக்கிறது. ஆனந்தை அவள் தவிர்த்து விட்டால் வேறு யாருடன் பேசுவது?

வழக்கம் போல் அவன் அந்த நேரத்தில் குடித்துக் கொண்டுதானிருந்தான். போதை ரொம்பவும் ஏறி மயங்கிக் கிடக்கிற நிலையல்ல. அரைகுறையாக ஏறி நிதானம் தவறுகிற ஆபத்தான நிலை! அதைப்பற்றியும் அவள் எண்ணிப் பார்க்கவில்லை, கவலைப்படவில்லை. அவளுக்குப் பழக்கமானவைதாமே அவனது அந்தப் பல்வேறு கட்டங்களும்!

''எங்கே வந்தே?'' என்று கேட்டான், கதவைத் திறந்து அவளை உள்ளே அனுமதித்த ஆனந்த். பதிலையும் அவனே சொன்னான்: ''ஓ! சத்யாவுக்குப் பதில் வைத்தியலிங்கமே பொறுப்பேற்றுக் கொண்டதும் உனக்குக் கல்தா கொடுத்து அனுப்பி விட்டாராக்கும்!''

''ஆமாம்'' என்று சொல்லிப் பழக்கப்பட்ட உரிமையுடன் அவள் நடந்து சோபாவில் அமர்ந்தாள். ''ஹெல்ப் யுவர்ஸெல்ஃப்'' என்றான். அதுவும் அவளுக்குப் பழக்கம்தான். ஒரு டிரிங்க் தனக்கென்று தயாரித்துக் கொள்ள அவள் தயங்கவில்லை என்பதோடு அதனை அப்போதைய மனநிலையில் அவள் விரும்பி வரவேற்கவும் செய்தாள்.

ஸிப் செய்து கொண்டே சுற்று முற்றும் பார்த்தவள், ''என்ன ரொம்ப மாறுதலா இருக்கே?'' என்று கேட்டாள்.

''ஆமாம், ஒரு இன்டீரியல் டெகரேட்டரை வரச் சொல்லி எல்லாத்தையும் மாற்றிட்டேன். ஐ ஆம் ஆல்வேஸ் ஃபார் சேஞ்ச். அறையை அழகு படுத்துகிற விதத்தில் மட்டுமில்லே...''

''தெரியும், நேற்று ஷிவாஸ் ரீகல், இன்று வேட், நாளை ஸ்காட்ச் விஸ்கி, நேற்று ஒரு கால் கேர்ல், நாளை வேறு ஒருத்தி.''

''கரெக்ட்'' என்ற ஆனந்த் விஸ்கி டம்ளரை ஏந்தி இருந்த கரத்தை, ஒரு பக்கமாக அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த ஒரு வெண்கலச்சிலை நோக்கி நீட்டினான். ''அதன் விலை என்ன தெரியுமா?''



''என்னப்பா இது. நான் ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கச் சொல்லி என் பையனை அனுப்பிச்சா பத்து கொடுத்துட்டே. ஒரு டஜனுக்குக் காசு வாங்கியிருக்கியே?''

''அதிலே ரெண்டு அழுகல் அம்மா. நீங்க போய் அதைத்தூக்கி எறியவா னென்னு நானே எறிஞ்சிட்டேன். உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?''

—சாமி.

''ஐயாயிரம்?''

''தாங்க்யூ! ரொம்ப அதிகமாக் கொடுத்துட்டேனேன்னு கவலைப்பட்டுக் கிட்டிருந்தேன். இப்பத்தான் நிம்மதியாச்சு. நாலாயிரம்தான். பூம்புகாரிலே பார்வதி – பரமேசுவரன்னு வைச்சிருந்தான். நாலு நாள் முன்தான் பார்த்தேன். நான் பார்வதியைக் கண்டேனா? பரமசிவனைப் பார்த்தேனா? இந்தப் படிமம் அழகா இருந்துச்சு. என் பாச்சிலர் அபார்ட்மெண்டுக்கு ஒரு 'டாப் லெவல் ஃபிகர்' அவசியம்னு தோணிச்சு...''

''ஐயோ! தெய்வ நிந்தனையாப் பேசாதீங்க ஆனந்த்! செய்த அக்கிரமங்களுக்கெல்லாம் மேலாக இது வேறே வேண்டாம்!''

சிரித்தான் ஆனந்த். ''பேச்சிலே தான் தெய்வ நிந்தனையா? நாம் நடந்துக்கிற விதத்திலே இல்லையா? தெய்வம்னு ஒன்று இருந்தால் அது என்னிக்கோ என்னைப் பழி வாங்கி இருக்கணும். அத்தனை மோசமான வாழ்க்கை நடத்தறவன் நான். உனக்குத் தெரியாதா? ஒரு வேடிக்கையைக் கேளு! பூம்புகாரிலே அந்த ஸேல்ஸ்மேன் கூட உன்னைப் போலவே தான் பேசினான். இந்தப் படிமத்தை மட்டும் தனியே விலை பேசினேன். 'தெய்வ நிந்தனை பண்ணுறீங்க. ஜோடி பிரிக்காமல் வாங்கிப் போவதானால் சரி, இல்லேன்னு விடுங்க'ன்னான். பத்தாயிரத்துக்கு செக் வெட்டினேன்.''

''அப்போ, நடராஜர் படிமம்? அது எங்கே?''

''அதை வீட்டிலே டிராயிங் ரூமில் வைச்சுட்டேன். இங்கே இந்த பாச்சிலர் அபார்ட்மெண்ட்டுக்கு இந்த ஷேப்லி ஃபிகர் மட்டும் இருந்தால் போதுமில்லையா? வாட் எ லவ்லி கான்டூர். என்ன ப்ரபோர்ஷன்! இன்றைக்கெல்லாம் பார்த்துக்கிட்டிருக்கலாம். நீயும் இருக்கியே! நீ மட்டுமா? எத்தனையோ பார்த்தாச்சு இந்தக் கண்ணு. ஆனா இந்தச் சிலையிலே இருக்கிற கச்சிதமான அழகை யாரிடம் காண முடிந்தது?'' என்றான் ஆனந்த்.

(தொடரும்)

புயல் கொடுமையும் அதனை வென்ற விதமும்!


1977ம் வருஷம் ஆந்திரப் பிரதேசத்தில் புயல் கொடுமையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிப் பணிகளும் மறுவாழ்வுத் திட்டங்களும் திட்டமிட்டுத் துரிதமாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. முதன் மந்திரி உதவி நிதியிலிருந்து நிரந்தர வீடுகளும் சமூகப் பாதுகாப்புத் தங்குமிடங்களும் பெருமளவில் நிர்மாணிக்கப்பட்டன.

இந்தத் துரிதப் பணிகளில் அதி வேகமான முன்னேற்றம் கண்டுள்ளோம். கடலோரப் பகுதிகளில் அலைகளின் வீச்சுக் கொடுமையிலிருந்து மக்கள் மறுவாழ்வு பெற 14,000 நிரந்தர சிமெண்ட் தள வீடுகள் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 300 சமூகப் பாதுகாப்புத் தங்குமிடங்களும் கட்டப்படவிருக்கின்றன. இருபத்தி நான்கு மணி நேரமும் உதவிப் பணிகள், மறுவாழ்வுத் திட்டப் பணிகள் எதிர்நோக்கியுள்ள நாளை வளமானதாக்கக் காத்திருக்கின்றன.

D. I. P. R. 31

பட விமரிசனம்

ரோசாப்பூ ரவிக்கைக்காரி



சினிமாப் பட முதலாளிகளின் கவனம் இப்பொழுது அதிகமாகக் கிராமப்புறத்தை நோக்கித் தாவியுள்ளது! ரோஜாப்பூ ரவிக்கைக்காரியும் தேவராஜ்—மோகன் இரட்டையர் டைரக்ஷனில் கிராமப்புறச் சூழ்நிலையில் பவனி வருகிறுள்!

சுதந்திரம் உதயமாகாத காலம். நகர்ப்புற நவநாகரீகம் எட்டிப் பாராத கிராமம். அப்பாவி செம்பட்டை 'வெத்தலே' வியாபாரத்தில் ஈடுபட்டு நாட்டுப் புறத்துக்கும் நகர்ப்புறத்துக்கு மிடையே வளேய வந்தான். நகர்ப்புற நாகரீக நங்கை நந்தினி அந்தக்கபடமற்ற கிராமத்தில் ரவிக்கை, பவுடர், பாடி சகிதம் செம்பட்டையின் மனேவி யாக அடியெடுத்து வைத்தாள்! கிராமம் நவநாகரீகத்தைக் கண்டு திமிலோகப்பட்டது! மாமியார் மருமகள் சண்டை துளிர்த்தது! ஒற்றுமையான அண்ணன் — தம்பி கூட்டுக்குடும்பத்தில் பிளவுக்கு வழி பிறந்தது! மருமகளின் நவநாகரீகத்துக்குச் 'சூடு' போட்டாள் மாமியார்! அதுவே அப்பாவி செம்பட்டையும் நந்தினியும் பிரிந்து வாழ, தனிக் குடித்தனம் செய்ய வகை செய்து விட்டது! நகர்ப்புற வில்லன் மாணிக்கம் ரோஜாப் பூவைக் கவருகிறன். பலரது அவச் சொல்லேயும் பொறுத்துக்கொண்டு வளேய வந்த செம்பட்டை கடைசியில் நேரிலேயே இந்தத் துரோகத்தைக் காணும் நிலே ஏற்படக் குளத்திலே தன்னே மரித்துக் கொள்கிறுன்.

சிவகுமார் 'காக்கும் கரங்கள்' படத்தில் அடியெடுத்து வைத்து 'ரோஜாப்பூ ரவிக்கைக்காரி'யில் தமது செஞ்சுரியைப் பூர்த்தி செய்திருக்கிறுர்! அப்பாவி செம்பட்டையாகச் சிவகுமார் தம் நடிப்பில் சோபித்துக் கரவொலி பெறுகிறுர். 'செஞ்சுரி கண்டும் சிவகுமாருக்குத் தமது நடிப்பில் இன்னும் பூரண மனத்திருப்தி ஏற்படவில்லேயாம் — சொன்னுர். ஒரு நடிகனுக்குப் பூரண மனத்திருப்தி ஏற்பட்டால் பிறகு முன்னேற வழி ஏது?

ரோஜாப்பூ ரவிக்கைக்காரி(தீபா) தளுக்கிக் குலுக்கி மினுக்கி நவநாகரீகத்தைக் கிராமப்புறத்தில் பரப்புவதும் வில்லனின் பசப்பில் மயங்குவதும் ரசமாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

பிரசாத்தின் காமிரா கிராமப்புற அழகை வண்ணக் கோலங்களில் பிடித்துத் தருகிறது. இளேயராஜாவின் கிராமப்புற ட்யூன்கள் எடுப்பாக ஒலிக்கின்றன! கன்னடப் பட மொன்றைத் தழுவிய ரோஜாப்பூ ரவிக்கைக்காரியில் சில கன்னட நடிகர்களும் நடித்திருக்கிறுர்கள். இது தயாரிப்பாளர்—இயக்குனரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

நகர்ப்புற நவநாகரீகம் கிராமப் புறத்தை விழுங்கத் தொடங்கினுல் ? Tragedyதான் எனப் படம் உணர்த்துகிறது.

அப்பாவி செம்பட்டைக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் படம் பார்ப்பவர் உகுத்தால் அதுவே செஞ்சுரி கண்ட சிவகுமாருக்கு அவர்கள் அளிக்கும் பாராட்டு!

— பி.எஸ்.எம்.

ராஜேஷ்குமார்



சுகிர்தா, இனியும் பொறுக்கமாட்டாள்

கல்யாண மண்டபம் கொள்ளாமல் ஜனங்கள் கசகசத்தார்கள்.

என் ஒரே பெண்ணான சுகிர்தாவுக்கு விடிந்தால் கழுத்தில் தாலி ஏறிவிடும். தாயில்லாத பெண்ணான அவளுக்கு மனத்தில் எந்தவிதமான குறையும் தோன்றி விடக்கூடாது என்பதற்காக — என் கஞ்சத்தனத்தையும் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு — காசை இறைத்துக் கல்யாணத்தை ஏற்பாடு பண்ணியிருந்தேன்.

ரவா கேசரிக்கு நெய் போதாது என்று ஐயர் சொன்னது நினைவுக்கு வந்தது. ஜானவாசம் முடிந்து மாப்பிள்ளை வீட்டார் மண்டபத்தில் நுழைந்ததும் — எல்லோருக்கும் காப்பி கலக்க வேண்டும்.

வாழை இலைக்கட்டைச் சாப்பாட்டுக்கும் டிபனுக்கும் தகுந்த மாதிரி அறுத்து விட்டார்களா என்று பார்ப்பதற்காக உள்ளே போனேன். எதிரே என் மூத்தமகன் தண்டபாணியும் சின்னவன் சிவராஜும் வந்து கொண்டிருந்தார்கள். இருவர் முகங்களிலும் கோபக் கனல்.

''அப்பா இப்படிக் கொஞ்சம் வர்றீங்களா?'' — தண்டபாணி என்னை அழைத்தான்.

''என்னடா?'' வேஷ்டியை இறுகக் கட்டியபடி அவனை நெருங்கினேன்.

''மாப்பிள்ளையோட ஜானவாச ஊர்வலத்துக்கு அந்தக் காரை ஏற்பாடு பண்ணாதீங்கன்னு அன்னிக்கே சொன்னேன்... கேட்டீங்களா?...''

''அந்தக் காருக்கென்ன இப்போ?''

''என்னவா?... மானம் போகுது... மாப்பிள்ளையோட பிரண்ட்ஸும், மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவங்களும் பண்ற கேலி பொறுக்க முடியல்லே... நீங்க ஹைதர் அலிக்கு பிரண்டாம்... அதனால்தான் அந்தக் காலத்துக் காரைப் பார்த்து ஜானவாசத்துக்கு புக் பண்ணியிருக்கீங்களாம்...'' — சிவராஜ் முகம் சிவக்கக் கூறினான்.

''கஞ்சன் கன்னியப்பனுக்கு இப்படிப்பட்ட கார்தான் கிடைக்கும்... காருக்கு பெட்ரோல் ஊத்தாமே... தண்ணியை ஊத்தச் சொல்லியிருப்பான்... அதான் கார் நின்னு நின்னு வருதுன்னு கண்டபடி பேசறாங்க அப்பா...'' — தண்டபாணி பொருமினான். என் முகம் ஒருகணம் இருண்டது. மறுகணமே சமாளித்துக் கொண்டேன்.

''கிடக்கிறது விடுங்கடா... பேசறவன் பேசிட்டுப் போகட்டும்... மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை எந்த பெண் வீட்டுக்காரனாலும் திருப்திப் படுத்த முடியாது... தலை வாழை இலை போட்டு ஆறு ஸ்வீட்டும் பன்னிரண்டு வகைச் சித்திரான்னமும் வெச்சு விருந்து போட்டாலும்... அப்பளம் மூலையிலே விண்டு போயிருக்கும்பான்...''

பக்கத்து அறையில் மணப்பெண் கோலத்தில் இருந்த என் மகள் சுகிர்தா சிலிர்த்துக் கொண்டு வந்தாள். சின்ன வயது முதலே என்னை யாராவது மட்டமாய்ப் பேசிவிட்டாலோ — மரியாதைக் குறைவாக நடத்திவிட்டாலோ... அவளுக்குப் பொறுக்காது. சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கு வருவாள்.

''அவங்க பேசறது என்னப்பா நியாயம்? பொண்ணு வூட்டுக் காரங்கன்னா அவ்வளவு இளப்பமா? நம்ம உடம்பிலேயும் ரத்தம்தான் ஓடுது...?''

''அப்படிச் சொல்லு சுகி...'' — சிவராஜ் தன் தங்கைக்குப் பரிந்து வந்தான். நான் சுகிர்தாவைப் புன்னகையோடு பார்த்தேன். சொன்னேன்.

''அம்மா... சுகி... அவங்கதான் கோபத்தில் பேசினா நாம்பளும் கோபத்தைக் காட்டுறதா? பொண்ணு வீட்டுக்காரங்க கொஞ்சம் பணிஞ்சுதாம்மா போகணும்...''

''இது சுத்த பயங்கொள்ளித் தனம்...'' — சுகிர்தாவின் குரலில் கோபம் கொப்பளித்தது. முகம் ரத்தமாய்ச் சிவந்தது.

நான் சிரித்துக் கொண்டே உள்ளே போனேன்.

மாப்பிள்ளை வீட்டார் மண்டபத்துக்குள் நுழைந்தார்கள்.

நடந்து வந்த களைப்பைப் போக்கும் வகையில் — டம்ளர்கள் காப்பியால் நிரப்பப்பட்டு உடனுக்குடன் விநியோகிக்கப் பட்டன. மண்டபத்தில் இருந்த எல்லா மின் விசிறிகள் சுழன்றும் புழுக்கம் அசைய மறுத்து அழுத்தமாய் மண்டிக் கிடந்தது. வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருந்த என்னை என் தங்கை

பார்வதம் – கவிர்தா அறையிலிருந்து சைகை காட்டி அழைத்தாள்.

போனேன், பார்வதம் குரலைத் தாழ்த்திக் கொண்டு கெகிகெத்தாள். ''ஜானவாசம் முடிஞ்சுவந்த மாப்பிள்ளை வீட்டுக்காரங் களுக்கு நாம காப்பி கொடுத்தது பிடிக்கல்லே போலிருக்கு அண்ணு...''

''எப்படிச் சொல்றே?''

''மாப்பிள்ளேயோட அம்மா – அதான் உன்னோட சம்பந்தியம்மா – என்னோட காதுல விழற மாதிரி சொல்லிக் காட்டிறு... 'இந்த வெய்யில் காலத்துல காப்பி குடிச்சா உடம்பு வேர்த்துக் கொட்டாதா? காப் பிக்குப் பதிலாக் கிரஷ் கொடுக்கலாம்னு பொண்ணு வீட்டுக் காரங்க யாருக்குமே தோணல்ல போலிருக்கு...' அப்படின்னு மூஞ் சியைக் கடுகடுன்னு வெச்சுக்கிட்டுச் சொல்லிக் காட்ரு...''

அதுவரை ஒன்றும் பேசாமல் இருந்த கவிர்தா இப்போது உஷ்ணத்தோடு சீறி ஞள்... ''பெரிய ராயல் ஃபேமிலின்னு நெனைப்பு போலிருக்கு... இவங்க வீட்டில போய்ப் பார்த்தா தெரியும் சங்கதி...இந்தக் காப்பிக்குக் கூட வக்கில்லாம இருப்பாங்க... குடுக்கறதை ஒழுங்கா குடிச்சிட்டுப் போ காமே... பேச வந்துட்டாங்க... மாப்பிள்ளை வீட்டுக்காரங்கன்னு கொம்பா முளைச்சி ருக்கு...?''

நான் பதறிப் போனேன்... ''அம்மா கவி.. நீ பேசாமே இரும்மா... யார் காதிலாவது விழுந்துடப் போவுது...''

''விழட்டுமே... என்னுயிடும்? உங்களைப் பத்தி யார் தரக் குறைவாப் பேசினலும் என் ஞல தாளமுடியாது அப்பா...காப்பி கொடுக் கறதுகூட கேவலம்னு நினைக்கிற இவங்க ளோட வறட்டு ஜெம்பத்தைப் பேசித்தான் ஒழிக்கணும்.... காப்பி குடிச்சா என்ன யிடும்?... கொஞ்சம் வேர்க்கும்... அது ஒரு கஷ்டமா?... கிரஷ் வேணுமின்னு வெளியே போய்க் குடிக்கட்டும்...''

கவிர்தா பேசப் பேசச் சுற்றும் முற்றும் பார்த்தேன். நல்ல வேளையாக மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பக்கத்தில் இல்லை. கவிர்தா இன்னமும் பேசிக்கொண்டிருந்தாள். ''அவங்க குட்ட... குட்ட... நீங்க ஏம்பா குனிய நீங்க?... நாமென்ன அடிமைங்களா?... அவங்க நம்பளை மட்டமாப் பேசினு... நாம் பளும் காரமா நாலு வார்த்தை பேசணும்..''

கவிர்தாவைச் சமாதானப் படுத்துவதற் குள் திணறிப் போனேன்.

முகூர்த்தம் முடிந்தது.

வந்தவர்களை டிபன் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்தி, டிபனை முடித்துக் கொண்டு வெளியே வருபவர்களுக்குத் தாம்பூலப் பொட் டலத்தைக் கையில் திணித்து – வியர்க்க, வியர்க்கப் பம்பரமாய்ச் சுழன்று கொண் டிருந்த என்னைப் பத்துமணி சுமாருக்கு – மாப்பிள்ளைக்கு அப்பா, – என் சம்பந்தி வந்து அழைத்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.



"ஒய்வா இருந்தாக் கொஞ்சம் வந்துட்டுப் போறீங்களா?"

"இதோ... இப்பவே வர்றேன்..." — அங்கவஸ்திரத்தால் முகத்தை ஒற்றிக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தேன்.

மாப்பிள்ளையின் அறைக்குப் பக்கத்திலிருந்த அந்தச் சிறிய அறைக்குள் நுழைந்தோம். அறையில் — சோபா—கம்—பெட்டில் உட்கார்ந்திருந்த மாப்பிள்ளையின் அம்மா என்னைக் கண்டதும் புடவைத் தலைப்பைப் போர்த்திக் கொண்டு எழுந்து நின்றபடி "வாங்கோ" என்று வரவேற்றாள்.

"உட்காருங்கோ" — என் சம்பந்தி சோபாவைக் காட்டியபடி தாமும் உட்கார்ந்தார். சிலவிநாடிகள் வரை ஒன்றும் பேசாமல் தம் மனைவியைப் பார்த்தார். அந்த அம்மாள் கண்களாலேயே "ம்... சொல்லுங்க..." என்று ஆணை பிறப்பிக்க — அவர் போட்டிருந்த மூக்குக் கண்ணாடியைக் கழற்றி — மேல் துண்டால் பாலீஷ் ஏற்றியபடி — என் முகத்தைப் பார்க்காமல் பேசினார்.

கதைச் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார் புராணப் பிரசங்கி. அவரது உரையைத் தினமும் வந்து கேட்டார் கிழவர் ஒருவர். அவரை நோக்கிப் புராணப் பிரசங்கி ஒருநாள் "கதை உமக்குப் புரிகிறதா?" என்று வினவினார்.

கிழவர் விக்கி விக்கி அழுது கொண்டே "புரிகிறது" என்றார். "புரிந்துமா நீர் அழுகிறீர்?" என்று கேட்டார். கிழவர் கூறிய பதில்:

"கதை சொல்லும் போது கண்ணன் கழுத்தைத் திருப்பித் திருப்பி உபதேசம் செய்கிறாரே அவருக்குக் கழுத்தை வலிக்காதா? அவரை அப்படி அலைக்கழித்த அர்ஜுனன் எவ்வளவு கல்நெஞ்சக் காரன்? என்று நினைத்தேன் வருத்தமாய் இருந்தது"

புராணப் பிரசங்கி கூறினார்: "ஐயா! நான் கதை சொல்லும் போது, த்வைதம் அத்வைதம் என்ற தத்துவத்தில் மட்டும் ஈடுபட்டுக் கூறினேன். மற்றவர்களும் அப்படியே ஆழ்ந்து கேட்டார்கள். நீர் ஒருவர் மட்டும்தான் உண்மையான பக்தியுடன் பகவானிடம் மனத்தைச் செலுத்தினீர்!"

—புராணச் சொற்பொழிவில் நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் கூறியது.

கேட்டவர்: "சங்கரி புத்திரன்."



"ஒண்ணுமில்லே. உங்க பொண்ணு நம்ப வீட்டுக்கு மருமகளா வந்த நேரம்... நம்ம வீட்டிலே கூடிய சீக்கிரம் இன்னொரு கல்யாணம் வரப்போகுது..."

நான் இடைமறித்தேன்... "அப்படியா... ரொம்ப சந்தோஷம்... யாருக்குக் கல்யாணம்?"

சம்பந்தியம்மாள் குரலில் பெருமிதம் வழியச் சொன்னாள். "நம்ம பையன் கடைசி ஞானசம்பந்தத்துக்குத்தான்... பி. ஈ. படிச்சுட்டு பம்பாயிலே கார்ப்பரேஷன்லே வேலைக்கு இருக்கான்... யூனிவர்சிடியிலே கோல்டு மெடல் வாங்கினவன்... ரிடையர்ட் ஜட்ஜ் சதாசிவத்தோட இரண்டாவது பொண்ணு முடிஞ்சிருக்கு... வர்ற வைகாசியிலே கல்யாணத்தை வெச்சுக்க அவங்க ரொம்பவும் ஆசைப்படறாங்க..."

"கல்யாணத்துக்கு இன்னும் மூணு மாசம் கூட இல்லியே...?"

சம்பந்தி சொன்னார் "பெரிய இடத்துச் சம்பந்தம் பாருங்க... சீக்கிரமா கல்யாணத்தை முடிச்சுடணும்... இல்லாட்டி எவனாவது வயித்தெரிச்சல்காரன் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கல்யாணத்துக்கு முட்டுக்கட்டை போட்டுடுவானுங்க.."

"வாஸ்தவம்தான்" — நான் ஆமோதித்தேன்.

இந்தக் கல்யாண விஷயத்தை மட்டும் சொல்வதற்கா என்னை இவர்கள் அழைத்து வந்திருப்பார்கள்?

நிச்சயமாக இல்லை? இதற்குப் பின்னணியில் ஏதோ இருக்கிறது. அதற்காகக் காத்திருந்தேன். சம்பந்தி என் எண்ணத்தை ஊகித்து விட்டவர்போல் — மெல்லப் பேச்சை ஆரம்பித்தார்.

"உங்க பொண்ணை நிச்சயம் பண்ணின அன்னிக்கு இன்னும் ஒரு வருஷம் கழிச்சு ஒரு நெக்லஸ் செஞ்சு போடறதாச் சொன்னீங்க... அதை இந்த மூணு மாசத்துக்குள்ளாற செஞ்சு போட்டுட்டா நல்லாயிருக்கும். பெரிய இடத்துக் கல்யாணம் பாருங்க... கல்யாணத்தன்னிக்கு உங்க பொண்ணு கழுத்து நெக்லஸோட நின்னு பாக்கறதுக்கும் மதிப்பா இருக்கும்..."

என் நெஞ்சில் அம்பு செருகினாற் போல் அதிர்ந்தேன்.

"இன்னும் மூணு மாசத்திற்குள்ளா?"... —வார்த்தைகள் பிசினைப் போல் தொண்டையிலேயே ஒட்டிக்கொண்டன.

"ம்... ஒரு வருஷம் கழிச்சு எப்படியும் பொண்ணுக்கு நெக்லஸ் பண்ணத்தானே போறீங்க?... அதைக் கொஞ்சம் முன்னாடியே பண்ணச் சொல்றோம்... அவ்வளவுதான்!" சம்பந்தி வார்த்தைகளுக்கு ஏற்ற இறக்கம் கொடுத்து அழுத்தம் திருத்தமாகப் பேசினார்.

நான் பலமாக மறுத்தேன். "கல்யாணச் செலவு இப்பவே அதிகமாயிடுச்சு... பவுனோட விலையும் சரியில்லே... மூணு மாசம்னு முடியாதே... மன்னிச்சுக்குங்க ..."

சம்பந்தியின் முகம் முதல் முறையாகக் கடுகடுத்தது.

"உங்க பொண்ணோட மதிப்பையும் மத்தவங்களுக்கு முன்னாடி உயர்த்தலாம்னு நெனைச்


ஒரு குழந்தையின் பொறாமை
அட பகவானே! உங்க அம்மா நிஜமா இத்தனை பிஸ்கோத்துகளைச் சாப்பிட விடுகிறாளா?
ஆமா. ஏன்றா அவைகள் குவாலிடி கோல்டன் அவைகள் அவ்வளவு சத்தோடு சிக்கனமும் கொண்டவை என்று அம்மா செல்றா.
ASP-KFP-7908
kwality's golden BISCUITS
KWALITY GOLDEN BISCUITS
கெட்டியான பாக்கெட்டுகளிலும் உதிரியாகவும் கிடைக்கும்.
IS:1011
போலிகள் ஜாக்கிரதை!
குவாலிடிஸ் கோல்டன்
ஆரோக்கியமான குடும்ப பிஸ்கட்
செலவு குறைந்தது
குவாலிடி
உணவுப் பண்டங்கள்
பெங்களூர்-560 039.
குவாலிடி உயர்தர
பிஸ்கோத்துகளைத்
தயாரிக்கிறது.



சென்னை போலீஸ் பயிற்சிக் கல்லூரியின் ஓய்வு பெற்ற உதவியாளர் ஸ்ரீ V. S. அனந்த நாராயணன் அவர்களின் குமாரர் ஸ்ரீ V. A. ராஜசேகரனுக்கும் (Reserve Bank) சென்னை மின்சார வாரியம் செக்ஷன் ஆபீஸர் ஸ்ரீ T. R. சுப்ரமணியம் அவர்களின் சகோதரி சௌ. T. R. ரமணிக்கும் (Indian Oil Corporation) சமீபத்தில் விவாகம் சிறப்பாக நடை பெற்றது. காலையில் முகூர்த்தத்திற்கும் மாலையில் நடைபெற்ற வரவேற்பிற்கும் உறவினர்களும் நண்பர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். வாழ்க மணமக்கள்.

சேன்... அது உங்களுக்கு இஷ்டமில்லேன்னு வேண்டாம்... மூணு மாசத்திலே ஒரு நெக்லஸ் பண்ண முடியாதா என்ன? கடனை இடனை வாங்கிப் பண்ண வேண்டியதுதான். பின்னாடி கடனை அடைச்சுக்க வேண்டியதுதான்...''

நான் கறுத்துப் போன முகத்தோடு சிரிக்க முயன்றேன். மெல்லிய குரலில் சொன்னேன். ''என்னோட ரெண்டு பையன்களோட கலந்து பேசி முடிவைச் சொல்றேன்.''

நான் எழுந்தேன்.

''நல்ல முடிவாச் சொல்லுங்க...''

சம்பந்தி அதட்டும் குரலில் சொன்னார்.

கனத்த இதயத்தோடு வெளியே வந்தேன்.

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு — குத்து விளக்கொன்றை ஏந்தியபடி மாடிப் படி ஏறிக் கொண்டிருந்த தண்டபாணி என்னைப் பார்த்ததும் நின்றான். அதே வேகத்தில் இறங்கி என்னை நோக்கி வந்தான்.

தண்டபாணி பின்தொடர ஸ்டோர்ரூமின் பின்பக்கத்தை நோக்கி நடந்தேன். குறுகலான மாடிப்படிகளின் வளைவில் — நண்பனுடன் நின்று கொண்டிருந்த சிவராஜுக்கும் கண்களால் சைகை செய்தேன், பின்னால் வரும்படி.

மூவரும் ஸ்டோர் ரூமின் பின்பக்கத்தை அடைந்தோம்.

''என்னப்பா என்ன சொன்னார் சம்பந்தி?'' — தண்டபாணி ஆர்வமாய்க் கேட்க — சிவராஜ் ஒன்றும் புரியாமல் என்னைப் பார்க்க —நான் சொன்னேன் கோபமான குரலில். ''கவிர்தாவுக்கு ஒரு வருஷம் கழிச்சுச் செஞ்சு போடறதா சொன்ன அந்த நெக்லஸை இன்னும் மூணு மாசத்திற்குள்ளார செஞ்சு போட்டுடச் சொல்றார் சம்பந்தி... இவங்க சொன்னபடி யெல்லாம் கர்ணம் போடணும் போலிருக்கு...''

''மூணு மாசத்திலே அப்படியென்ன அவசரமாம்?...'' சிவராஜ் சீறினான்.

''உம். சின்ன மகனுக்குக் கல்யாணமாம்... ஜட்ஜ் வீட்டுச் சம்பந்தமாம்... கவிர்தா நெக்லஸோட கல்யாணத்திலே நின்னு மதிப்பாக இருக்குமாம்...''

தண்டபாணி காது சிவக்கக் குமுறினான். ''அவ்வளவு மதிப்புப் பார்த்தா அவங்களே நெக்லஸ் பண்ணிப் போட்டுடுமே...''

''நீங்க என்னப்பா சொன்னீங்க?'' — சிவராஜ் கேட்டான்.

''யோசிச்சுச் சொல்றதா சொல்லிட்டு வந்தேன்...''


''இதிலே யோசிக்க என்னப்பா இருக்கு... சொன்னபடி ஒரு வருஷம் கழிச்சுத் தான் நெக்லஸ் செஞ்சு போடுவோம்னு அடிச்சுச் சொல்லிட வேண்டியதுதானே...?''

திடீர்னு சிவராஜ் தாழ்ந்த குரலில் சொன்னான்.

''அப்பா...! கவிர்தா வர்றா...''

நான் திரும்பினேன்.

கவிர்தா பட்டுப்புடவை சரசரக்க எங்களை நோக்கி வரத் துவங்கினாள்.



ராமர் வில்லை வைத்துக்கொண்டு கடல் முன்பு நின்றார். கடல் வழி விட்டது. எப்படி?

வேர் தேர் சல் எ வில் தேர் சல் எ வே. —முரளி.

நான், தண்டபாணிக்கும் சிவராஜுவுக்கும் சொன்னேன்:

''டேய்!... விஷயம் கவிர்தாவுக்குத் தெரிய வேண்டாம்... ஏற்கெனவே அவ மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மேலே ரொம்பவும் காரமா இருக்கா... ஜானவாச காரையும் — நாம கொடுத்த காப்பியையும் அவங்க கிண்டல் பண்ணினதைப் பொறுத்துக்க முடியாமல் எப்படிச் சத்தம் போட்டாள்?... இந்த நெக்லஸ் விவகாரம் அவளுக்குத் தெரிஞ்சதோ... எரிமலையாயிடுவா... கோபத்திலே ஏடாகூடமா பேசி... அது அவங்க காதில விழுந்துட்டா ஆபத்து...''

''சரிப்பா...'' தண்டபாணி ஆமோதித்தான் நான் சொன்னதை. ஆனால் சின்னவன் சிவராஜ் கேட்பதாக இல்லை. ''எதுக்காக மறைக்கணும்? தெரியட்டுமே அவளுக்கும்... அந்த வீட்டிலே இருக்கப் போறவ அவதானே... அவளும் தன்னோட மாமனார் வீட்டுப் புத்தியைத் தெரிஞ்சுக்கட்டும்...''

கவிர்தா நெருங்கினாள் எங்களை. ''என்னப்பா... மூணு பேருமாய் இங்க நின்னு பேசிக்கிட்டிருக்கீங்க...?''

விஷயத்தைச் சொன்னேன் அவளிடம்.

—சொல்லிவிட்டு எரிமலையின் சீறலை எதிர்பார்த்து நின்றேன்.

கவிர்தா ஒருவிநாடி உதட்டைக் கடித்தாள். தாழ்ந்த குரலில் நிதானமாய்ச் சொன்னாள்.

''அவர் சொல்றதிலேயும் நியாயம் இருக்கப்பா... கொஞ்சம் முன்னாடி செஞ்சு போடச் சொல்றார் அவ்வளவுதானே...?''

தண்டபாணியும் — சிவராஜுவும் அதிர்ந்து போய் நிற்க —

நான் சரேலெனத் தலையை உயர்த்தினேன்.

கவிர்தாவின் கழுத்தில் பசும்பொன் நிறத்தில் தொங்கிய தாலிக் கொடி கண்ணில் பட்டது. நெஞ்சிலும் ஏதோவொன்று சுரீரென உறைத்தது.

கவிர்தா இன்று காலையிலிருந்து அவர்கள் வீட்டுப் பெண் என்பதைச் சட்டென்று உணர்ந்தேன்.

விக்கிரமன்

தியாக வல்லபன்

அத்தியாயம் 11

விதியின் எழுத்து

ஒரு நெறியுடைப் பெம்மா என்று புகழ்ந்து போற்றப்படும் இராஜராஜ சோழனின் சகோதரி அறம் வளர்ச் செல்வி தன் மகனை தியாகனைப் பழையாறை அரண்மனையில் சந்தித்த போது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தன் தாயைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தால் எவ்வாறு பாசம் பொங்கிப் பாயுமோ அது போன்ற உணர்ச்சியைத் தியாகன் அடைந்தான். தாயின் முகத்தில் முன் எப்போதுமில்லாத மகிழ்ச்சி மலர் பூத்து நிற்பதைக் கண்டான். விழிகளில் பாச உணர்ச்சியுடன் பெருமை உணர்வும் பொங்கி வழிவதைக் கண்டான்.

''தியாகா, வந்து விட்டாயா; நீ வருவதை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்'' என்றாள் செல்வி. அவனைத் தழுவி உச்சி முகர்ந்து, கண்ணேறு கழித்துக் கன்னத்தில் முத்தமிட்டு மஞ்சத்தில் அமரச் செய்து, அவன் வழிநடைப் பயண விவரங்களைக் கேட்டறிந்த போது, தியாகன் ஆவலை அடக்க முடியாமல், ''தாயே! உடனே வருமாறு என்னை வரவழைத்த காரணத்தைச் சொல்லுங்கள். நான் செய்ய வேண்டிய பணி ஏதாவது இருப்பின் உடனே சொல்லுங்கள். நிறைவேற்றிவிட்டு நான் உடனே வேங்கிக்குத் திரும்ப வேண்டும். உதவி செய்ய அங்கு படையே திரண்டிருக்கிறது. நான் வேங்கியின் மன்னனாகவேண்டும் என்ற தங்கள் ஆசையை நான் நிறைவேற்றும் தருணம் வந்து விட்டது'' என்றான்.

செல்வி பெருமிதம் ததும்பும் பார்வையுடன், ''வல்லபா, என் பிரார்த்தனை பலித்து விட்டது. என் ஆசை நிறைவேறப் போகிறது. வேங்கிக்குத் திரும்பிச் சென்று அரச பதவியை அடைய வேண்டிய நிலைமை மாறி விட்டது'' என்றாள்.

வல்லபனுக்குப் புரியவில்லை. ''நான் வேங்கிக்குத் திரும்ப வேண்டாமா? போரிட வேண்டாமா? என்ன காரணம்? சொல்லுங்கள் தாயே, சொல்லுங்கள்'' என்று பரபரத்தான்.

''சோழ நாட்டின் அரியணை உனக்காகக் காத்திருக்கிறது. தொண்ணூற்று விழுப் புண்களைப் பெற்ற விஜயாலய சோழதேவர் அமர்ந்திருந்த சோழ சிங்காதனம் உனக்குக் கிடைக்கப் போகிறது'' என்று செல்வி கூறும்போது மகிழ்ச்சியால் வார்த்தைகள் வராமல் தடைப்பட்டன.

வல்லபன் திடுக்கிட்டான். ''சோழ நாட்டு அரியணையா? அம்மா, என்ன சொல்கிறீர்கள்? கனவில் நடக்கும் செய்தியைப் போல் ஏதோ கூறுகிறீர்கள். அதற்காக என்னைப் பல காத தொலைவிலிருந்து வரவழைத்தீர்களா?'' என்று கேட்டான். குரலில் நம்பிக்கைக் குறைவு இருந்தது.

''இல்லை... இல்லை... கனவு இல்லை... கற்பனையில்லை... உண்மைதான், மகனே! நாள்தோறும் நான் வணங்கித் துதித்த அம்பலவாணன் அருள் புரிந்துவிட்டான். உனது தாய் மாமன் விரும்பி உனக்கு அளிக்கும் பதவி...'' என்று செல்வி, நடந்த செய்தியை விவரமாகக் கூறினாள்.

''இளவரசுப் பட்டத்தை உனக்குச் சூட்ட அவர் விரும்புகிறார். சோழ நாட்டு முதல் அமைச்சரும் திருக்கோவலூர் மலையமானும் அப்போது உடனிருந்தார்கள். உன்னை உடனே வேங்கியிலிருந்து வரவழைக்குமாறு கூறினார்கள். நான் உன்னைக் கேட்காமலேயே மன்னரிடம் சம்மதம் தெரிவித்து விட்டேன். ஆனால்...'' என்று கூறிச் செல்வி நிறுத்தினாள்.

தாய் சொல்வது கற்பனையன்று, கனவின் நிகழ்ச்சி அன்று உண்மைதான் என்று அறிந்தான் தியாகன். சோழ நாட்டின் மாபெரும் இளவரசுப் பட்டம் மிக எளிதில் இளம் வயதில் தனக்குக் கிடைக்கிறது என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

''வல்லபா, என்ன யோசிக்கிறாய்?'' என்று தாய் அவன் முகத்தை உற்று நோக்கியவாறு கேட்டாள்.

''சோழ நாட்டு இளவரசுப் பொறுப்பு என்பது சாதாரணமானதா? ஆதித்த சோழரும், சுந்தர சோழரும் அருள்மொழிவர்மரும், இராசேந்திர சோழரும், குலோத்துங்க மாமன்னரும் இளவரசராயிருந்து தங்கள் திறமையை, வலிமையைப் புலப்படுத்திய இடத்

தில் இந்த எளிய வல்லபனால் அந்தப் பொறுப்பை நிர்வகிக்க முடியுமா? என்று சிந்திக்கிறேன்'' என்று வல்லபன் கூறினான்.

தாய் செல்வி சிரித்தாள். ''மகனே! மேலைச் சாளுக்கிய நாட்டின் அரசராக முயலும் நீ இங்கே இளவரசர் பதவியை ஏற்க ஏன் அஞ்சுகிறாய்? நானோ நீயோ கனவில் கூட எதிர்பாராத பதவி இது. உன்னுடைய திறமையை மன்னர் கவனித்து வந்திருக்கிறார். உன்னுடைய திறமை, வலிமை அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. பெற்ற தாய்க்கு மகனின் திறமை தெரியாதா? இப்போது அதைப் பற்றிய கருத்து வேற்றுமை யாரிடமும் இல்லை. ஆனால் நான் வாக்குறுதி ஒன்று கொடுத்திருக்கிறேன். அதை நீ நிறைவேற்ற வேண்டும்'' என்றாள் செல்வி.

''தாயே! தாங்கள் கொடுத்த வாக்குறுதி என்னவென்று இன்னும் என்னிடம் சொல்லவில்லையே'' என்று வல்லபன் கேட்டான்.

''மகனே! எனது சகோதரரும், உன் தாய் மாமனுமான இராஜராஜ சோழ தேவருக்கு இவ்வளவு காலம் வாரிசை நிலைநாட்டக் குழந்தை இல்லை. ஓராண்டுக்கு முன்பு அவருக்குக் குழந்தை பிறந்தது. ஓராண்டு நிறைவேறுவதற்குள் மற்றொரு குழந்தையும் பிறந்து விட்டது. ராஜ குருவின் யோசனையின் படி, சக்கரவர்த்தி எட்டாண்டுகள் அந்தக் குழந்தைகளைப் பார்க்கவே கூடாதாம். ஆனால் உடனே சோழ நாட்டின் இளவரசுப் பட்டத்திற்குரியவரை நியமித்தாக வேண்டும். ஒருவேளை ஈசன் செயலால் துரதிருஷ்ட வசமாகச் சக்கரவர்த்திகளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் நீதான் சோழ நாட்டுச் சக்கரவர்த்தி. ஆனால், இராஜராஜரின் குழந்தைகள் தக்க வயதை அடைந்து விட்டால் அவர்களிடம் நாட்டை ஒப்படைத்து விட வேண்டும். இந்த உறுதிமொழியைச் சக்கரவர்த்தி என்னிடம் கேட்டார் முதல் அமைச்சர் பெருமான்



நம்பிப் பல்லவரையரும் அவ்வாறே கேட்டார். குழந்தைகளின் பாட்டன் திருக்கோவலூர் மலையமான் ஒருபடி மேலேயே உறுதிமொழி கேட்டார். 'குழந்தைகளுக்குச் சோழ அரியணையை விட்டுக் கொடுப்பதாக உறுதி கொடுத்தால்தான் இளவரசர் பொறுப்பை இப்போது ஏற்கலாம். அந்தச் சம்மதத்தை வல்லபன் இப்போதே சத்தியம் செய்து கூறியாக வேண்டும்' என்று...'' எனக் கூறிச் செல்வி நிறுத்தினாள்.

வல்லபன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். ''தாயே! தாங்கள் அதற்கு என்ன மறுமொழி சொன்னீர்கள்?'' என்று மெல்லக் கேட்டான்.



நண்பர்: இதுவரை நான் கதாநாயகன் வில்லன் சண்டையில் கத்திச் சண்டை குத்துச் சண்டைகளைத்தான் சேர்த்திருப்பீர்கள். இப்போ பிரசவச் சண்டையைச் சேர்த்திருக்கிறீர்களே ஏன்?

தயாரிப்பாளர்: தூங்குகிற ரசிகர்களை எழுப்பத்தான். இந்தச் சத்தம் கேட்டாலாவது எழுந்திருந்து படத்தைப் பார்க்கமாட்டார்களா?

— லலிதா செல்லப்பா.

''என் மகனை உறுதிமொழியை ஏற்குமாறு நான் கூறுகிறேன். அவன் என் சொல்லுக்குக் கட்டுப்படுவான் என்று வாக்குக் கொடுத்துவிட்டேன்'' என்று கூறி மகனின் முகத்தில் எழும் பிரதிபலிப்பை உற்று நோக்கினாள் செல்வி.

வல்லபன் சிரித்தான். கடகடவென்று சிரித்தான். சிரிப்பை ஒருவாறு அடக்கி, ''தாயே! இதென்ன விசித்திரமான வாக்குறுதி? இதுவரையில் சோழ நாட்டிலே நடைபெறாத ஒரு செயலைச் செய்யுமாறு என்னை வற்புறுத்துகிறீர்களே!'' என்று அவன் கேட்டான்.

''ஏன்! இதற்கு முன்பு நடந்திருக்கிறது! உனக்குப் பழைய வரலாறு தெரியுமா? பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டில் தஞ்சையில் பராந்தக சோழர் ஆண்டு கொண்டிருந்தார். அவருக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி என்று நான்கு புதல்வர்கள் இருந்தார்கள். மூத்த மகன் இராசாதித்தன் போரில் கொல்லப்பட்டு வீரசுவர்க்கம் அடைந்தான். அவனுக்குப் பிறகு கண்டராதித்த தேவர் அரியணை ஏறினார். அவர் சிவபக்தி மிக்கவர். பல ஆண்டுகள் கழித்து அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சில நாட்களிலேயே தன் மகன் சிறுகுழந்தை என்பதால் தன் இளைய சகோதரன் அரிஞ்சயனுக்குக் கண்டராதித்தன் பட்டம் சூட்டினார். மதுராந்தகன் தக்க பருவம் அடைந்ததும் அவனிடம் அரசு உரிமையைத் தருமாறு கூறிய கண்டராதித்தர் சேர நாட்டிற்கு சிவத் தலங்களைத் தரிசிக்கச் சென்றார். பிறகு அங்கிருந்து மேற்குத் திசையிலுள்ள நாடுகளுக்குக் கலமேறிப் புறப்பட்டார். பல ஆண்டுகள் திரும்பியே வரவில்லை. அவரைப் பற்றிய செய்தியே தெரியவில்லை. இளவரசுப் பட்டம் சூட்டப்பட்ட அரிஞ்சயன் அரசரானார். என்ன துர்ப்பாக்கியம் தெரியுமா, சில ஆண்டுகளிலேயே அரிஞ்சயன் போர் ஒன்றில் உயிர் துறந்தார்...''

''பிறகு என்ன நேர்ந்தது?'' வல்லபன் ஆவலுடன் கேட்டான்.

''அது ஒரு, பெரிய கதை! பிறகு சொல்கிறேன். சோழ நாட்டில் இளவரசுப் பதவிக்கு எந்த விதத்திலும் போட்டி ஏற்படாமல் முதல் அமைச்சரும், குறுநில மன்னர்களும் ஒழுங்குபடுத்தி விடுவார்கள். இப்போதும் அவ்வாறே குழந்தைகள் பெரியவர்களான பிறகு அவர்களிடம் ஒப்படைக்க நீ சம்மதித்தால் இளவரசுப் பட்டத்தை ஏற்கலாம். உன் முடிவு என்ன?'' என்று செல்வி கேட்டாள்.

வல்லபன் மௌனமாயிருந்தான். பிறகு அவன் சொன்னான்: ''தாயே! எனக்குப் பழைய கதை தெரியும். அரிஞ்சயன் மகன் மதுராந்தகன் சிறு குழந்தையாயிருந்தார். ஆனால் அவருக்கு இளவரசுப் பட்டம் கிடைக்கவில்லை. அரிஞ்சயன் மகன் சுந்தர சோழரும், அவர் மகன் ஆதித்த கரிகாலனும் பிறகு அவரது சகோதரர் அருண்மொழியும் தொடர்ந்து இளவரசர்களாக விளங்கினார்கள். இப்போது மட்டும் என்னை விட்டுக் கொடுக்குமாறு ஏன் உறுதி மொழி கேட்கிறார்கள்?'' என்று வல்லபன் கேட்டான்.

செல்வி திடுக்கிட்டாள். தான் சொன்னவுடன் அப்படியே தன்மகன் ஒப்புக் கொள்வான் என்று நினைத்தது போக அவன் விவாதத்தில் இறங்குகிறானே என்ற கவலை கொண்டாள்.

ஆனால் அவள் கவலையைப் போக்க வந்தது போல் முதல் அமைச்சர் பெருமான் நம்பிப் பல்லவரையர் ''தக்க சமயத்தில் பதவியை விட்டுக் கொடுத்த பழைய கதையை நான் சொல்கிறேன்'' என்று கூறிக் கொண்டே அங்கே வந்தார்.

இப்போது போர்ன்விடா ஒரு ஒலிம்பிக் பானம்



Olympic-80
MOSCOW



உங்களுக்குப் பிடித்த போர்ன்விடா, 1980 மாஸ்கோ ஒலிம்பிக்கின் நிறுவனக் குழுவினரிடமிருந்து இந்தியாவின் போஷாக்கு-உணவுப் பானமாகப் பாராட்டு முத்திரையை வென்றிருக்கிறது.

போர்ன்விடா, 1980 இந்திய ஒலிம்பிக் குழுவினருக்கு "அதிகாரபூர்வமாக வழங்கப்படுவதற்கான" தனிச் சிறப்பையும் பெற்றிருக்கிறது.

ஏன் போர்ன்விடா?

ஏனெனில் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் போஷாக்குச் சத்துக்கள் அனைத்தையும் கொண்டுள்ளது. ஒரு கப் சூடான பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா போடுங்கள். கிடைப்பது சுவைமிக்க போஷாக்கு தரும் பானம்.

உங்கள் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு வேளை போர்ன்விடா கொடுங்கள். அவர்கள் நாள்தோறும் ஆரோக்கியமாகவும் உற்சாகத்துடனும் விளங்கத் தேவையான போஷாக்கை அளிக்க. அவர்களுடன் ஈடு கொடுக்க உங்களுக்கும் போர்ன்விடா தேவை!

காட்பரிஸ்
போர்ன்விடா
ஊக்கம் ததும்பும் ஓயாத வாழ்வுக்கு

OBM/2927/TAM

அத்தியாயம் 12
நள்ளிரவில் உதவி!

இருள் பகலானதைப் போன்று எங்கும் வெளிச்சம். சிவந்த தீ நாக்குகள் இருளை விழுங்குவது போல் இருளை நோக்கி நீண்டன. 'ஹோ ஹோ' என்ற கூக்குரல் எங்கும் கேட்டது. பெண்களின் அபயக் குரல் பயங்கரத்தை அதிகரிக்கச் செய்தது. ஓடுபவர்களும், ஓடுபவர்களைத் துரத்துபவர்களும், ஓடுபவர்களை 'விடாதே, விடாதே' என்று கூக்குரலால் பயமுறுத்தப் பார்ப்பவர்களுமாக அந்த இரவின் பின் ஜாமத்தில் அந்த மாளிகை அல்லோலகல்லோலப் பட்டது. சோழ கேரளன் திருமாளிகையின் ஒரு பகுதி எரிந்து கொண்டிருந்தது.

செய்வதறியாது ஒரு கணம் குழந்தையை அணைத்துக் கொண்டு நின்ற அல்லியினருகே வந்த பெரிய பிராட்டி, "நீ ஏதோ கனவு கண்டு உறக்கத்தில் பிதற்றுகிறாய் என்று நினைத்தேன். உண்மையாகி விட்டதே" என்றாள். அந்த முதிய உடலிலும் நடுக்கம் இருந்தது. சிறிது நேரம் செய்வதறியாது இங்கும் அங்கும் நடந்தாள். பிறகு அல்லியின் அருகே வந்தாள். "அல்லி பயப்படாதே! நமது வீரர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள்" என்றாள்.

திடீரென்று மாளிகையைத் தாக்கி எரியூட்டச் சிலர் முயல்வதின் காரணம் பெரிய பிராட்டிக்குப் புரியவில்லை. 'கங்கை கொண்ட சோழபுரத்தைத் தாக்கும் பகைவர்கள் யார் இருக்கப் போகிறார்கள்' என்று யோசனை செய்யக்கூட பெரிய பிராட்டிக்கு அப்போது தோன்றவில்லை.

"ஏன் இப்படித் திடீரென்ற கலகம்? இடங்கை, வலங்கைப் படையினரின் கலகம் பல வருடங்களுக்கு முன்பு நடந்தது. மீண்டும் அப்படிக் கலகஞ் செய்பவர்கள் ஒருவருமில்லையே?..." என்று முணுமுணுத்துக் கொண்டாள் பெரியபிராட்டி.

"அம்மா, குழந்தைகளைத் தூக்கிச் செல்லச் சிலர் சதி செய்கிறார்கள்" என்று அல்லி வார்த்தைகள்முழுமையையும் சொல்லவில்லை.

மேல் மாடத்தை நோக்கிச் சிலர் ஓடி வரும் அரவம் கேட்டது. கீழ்த் தளத்திலுள்ளவர்களின் ஓலம் அல்லியை நடுநடுங்க வைத்தது.

"காப்பாற்றுங்கள்" என்று அல்லி கூவியவாறு இங்குமங்கும் ஓடினாள். இப்போது அனைவரும் விழித்தெழுந்து விட்டனர். பணிப்பெண்கள் செய்வதறியாது திகைத்தனர். அரச குலத்து உறவின் முறையோர்கள் என்ன நடக்கிறது, என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு மூலையில் பயந்து நின்றனர்.

அல்லி தொட்டிலிலிருக்கும் குழந்தைகளை எடுத்துக் கொண்டாள். இரண்டு குழந்தைகளையும் தோளில் சாய்த்துக் கொண்டாள். தூக்கம் கலைந்ததால் அவை வீரிட்டழுதன. படிக்கட்டுகளில் ஏறி ஓர் உருவம் அங்கே வந்தது. அந்த உருவத்தைத் தொடர்ந்து இரண்டு வீரர்கள். அல்லி அலறினாள் பயத்தால்.

"அல்லி!" என்று அந்த உருவம் குரல் கொடுத்தது. "பயப்படாதே, என்னைப் பின் தொடர்ந்து வா. ஒரு குழந்தையை என்னிடம் கொடு" என்றது அந்த உருவம்.


"நீங்கள்... நீங்கள்..." என்று அல்லி ஏதோ கேட்க வாயெடுத்தாள்.

"உம்... அதற்கெல்லாம் நேரமில்லை. பெரியபிராட்டியையும் மற்றவர்களையும் வீரர்கள் அழைத்துச் செல்வார்கள். நீ நீ என்னைத் தொடர்ந்து ஓட்டமும் நடையுமாக வர வேண்டும்" என்று கட்டளையிட்டது அந்த உருவம்.

சின்னஞ்சிறு கைகளும், கால்களும் பூவினும் மென்மையான மேனியும் கொண்ட சிறிய குழந்தையை அல்லி எடுத்துக் கொண்டாள். தொட்டிலிலிருந்த குழந்தையைத் தோளில் சாய்த்துக் கொண்டது அந்த உருவம். இரண்டு எட்டில் அந்த உருவம் விரைந்தது. அல்லியும் பின் தொடர்ந்தாள்.

மாளிகையைச் சுற்றி அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் நடுவில் இருந்த சிறு மண்டபமொன்றை அவர்கள் அடைந்தனர். மண்டபத்தின் நடுவே சுரங்கவழி திறந்திருந்தது. பூமியின் அடியில் இறங்கப் படிக்கட்டு இருந்தது. படிக்கட்டில் அகல் விளக்கு சிறு ஒளியை வீசிக் கொண்டிருந்தது. முன்பே பழக்கப்பட்டவர் போல் அல்லியை அழைத்துக் கொண்டு அந்த உருவம் சென்றது. சிறிது தொலைவு சென்றவுடன் தீவர்த்தியை ஏந்தியவாறு ஒருவன் நின்று கொண்டிருந்தான். சுரங்கப்பாதை மிகக் குறுகலாக இருந்தது. இயற்கையாகக் காற்று வீசுவதற்கு வழிவகைகள் செய்யப் பட்டிருந்ததால் மூச்சுத் திணறாமல் அவ்வழியில் செல்ல முடிந்தது. பின் தொடர்ந்து சிலர் வருவதும் சில கணத்திற்குள் புலப்பட்டது.

"நம்மை யாராவது பின் தொடர்கிறார்களா?" என்று அல்லி நடுக்கத்துடன் கேட்



துப்பாக்கி சுடுவதில் புகழ் பெற்ற நிபுணர் ஒருவர் ஒரு கிராமத்துக்கு வந்தார். அங்கே ஒவ்வொரு மரத்திலும் ஒரு வட்டமிட்டு அதன் நடு புள்ளியில் மிகச்சரியாகத் துப்பாக்கிக் குண்டு துளைத்திருப்பதைக்கண்டார். இவ்வளவு சரியாகத் துப்பாக்கி சுடும் நபர் யார் என்பதைத் தேடிக் கண்டு பிடித்து, தன் சந்தேகத்தை அவனிடம் கேட்டார்.

"அது ரொம்ப சுலபம் சார்!" அவன் சொன்னான். "முதலில் சுட்டுவிட வேண்டியது; அப்புறம் அதைச் சுற்றி வட்டம் போட்டு விட வேண்டியது; அவ்வளவுதான்."

—ஜோக்ஸ்.
—ராமு.

டாள்; இரு குழந்தைகளும் அழுது கொண்டிருந்தன.

''பெரிய பிராட்டியாரும், மற்றும் பெண்கள் சிலரையும் வீரர்கள் அழைத்து வருகிறார்கள்'' என்று மட்டும் குரல் கொடுத்தது அவ்வுருவம்.

தன்னைக் காப்பாற்றி அழைத்துச் செல்வதாகத்தான் அல்லி நம்பினாள். அவளால் அந்த உருவத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. தலையில் பெரிய முண்டாசுடன், போர்வையை முழங்கால்வரை மறைத்துக் கொண்டிருந்தாலும் மறைக்கப் படாத முகத்திலிருந்து அவளால் அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை.

சிறிது தொலைவு சென்ற பிறகு, ''அல்லி! உனக்குச் சந்தேகமிருக்கும் நான் குழந்தையைக் காப்பாற்ற வந்தவன்தானா என்று. உன்னிடமிருப்பதுபோன்ற அடையாள மோதிரம் என்னிடமும் இருக்கிறது இதோ பார்'' என்று தன் கை விரல்களைக் காட்டியது அந்த உருவம். அல்லியின் சந்தேகமும், பயமும் நீங்கின. ''இனி குழந்தைகளுக்கு அபாயம் இருக்காதல்லவா?'' என்று அல்லி கேட்டாள்.

''இனி என்ன?... எப்போதும் குழந்தைகளுக்கு அபாயம் இடையாது. ஆனால், குழந்தைகளைத் தக்க இடத்தில் மிகவும் கவனமாக வளர்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த மாளிகையினின்று வெளியே கொண்டு செல்கிறேன்'' ... நடந்தவாறு கூறியது அந்த உருவம்.

''மாளிகையினின்று பெரிய பிராட்டியை ஏன் அழைத்துச் செல்கிறீர்கள்?'' அல்லி கேட்டாள். அவள் கேட்டதற்கு உடனுக்குடன் அந்த உருவம் மறுமொழி கூறியது.

''இனியும் ஆபத்து ஏற்படாமலிருக்க.''

''அப்படியென்றால் கங்காபுரியில் அரச குடும்பத்திற்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லுங்கள்...''

''ஆமாம் எதிர்ப்பு வலுவடையலாம்....''

''நமது வீரர்களை எதிர்த்துக் கலகஞ் செய்யக் கூடியவர்களும் இருக்கிறார்களா?''

''குழந்தைகளைக் கொல்லத் திட்டமிட்டுள்ள கலகக் காரர்களை அடக்குவதற்குப் பழையாறையிலிருந்து ஏராளமான படை வீரர்கள் வந்து விட்டார்கள். இந்த நேரத்துக்குள் மாளிகையைத் திடீரென்று தாக்கியவர்களைச் சுற்றிவளைத்துப் பிடித்திருப்பார்கள். அனைவரையும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் பிடித்துவிட வேண்டும் என்பதற்காகவே விட்டுப் பிடித்தோம்...''

இதைக் கேட்ட அல்லி நடுங்கினாள். அவளுடைய கணவனின் கதி?

''ஒருவர் கூடத் தப்பிவிட மாட்டார்களல்லவா?'' அல்லியின் குரலில் பயத்துடன் கவலையும் இருந்தது.

''ஆமாம், உனது கணவன் கூட அகப்பட்டுக் கொண்டிருப்பான்'' என்று கூறியவுடன் அல்லி திடுக்கிட்டாள்.

இவர் யார்? எல்லாச் செய்திகளையும் தெரிந்து வைத்திருக்கிறாரே என்ற கவலை அவளைப் பிடித்தது. இவர் யார்?

''ஐயா, நான் தங்களைப் பார்த்தது கிடையாது. சகல விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்கிறீர்களே, தாங்கள்யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று அல்லி பயத்துடன் கேட்டாள்.

அவர் திரும்பிப் பார்த்தார். ''அல்லி! நீ என்னைப் பார்த்திருக்க நியாயமில்லை. நான் பல ஆண்டுகளாக இந்தப் பக்கமே வரவில்லை; நான்தான் இந்தக் குழந்தைகளின் பாட்டனார்'' என்று கூறினார் மலையமான்.

அல்லி அடைந்த வியப்பு ஒருவிதக் குரலோசையாக வெளிப்பட்டது.

''ஐயா! தக்க சமயத்தில் தான் வந்தீர்கள்'' என்று அல்லி நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

''தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தேன்; நான் காலையிலிருந்தே கங்காபுரியில் தான் இருக்கிறேன். சதிகாரர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தேன். சரியான சமயத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். என் பேயரர்கள் இருவரையும் அழித்து விடுவதின் மூலம் சோழ குலத்தையே நசுக்க முடிவு செய்து விட்டார்கள். முடியுமா? சோழ நாட்டை என் பெயரன் ஆளுவதினின்று தடுக்க ஒருவராலும் முடியாது'' என்றார்.

சுரங்கப்பாதை முடிவடையும் இடம் வந்து விட்டது. தீவர்த்தி ஏந்தியவன் படிக்கட்டுகள் வழியாக மேலே ஏறுவது தெரிந்தது.

''ஐயா, ஒரே ஒரு சந்தேகம் கேட்கலாமா? இந்த இரு குழந்தைகளும் சேர்ந்தே நாட்டை ஆளப்போகிறார்களா?'' என்று அல்லி கேட்டாள்.

(தொடரும்)



மலேசியா மழை!

கடந்த டிசம்பரில் குடும்பத்தோடு சென்னைக்குச் சென்றிருந்தோம். விட்டு விட்டுப் பெய்த பெருமழை எங்கள் பயணத் திட்டத்தைப் பெரிதும் பாதித்தது. அதனால் ஏமாற்றமும்எரிச் சலும் கொண்ட என் ஐந்து வயது மகன் அப்துல் கனி ''என்ன அப்பா, இது மலேரியா மழையா? விட்டு விட்டு வருகிறதே?'' என்றான். டாக்டரின் மகன் என்பதால் அதே வழிச் சிந்தனை அவனுக்கு வருவது குறித்து அனைவரும் மகிழ்ந்து சிரித்தோம்

சயத் இப்ராஹிம்.

இயக்குனருக்குரிய இலக்கணம்!

"எனது சொந்தத் திரைப்பட நிறுவனமாகிய முக்தா பிலிம்ஸ் சார்பில் எடுக்கப்பட்ட படங்கள் பல... அவற்றில் என்னைக் கவர்ந்த படங்கள் உள்ளன. என்றாலும் நான் வேறு தயாரிப்பாளர்களுக்கு இயக்கிக் கொடுத்த படங்களில் எனக்குப் பிடித்த படங்களைப் பற்றி இங்கு குறிப்பிடுவதே நாகரீகம் என்று கருதுகிறேன். எனவே ''பனித்திரை''யில் தொடங்கி ''அந்தமான் காதலி'' வரை நான் எடுத்த சொந்தப் படங்களை விட்டுவிட்டு வெளியாருக்காக நான் இயக்கிய மூன்று படங்கள் முறையே (1) ''சினிமா பைத்தியம்'' (2) ''பலப்பரீட்சை'' (3) ''ஸ்ரீராம ஜெயம்'' ஆகிய மூன்று படங்களில் ''பலப்பரீட்சை''யைப் பற்றியே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.''

''நீங்கள் சிறந்த படம் என்று நினைக்கும் இதன் கதை என்ன?''

''கணவனின் வருமானம் போதாது என்று சதா அலுத்துக் கொண்டிருக்கும் ஒரு மனைவி, சந்தர்ப்பம் ஏற்பட்டால் கணவனைவிட அதிகமாகச் சம்பாதித்துக் காட்ட முடியும் என்று நினைப்பவள்! இப்படி ஒரு பாத்திரம். அதற்கு மாறாகக் கணவனோ உள்ள வருமானத்தை வைத்துக் கொண்டு மனைவியால் சிறப்பாகக் குடும்பம் நடத்தத் தெரியவில்லை யென்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் தன்னால் திறமையாகக் குடும்பம் நடத்திக் காட்ட முடியும் என்றும் நினைப்பவன். இந்த இரண்டு கதாபாத்திரங்களின் மோதலே கதை. இன்றைய மத்தியதர வர்க்கக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் அன்றாடப் பிரச்னை இது. இந்த அடிப்படைக்கருவை வைத்துக்கொண்டு மிக உயர்ந்த திரைக்கதையை அமைத்தோம்; எடுத்த பிரச்னையை அழகாகவும் விரசமில்லாமலும், தீர்மானத்துடனும் கதையை விவரித்தோம். பலப் பரீட்சையின் மூலக் கதையைக் கொடுத்தவர் நண்பர் கலைஞானம். திரைக் கதை வசனம் எழுதியவர் தூயவன்.''

''உங்களைக் கவர்ந்த காட்சி எது?''

''ஒன்றல்ல, பல. கணவனின் அலுவலக மானேஜர் விருந்துண்ண வருகிறார் என அறிந்த மனைவி வகை வகையாகச் சமையல் செய்கிறாள். அவர்கள் சாப்பிட வருவதற்கு முன்பு தன் குழந்தைக்கு ஏதோ சிக்கல் என்று கேள்விப்பட்டு வெளியே ஓடுகிறாள். திரும்பி வந்து பார்க்கும்போது விருந்துக்குச் சமைத்து வைத்திருந்த உணவுகளையெல்லாம் ஒரு நாய் தின்று கொண்டிருப்பதைப் பார்த்து அவள் தவித்த தவிப்பு — அதைத் தொடர்ந்து அவள் கணவன் வர இருவருக்கும் ஏற்படும் மோதல் மிகச் சுவையான காட்சி.

'''எனக்குக் குழந்தைகளைக் காப்பாத்தத் தெரியாதா? குடும்பத்தை நிர்வகிக்கத் தெரியாதா? என்று சவால் விடுகிறான் கணவன். குழந்தையைக் குளிப்பாட்டி உடை உடுத்திப் பள்ளிக்கூடம் அனுப்ப முயல்கிறான்; குழந்தைக்கு பூட்ஸ் போட்டு விடுகிறான். ஏற்கெனவே அந்த பூட்ஸில் ஒரு கருந்தேள் புகுந்திருக்கிறது. இதை அறியாத கணவன் அந்த பூட்ஸை எடுத்துக் குழந்தைக்கு மாட்டி விடுகிறான். தேள் கொட்ட, குழந்தை கதற, அப்போதும் உணராமல் மீண்டும் பூட்ஸைப் போட்டுவிட கொட்டகையே சிலிர்த்து நின்ற காட்சி இது! இப்படிப் பல காட்சிகளைக் கொண்ட சிறந்த படம் இன்று அரசின் பாராட்டைப் பெற்றுள்ளது!''

''ஆனால் இப்படம் சரியாக ஓடவில்லையே?'' என்று ஒரு கேள்வியைத் தொடுக்கிறேன்.

''உண்மைதான். தயாரிப்பாளர் வேணு செட்டியார் என் நிறுவனத்தில் வளர்ந்தவர். இன்று சிறந்த படம் என்று அரசால் பாராட்டப்படும் 'பலப்பரீட்சை'யை அன்று வியாபாரமே செய்ய முடியாமல் பெரிய பொருளாதாரச் சிக்கலில் சிக்கித் தவித்தார். அது அவர் குற்றமல்ல. நல்ல படங்கள் எடுக்க வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு நாடு கொடுக்கும் தண்டனை அது.''

''அப்படியானால் நல்ல படங்கள் எடுப்பதுதான் எப்படி?''



⌘ 'பலப்பரீட்சை'ப் படத்தில் ஜெய் கணேஷ், பிரமீளா



ஏ.ஜகன்னாதன் பேட்டி

''லட்சம்பேர் லாட்டரிச் சீட்டு வாங்கினால் அத்தனை பேர் இழப்பிலும் ஒருவன் லாபம் பெறுகிறான். அது போலத்தான் நல்ல படங்கள் எடுப்பதும். பத்து நல்ல படங்கள் எடுத்தால் ஒன்பது படங்கள் தோல்வியடைவதோடு மட்டுமில்லாமல் சம்பந்தப்பட்ட தயாரிப்பாளரிலிருந்து கடைசி ஆபீஸ் பாய் வரை வருமானமில்லாமல் பெயருமில்லாமல் போய் விடுகிறது. யாராவது ஒருவருக்குப் பலன் கிடைக்கிறது. இந்த நிலையில் 'நீங்கள் நல்ல படங்கள் மட்டுமே எடுங்கள்' என்று கூறுபவர் எந்த அளவு நியாயமானவர்கள்?''

''கலையம்சம் பொருந்திய படங்களை ஏன் அவ்வளவாக எடுப்பதில்லை?''

''எல்லா வியாபார நோக்கங்கள் கொண்ட படங்களுமே கலையம்சம் இல்லாத படங்கள் என்று கருதப்படுவது தவறு. Action Picture என்று சொல்லப்படும் அடிதடி, செக்ஸ் படங்கள், முழுக்க முழுக்கக் கலைநுணுக்கமே இல்லாத வியாபாரப் படங்கள், வேறுவிதமான வியாபாரப் படங்களும் உள்ளன. அவை Social Films with great Themes. இவை வெளிப் பார்வைக்கு வியாபாரப் படங்கள் போலத் தென்பட்டாலும் நல்ல நோக்கங்களும் கலையம்சமும் கொண்டதாக அமைவதன் மூலம் தங்கள் தரங்களை உயர்த்திக் கொள்கின்றன. இது தான் சாந்தா ராம், பிமல்ராய், ரிஷிகேஷ் முகர்ஜி ஆகியோர் பாணி. இதைத்தான் தமிழ் நாட்டில் பெரும்பாலான நாங்கள் பின்பற்றுகிறோம்.''

''எல்லோருமே இயக்குனராகி விட முடியுமா? அதற்குரிய இலக்கணம் என்ன?''

''சில அடிப்படைத் திறமைகள் உள்ள எல்லோரும் இயக்குனராகலாம். Film media வினுடைய டெக்னிகல் சென்ஸ், கதையைப் பற்றிய பூரண அறிவு, நடிப்புப் பற்றித் தெளிந்த முடிவுகள், மக்கள் ரசனை இந்த நான்கையும் தெரிந்து கொண்டவர்கள் டைரக்டராகலாம். தெரிந்து கொண்டவர்கள் என்று நான் குறிப்பிடும் போது உண்மையாகத் தெரிந்து கொண்டவர்களைச் சொல்கிறேன். தெரிந்து கொண்டதாகத் தங்களைத் தாங்களே நினைத்துக் கொண்டவர்களைப் பற்றிச் சொல்லவில்லை!''

''நீங்கள் சமூகக் கதையைத் தான் அதிகம் கையாள்கிறீர்களே, அது ஏன்?''

''கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் 100 சதவிகிதம் புரிந்து கொண்டு வாழ்ந்தால் இன்று நாட்டில் பல பிரச்னைகள் இல்லாமல் மறைந்து விடும். அதுமட்டுமல்ல, எல்லா விதமான செல்வங்களும் கொழிக்கும். ஆனால், 30 சதவிகிதம் தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கிறார்கள். 50 சதவிகிதம் கூட இல்லை. இதில் உள்ள பிரச்னைகளையும் சிக்கல்களையும் முடிந்த அளவுக்குச் சொல்லி எதையுமே தீர்க்க விரும்புகிறேன்!''

பேட்டி: சலன்



✖ 'பலப்பரீட்சை'ப் படத்தில் முத்துராமன், சுஜாதா.

கருணையானந்தன்



அவள் நினைவாக...

''ராணி...''

''... ...''

''ஏய்... ராணி'' — அம்மாவின் குரல்.

''ராணி!.. பெரிய்ய... ராணி.. பெயரைப் பார் பெயரை'' என்று முணுமுணுத்தபடி எழுந்து கொண்ட ராணி ''என்னம்மா... ஏன் கத்துகிறாய் கிடந்து'' என்று சலித்துக் கொண்டபடி சென்றாள்.

''என்ன செய்து கொண்டிருந்தாய்? — நான் கூப்பிட்டது கூடக் காதில் விழாமல்.''

''வேறென்ன... பல்லாங்குழி ஆட்டம் தான்'' என்று சிடுசிடுத்த ராணி ''ஏம்மா... எனக்கு ஏன் ரா—ணின்னு பெயர் வைச்சே. வேறே பெயரே கிடைக்கவில்லையாக்கும் உனக்கு?'' என்று கேட்டாள்.

''ஏன் அதற்கு என்ன வந்தது இப்போ?''

கையிலிருந்த குடையை விரித்துக் காட்டினாள் ராணி. ''மழை வரும் போலிருக்கிறது. கையிலெடுத்துக் கொண்டு போக நல்ல குடையில்லை. பேட்டிக்குப் போக முடிகிறதோ என்னவோ... சோற்றுக்கே தாளம் போடுகிற நிலை வந்தாயிற்று. வேலை கிடைக்கிற வழியாகத் தெரியவில்லை. பெயர் மட்டும் பெத்த பெயராக இருக்கிறதே. கொஞ்சம் கூடப் பொருத்தம் இல்லாமல். அதான் கேட்டேன்.''

அவள் தாயின் முகம் சட்டென்று வாடிவிட்டது.

''உன்னைப் பெற்றெடுத்து நான் ராணின்னு பேர் வச்சப்போ நம்ம வீடு அரண்மனையாட்டம்தான் இருந்தது. உங்க அப்பா நம்மைத் தவிக்கவிட்டுப் போன பிறகுதான் இந்தச் சோதனை எல்லாம். ம்... காலம் இப்படியே போகாதடி ராணி. 'சகட வாழ்க்கை' என் பார்கள். பழமொழி பொய்யாகாது. என்றாவது ஒருநாள் நீ ராணி போல் வாழத்தான் போகிறாய்'' என்றாள் பெருமூச்சுடன்.

வாழ்க்கையைச் சகடமாக உபமானப் படுத்தியதை ஏனோ ராணியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சகடம் ஒரே சீராக வல்லவோ சுழலும். ஆனால் வாழ்க்கையில் — சரிவது சுலபம். மேலே ஏறுவது...?

வெளியே வானம் முழங்கியது.

''சீக்கிரம் சாதத்தைப் போடு. பத்தரை மணிக்குப் பேட்டி. மழை வருவதற்குள் ஓடிப் போக வேண்டும்.'' — ராணி அவசரப்படுத்தினாள்.

அம்மா பிழிந்து வைத்த பழைய சாதத்தை மோர் விட்டுப் பிசைந்து வயிற்றை நிரப்பிக் கொண்டு எழுந்த ராணி கையகலக் கண்ணாடி முன் நின்று இப்படியும் அப்படியுமாக நகர்ந்து தவணை முறையில் தன்னைச் சரி பார்த்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

தெருவில் இறங்கி வேகமாக நடந்தாள்.

நிமிடங்கள் கரைந்தன.

வரமாட்டேன் என்று அடம் பிடித்தது பஸ். மழையோ வந்துவிடுவேன் என்று அச்சுறுத்தியது.

என் நண்பர் ஒருவருடைய அலுவலகத்தில் அவருடைய மேஜையின் மேல் 'எல்லோருடைய கண்களிலும் படும்படி வைக்கப்பட்டிருக்கும் வாசகம்:

''உங்களுக்குச் செய்வதற்கு ஏதுமில்லாவிடில் அதை இங்கே தயவு செய்து செய்ய வேண்டாம்.''

என். கே. சூரியநாராயணன்.

குழந்தை பிறக்கும் நேரமும் மழை வரும் நேரமும் யாராலும் கணிக்க முடியாது என்பார்கள். பஸ் வரும் நேரத்தை ஏன் அதில் சேர்த்துக் கொள்ளாமல் விட்டுவிட்டார்கள் என்று எண்ணிக் கொண்டாள் ராணி.

பி. யூ. ஸி.க்குப் பிறகு படிப்பைத் தொடர முடியாமல் விட்டுவிட்ட ராணி டைப் ரைட்டிங், சுருக்கெழுத்து படித்துத் தேறிய பின் இதுவரை சுமார் இருபது இடங்களுக்காவது விண்ணப்பம் போட்டிருப்பாள். அழைப்பு வந்த ஏழெட்டு இடங்களுக்கும் நேரடிப் பேட்டிக்குப் போய் வந்து விட்டாள்.

தன்னுடைய முயற்சி, தொடுவானை நோக்கிப் பயணப் பட்டவன் கதையாகி விடுமோ என்ற பயம் அவ்வப்போது தோன்றி அச்சுறுத்தும் போது மட்டும் கொஞ்சம் கலங்கிப் போவாள்.

''சொட்...''

—வலது கை மணிக்கட்டில் வந்து தாக்கியது ஒரு பெரிய மழைத்துளி.

வசமாக மாட்டிக் கொண்டோமா என்று ராணி பதை பதைக்கையில் தெய்வம் போல் வந்து காத்தது பஸ். மழைக்கும் 'அவளிடம் இரக்கம் இருந்திருக்க வேண்டும். அவளுக்காகத் தாமதித்துக் கொண்டிருப்பது போல் அவள் பஸ்ஸினுள் ஏறி மறைந்ததும் பலமாகப் பிடித்துக் கொண்டது மழை.

இனி கவலையில்லை.

இறங்க வேண்டிய இடத்தில் பஸ் ஸ்டாப் அருகில்தான் அவள் செல்ல வேண்டிய அலுவலகம் இருக்கிறது. மழை சுமாராகப் பெய்து கொண்டிருந்தால் கூட அதிகம் நனையாமல் தப்பியோடி விடலாம்.

எதிர் பிளாட்பாரத்தில் இரண்டு கட்டிடம் தள்ளி இருந்த அலுவலக முகப்பினுள் ஒதுங்கிக் கொண்டு குனிந்து முழங்கால் வரை நனைந்துவிட்ட உள்ளாடையைப் பிழிந்து, பிரித்து அவள் உதறிவிட்டுக் கொண்டிருந்த போது பேச்சு அரவம் கேட்டு நிமிர்ந்தாள்.


முதல் மாடியிலிருந்த அலுவலகத்திலிருந்து இரண்டு இளம் பெண்கள் பேசிக் கொண்டே படிக்கட்டில் இறங்கி வந்தனர். பகட்டான ஆடையணிந்திருந்த அவர்கள் மிக நாகரீகமாகத் தங்களை அழகு படுத்திக் கொண்டிருந்தனர்.

தனக்கும் வேலை கிடைத்துக் கையில் காசு பணம் புரளும்போது இப்படி அலங்காரமாக உடுத்திக் கொண்டு பஸ்ஸிலோ ஆட்டோவிலோ போய் இறங்கி நாலு இண்டர்வியூ பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற ஆத்திரம் ஏற்பட்டது ராணிக்கு.

அதே சமயம் தன் எண்ணப் போக்கில் ஊடாடிய பைத்தியக்காரத் தனமும் மெல்ல உறைத்தது அவளுக்கு.

ராணியின் ஆடை நன்றாகவே நனைந்து விட்டிருந்தது. சேலைத் தலைப்பை எடுத்து ஜாக்கட்டின் ஈரம் தெரியாதவாறு போர்த்திக் கொண்டு படியேறலானாள் ராணி.

'மானேஜிங் டைரக்டர் ஆசனத்தில் ஓர் இளைஞனைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டுப் போன ராணி வணக்கம் சொல்லக்கூட மறந்து நின்றுவிட்டாள். சாதாரண ஸ்டெனோ உத்தியோகமே தனக்குக் குதிரைக் கொம்பாய் இருக்கையில் இவருக்கு எப்படி! இந்த 27—28 வயதில் இத்தனை பெரிய பதவிகிடைத்தது என்று ஓடியது அவள் சிந்தனை.



ராணி உள்ளே வந்ததையோ உட்காரு வதற்கு அவனுடைய அனுமதி வேண்டித் தயங்கி நின்று கொண்டிருப்பதையோ அவன் —முரளி — கவனிக்கவேயில்லை. அவனுடைய கவனமெல்லாம் கையிலிருந்த ஆங்கில நாளித ழில் இருந்தது.

ராணி மெல்லச் செருமினாள்.

ஏறிட்டுப் பாராமலேயே விரலை மட்டும் அசைத்து அவளை அமரும்படி சைகை செய் தான். அவன் எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள் ராணி. மேலும் தொடர்ந்த ஒரிரு நிமிட மௌனத்துக்குப் பின் இயந்திர கதியில் வந்தது கேள்வி:

''உன் பெயர்?''

''ராணி.''

வந்த பதிலைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டவன் போல் துள்ளியெழுந்த முரளி நிமிர்ந்து உட்கார்ந்தான். விழிகள் விரிய அவன் ராணியை நேர்ப் பார்வையாகப் பார்த்தபோது ராணிக்குச் சங்கடமாக இருந்தது.

தன் பெயரைக் கேட்டு அவன் ஏன் இத்தனை பரபரப்படைய வேண்டும் என்று ராணிக்கு விளங்கவில்லை.

நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்ட முரளி ராணியின் விண்ணப்பம் கட்டி வைக்கப்பட்டிருந்த பைலை எடுத்துப் பார்த் தான்.

''ராணி — வயது 18 — பி. யூ. ஸி. — டைப் ரைட்டிங்: ஹையர் — கருக்கெழுத்து: லோயர் ஆனால் 100 வார்த்தைகள் வரை எழுத வரும் — முன் அனுபவம் இல்லை.''

மீண்டும் அவன் ராணியை ஏறிட்டுப் பார்த்த போது அவள் மேனி மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது.

மழையில் நனைந்துவிட்ட ஆடைகள், உள்ளே போன பழைய சாதம். இண்டர்வியூ பரபரப்பு. போதாக் குறைக்கு அறையிலிருந்த மின் விசிறி வேறு இப்படியும் அப்படியுமாகத் திரும்பிக் குளிர் காற்றை வாரியிறைத்துக் கொண்டிருந்தது.

யாராவது இந்த மின் விசிறியை நிறுத் தினால் தேவலை — ராணியின் பார்வை மின் விசிறி மேல் இருந்தது.

ராணி படும் அவஸ்தையைப் புரிந்து கொண்ட முரளி தானே எழுந்து போய் மின் விசிறி அவளை நோக்கித் திரும்பாதவாறு தடைபோட்டு விட்டு வந்தான்.

ராணி முரளியை நன்றியுடன் பார்த்தாள்.

மீண்டும் ஆசனத்தில் வந்தமர்ந்த முரளி அழைப்பு மணியை அடித்தான். உள்ளே வந்த பையனிடம் 'காப்பி' என்று சொல்லி ஆள்காட்டி விரலை மட்டும் உயர்த்திக் காட் டினான்.

ராணிக்கு ஒரு கடிதம் 'டிக்டேட்' செய் தான். சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு அதை அடுத்த அறையிலிருந்த டைப் ரைட்ட ரில் போய் டைப் செய்து வரும்படி சொன் னான்.

பணியை முடித்துக் கொண்டு அவள் மீண் டும் அறையினுள் நுழைந்த போது அவன் முன் போலவே நாளிதழில் லயித்துப் போயி ருந்தான்.

அப்படி அதில் அத்தனை தீவிரமாக எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்... படிக்கிறவர் போலவும் தெரியவில்லையே? என்று எண்ணிய படி டைப் அடித்த தாளை அவனிடம் நீட்டி னாள் ராணி.

அதை வாங்கி நோட்டம் விட்ட முரளியின் முகத்தில் திருப்தி நிலவியது. ராணியின் நெஞ் சில் நம்பிக்கை முளை விட்டது.

அப்போது டெலிபோன் கிணுகிணுத்தது.

''யெஸ்... முரளி ஸ்பீக்கிங்.''

—டெலிபோனில் உரையாடல் தொடர்ந் தது.

யாரோ முக்கியமான புள்ளி தனக்கு வேண்டிய பெண்ணுக்கு அந்த ஸ்டெனோ வேலையைப் போட்டுத் தர வேண்டுமென்று சிபாரிசு செய்வதற்காக என்று யூகித்துக் கொள்ள முடிந்தது ராணிக்கு.

முளைவிட்ட நம்பிக்கை கருகி அழிய 'நமக்கு வேலை கிடைத்தாற் போலத்தான்' என்ற எண்ணமும் 'ஆமாம்... கிடைத்து விடும் என்று நம்பியா வந்தோம்' என்ற சலிப்புமாக அவள் காத்துக் கொண்டிருந்த போது பையன் காப்பியைக் கொண்டு வந்து அவளிடம் நீட்டினான்.

அவசரமாக மறுத்த ராணி ''எனக்கு இல்லை... அங்கே'' என்று முரளியைச் சுட் டிக் காட்டினாள்.

''இல்லை... காப்பி உனக்குத்தான்'' என்று சைகை செய்துவிட்டுப் போனில் பேச்சைத் தொடர்ந்தான் முரளி.

முரளி காட்டிய பரிவில் நெகிழ்ந்து போனாள் ராணி. இங்கே அவளுக்கு எல்லாமே புதுமை யான அனுபவமாக இருந்தது. அவனுக்கு மனத்துக்குள்ளாகவே நன்றி தெரிவித்துக் கொண்டு காப்பியை வாங்கிக் கொண் டாள்.

காப்பி ஒரு மிடறு உள்ளே போனதும் குளிருக்கு மிகமிக இதமாக இருந்தது. மீண் டும் அவள் கோப்பையை வாயருகில் கொண்டு சென்ற போது முரளியின் டெலிபோன் பேச்சு அவள் கவனத்தைக் கவர்ந்தது.

''ஸாரி ஸார்... இப்போதுதான் ராணி என்ற பெண்ணுக்கு அப்பாயின்ட்மென்ட் ஆர்டரில் கையெழுத்துப் போட்டேன்...

ஃ எனது பெரிய தகப்பனார் ஒருவர் தமது பலசரக்குக் கடையில் தொங்க விட்டிருக்கும் வாசகம்:

''கடன் வாங்கிக் கடன் கொடுத்த வனும், மரம் ஏறிக் கைவிட்டவனும் செத்தான்.''

—கமுதி மணி.



இன்னொரு சந்தர்ப்பத்தில் அவசியம் செய்கிறேன்...''

திடீரென்று வந்து தாக்கிய இன்ப அதிர்ச்சியால் கோப்பையும் ஸாஸரும் கடகடவென்று தந்தியடித்துக் கொள்ள, நடுங்கும் கரங்களில் இனியும் வைத்திருந்தால் மேலே கொட்டிக் கொண்டு விடுவோம் என்று பயந்த ராணி காப்பியை மேஜை மேல் வைத்து விட்டாள்.

ராணியின் தவிப்பை நிதானமாக ரசித்த முரளி அவள் விண்ணப்பத்தில் குறிப்பெழுதிக் கையெழுத்திட்டுப் பையன் மூலம் செக்ஷனுக்கு அனுப்பி வைத்தான். ராணியையும் அவனுடன் போகச் சொன்னான்.


இரு கரம் கூப்பித் தாராளமாகவே அவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு வெளியே வந்தாள் ராணி.

தன்னிடம் முரளி காட்டிய அபரிமிதமான பரிவுக்கும், அத்தனை போட்டியிலும் முன் அனுபவமோ பிரமாதமான தகுதியோ இல்லாத தனக்கு அந்த வேலையை அளித்ததற்கும் அழுத்தமான காரணம் ஒன்று இருக்கத்தான் வேண்டும் என்று நினைத்தாள் ராணி. ஆனால் அந்தக் காரணம் என்னவென்று அவளுக்கு விளங்கவில்லை.

அறையை விட்டு ராணி வெளியேறிய அக்கணமே நாளிதழைக் கையிலெடுத்த முரளி விழிகளில் ஈரம் கசிய ஒருவிதத் தவிப்புடன் அதில் பார்வையைப் பதித்தான்.

அதில் 'நினைவு அஞ்சலி' என்ற தலைப்பின் கீழ் ஓர் இளம் பெண் புன்னகை செய்து கொண்டிருந்தாள். சென்ற ஆண்டு இதே நாளில் விபத்தொன்றில் உயிரிழந்த அவன் முரளியின் அன்புக் காதலி, பெயர்—ராணி!


6x6



இந்த வாரம் டைரக்டர் எஸ்.பி. முத்துராமன் தமக்குப் பிடித்த ஆறு ஊர்களைப் பற்றிக் கூறுகிறார்:

- சிங்கப்பூர்: எனக்குப் பிடித்தது இவ்வூரில் கடைப்பிடிக்கும் ஒழுக்கமும், சுத்தமும்தான். ரஜனி, அம்ரு சம்பந்தப்பட்ட காட்சியை மீண்டுமொரு முறை படமாக்க இரண்டு மைல் சுற்றிக் கொண்டு வந்தேன். இரவு இரண்டு மணிக்குக்கூட போலீஸ் இல்லாதிருந்தும் மக்கள் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்கிறார்கள். குப்பை போட்டால் ஐந்நூறு டாலர் அபராதம். சென்னையை நினைத்துக்கொண்டேன். பெருமூச்சுதான் வந்தது.


- ஹாங்காங்: சைவ உணவில் கூட மீன், முட்டை கண்டிப்பாக உண்டு. ''மீன் இல்லாத உணவு'' எனக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். கடலுக்குள் ஒன்றரை மைல் நீளம் பாதாளக் குகைச் சாலை போட்டுள்ளார்கள். அதில் தனியாக கார் ஓட்டிய அனுபவத்தை மறக்க முடியுமா? இந்த டன்னலில் ஆங்காங்கே டி. வி. காமிரா பொருத்தப்பட்டுள்ளது. கார் பழுதடைந்தால் டி. வி. மூலம் வெளியே போலீஸ் பார்ப்பதால் விரைவில் வாகனம் ரிப்பேர் செய்யப்படுகிறது.




- சிம்லா: இதமான குளிரில் சொர்கிடமுங்களைச் சாப்பிட்டுக் கொண்டே அழகிய இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கும் சுகமே அலாதிதான் போங்கள். 'அன்பே வா' படத்துக்காக திருலோகச்சந்தரின் உதவியாளர் என்ற முறையில் எம்.ஜி.ஆர். சரோஜாதேவியுடன் போயிருந்த சமயம், 'புதிய வானம் புதிய பூமி' பாடலைப் படமெடுத்தோம். விமானத்தில் திரும்பி வரும்போது ''சிம்லாவில் வெண்பனி பெய்தது'' என்ற செய்தி படித்த எம். ஜி. ஆர்., ''விஷயம் டில்லியில் நாம் இருக்கும்போதே தெரிந்திருந்தால் மீண்டும் சிம்லா திரும்பி இருக்கலாமே'' என்று வருத்தப்பட்டார்.



- கன்யாகுமரி: சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் எடுக்க நினைத்து மேகம் வில்லனாக வந்ததால் 'புவனா ஒரு கேள்விக் குறி' படத்தில் எடுக்க முடியவில்லை. அங்கு காந்தி அஸ்தி வைக்கப்பட்ட இடத்தை நோக்கி சூரிய ஒளி பட ஏற்பாடு செய்துள்ளார்கள். இதை முழுமையாக ரசித்தேன்.






- திருவனந்தபுரம்: கோவளம் கடற்கரையை ஒட்டி இந்திய சுற்றுலா ஹோட்டல் ஒன்று உள்ளது. அங்கு சர்வதேச மக்களையும் காண முடிகிறது. ஆனால் இதை எல்லோராலும் அனுபவிக்க முடியுமா? அறை வாடகையை நினைத்தால்... அம்மாடியோவ்!



- குற்றாலம்: இரவு பன்னிரண்டு மணிக்கு அமைதியான நேரத்தில் நண்பர்களோடு குளிக்கும் ஈஜூஜூப்பே தனிதான். ஒரு முறை போனால் வருடம் முழுவதும் தெம்பாக இருக்கிறது. பேட்டி: 'சிக்கி.'



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி



இடையில் நூறுபேர் அடங்கிய போர்ப் படை உருவாயிற்று. 'நூறு ரத்தினங்கள்' என அவர்கள் வர்ணிக்கப்பட்டனர். ஒவ்வொரு தமிழ் பேசும் மாவட்டத்திலிருந்தும் ஒருவர் இடம் பெற்றிருந்தார். பம்பாயில் வசதியான உத்தியோகங்களை ராஜிநாமா செய்து விட்டு வந்த ஏழு இளைஞர்கள், உத்தியோகங்களைத் தியாகம் செய்து விட்டு வந்த பொறி இயல் கல்லூரி விரிவுரையாளர் ஒருவர், ரயில்வே அதிகாரி ஒருவர் ஆகியோரும் இருந்தனர்.

இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தோரில் ஒருவர் எதிர்காலச் சுதந்திர இந்தியாவில் பத்திரிகை ஆசிரியரானார், மற்றொருவர் அயல் நாட்டுத் தூதரானார். இன்னொருவர் மத்திய அரசில் அமைச்சரானார். வேறு பலர் பல அரிய பெரிய பதவிகளை வகித்தனர்.

தஞ்சை கலெக்டர் ஜே. ஏ. தார்ன் ஐ. ஸி. எஸ்., கருகருப்பானவர், ராஜதந்திரி. 'பாத யாத்திரை படுதோல்வி அடையும்' என்று அவர் அரசுக்கு வாக்குறுதி தந்தார்! ஆனால் இதற்கு இரு நிபந்தனைகளும் விதித்தார். தஞ்சை ஜில்லாவுக்குள் ஸி. ஆர். நுழைந்ததுமே அவரைக் கைது செய்யத் தமக்கு அனுமதி வழங்க வேண்டும். பாத யாத்திரையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உணவளிப்பவர்களையும் வீட்டில் தங்க வைத்துக் கொள்பவர்களையும் குற்றவாளிகளுக்குப் புகலிடம் தருபவர்களாகக் கருதிக் கைது செய்யத் தமக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

''ராஜகோபாலாச்சாரியின், தலைமை இயக்கத்துக்கு மிகுந்த ஆதரவைப் பெற்றுத் தரும் என அஞ்சுகிறேன்'' என்று தார்ன் சென்னைக்கு எழுதினார். ''இடையன் நீக்கப்பட்டு விட்டால் பின்னர் ஆடுகளைச் சமாளிப்பதில் எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை.''

உண்ண உணவும் இருப்பிடமும் இல்லாமல் செய்து பாத யாத்திரிகர்களைச் சிதற அடிப்பதை நோக்கமாகக் கொண்ட தமது இரண்டாவது கோரிக்கை குறித்துத் தார்ன் தொடர்ந்து எழுதினார்: ''அவர்கள் மேன்மேலும் கஷ்டங்களையும் அசௌகரியங்களையும் அனுபவிக்குமாறு நான் கவனித்துக் கொள்கிறேன். வேதாரண்யத்தை ஒருவேளை அவர்கள் அடைந்து விட்டாலும் அந்த ஊரில் அவர்களுக்குத் தங்க இடமே கிடைக்காதவாறு செய்து விட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.''

அரசின் பிரதம காரியதரிசி ஸி. டபிள்யூ. ஈ காட்டன், புகலிடம் அளிப்போருக்குத் தண்டனை என்ற தார்னின் திட்டம் விரும்பத் தக்கது அல்ல என்றே கருதினார். ஆயினும் அரசு, புகலிடம் அளிப்போர்மீது நடவடிக்கை எடுக்கத் தார்னுக்கு அனுமதி வழங்கியது. அதே நேரத்தில் கலெக்டரின் முதல் நிபந்தனையை நிராகரித்தது.

ஸி. ஆர். காரணமாக அரசின் செல்வாக்குக்கு ஏற்படக் கூடிய சேதங்களை ஆட்சிபீடம் நன்கு உணர்ந்திருந்தது. தென்னகத் தலைவர்களிலேயே மிகுந்த திறமைசாலி, விட்டுக் கொடுக்காதவர் என்பது ஸி. ஆரைப் பற்றிய அரசின் கணிப்பாக இந்தக் கால கட்டத்தில் இருந்தது. ஆயினும் தார்னின் யோசனையை இப்போது ஏற்பது காரணமாக, லட்சியத்துக்காகக் கடும் துன்பத்தை அனுபவிக்கும் தியாகி என்ற பெரும்புகழை ராஜகோபாலாச்சாரிக்கு மிக எளிதாக அளித்து விட்டதாகும் என்றும் அரசு கருதியது. இவ்வாறு சுலபமாக அடையக்கூடிய புகழுக்குத்தான் காந்தியும் ஸி. ஆரும் ஆசைப்படுகிறார்கள் என்றும் அரசு நினைத்துக் கொண்டிருந்தது!

புகலிடம் தருவோருக்கு ஆறுமாத சிறைத் தண்டனையும் அபராதமும் உண்டு என்று எச்சரித்துத் தார்ன் துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து விநியோகிக்கச் செய்தார். தண்டோரா போடப்பட்டது. பத்திரிகைகளிலும் பிரசுரமாயிற்று. ஸி. ஆர். பதிலடி தந்தார்:

''சத்தியாக்கிரஹிகள் திறந்த வெளியில் படுக்கத் தயாராயிருக்கிறார்கள், தஞ்சை மண்


''என்ன வீட்டு வேலையெல்லாம் நீயே செய்யறே, வேலைக்காரி என்ன ஆனாள்?''

''கல்யாணம் செஞ்சுகொண்டு விட்டாள்.''

''யாரை?''

''என்னைப் பார்த்தால் தெரியலே?''

—இ. குப்புசாமி.



ணில் பட்டினி கிடந்து சாகவும் தயாராயுள்ளார்கள். நாங்கள் ஏற்கெனவே அறிவித்துள்ள எங்கள் திட்டத்தைப் பின்பற்றுவோம்!''

ஏப்ரல் 13ம்தேதி தமிழ் வருஷப் பிறப்பு அன்று அதிகாலை நேரம். இன்னும் விடியவில்லை. திருச்சி நகரம் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தது! ஆனால் தமிழ்நாடு காங்கிரஸின் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காரியதரிசி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனின் விசாலமான இல்லத்திலும் சுற்றியுள்ள தோட்டத்திலும் சலசலப்பு காணப்பட்டது.

சரியாக ஐந்து மணிக்கு நடுத்தர உயரமுள்ள ஓர் உருவம், மொட்டைத் தலையும் கையில் தடியும் தோளிலிருந்து நீண்டு தொங்கும் ஒரு பையுமாக வீட்டை விட்டு வெளியேறி வந்து சாலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றது. சீக்கிரமே அவருக்குப் பின்னால் வரிசைக்கு இருவராக 96 பேர் அணிவகுத்து நின்றார்கள். பெரும்பாலோர் காந்தி குல்லாய் அணிந்து கையில் தடி ஏந்தி இருந்தார்கள். எல்லாரும் அமைதியான பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்த போது இரு பெண்கள் — வி. ஆர்., டாக்டர் ராஜன் ஆகியோரது பெண்கள் — ஒவ்வொருவர் நெற்றியிலும் குங்குமத் திலகம் வைத்தார்கள்.



தப்பு தப்பு டாக்டர் ஸார்!

ராஜாஜி தம்முடைய நேரத்தை மட்டுமல்ல, மற்றவர்களும் தங்கள் நேரத்தை வீணாக்காமல் கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்துடையவர்.

ஒரு சமயம் சேலம் வந்த போது பிரபல டாக்டர் சுந்தரம் இல்லத்தில் ராஜாஜி தங்கினார். தமது வீட்டைத்தான் ராஜாஜி டாக்டர் சுந்தரத்துக்கு விற்றிருந்தார்.

காலை நேரம். சுந்தரம் விருந்தினரை டிபனுக்கு அழைத்தார். ராஜாஜி டாக்டரைப் பார்த்து 'எத்தனை மணிக்கு ஆஸ்பத்திரிக்குப் போகிறீர்கள்' என்று கேட்டார். டாக்டர் ஆஸ்பத்திரிக்குப் போகும் நேரம் சொன்னதும், ''பதினைந்து நிமிஷங்களுக்கு முன்பே போயிருக்க வேண்டுமே'' என்று வினவினார் ராஜாஜி. ''உங்களுக்கு டிபன் செய்வித்த பின்னர் போகலாம் என்று இருக்கிறேன்'' என்றார் சுந்தரம். ''நீங்கள் இருந்து தான் டிபன் தர வேண்டுமா? நீங்கள் அருகில் இல்லாவிட்டால் உபசரிக்க மாட்டார்களா? எத்தனை நோயாளிகள் தங்கள் வருகைக்காகக் காத்திருக்க இப்படி லேட் செய்யலாமா?'' என்று ராஜாஜி அன்புடன் கடிந்து கொள்ள, டாக்டர் அருகில் உள்ள தமது ஆஸ்பத்திரிக்கு உடனே விரைந்தார்.

அருகில் இருந்து அதிசயித்தவர்:
தோப்பூர் இராஜகோபாலன்.

அந்த அகாலவேளையிலும் நூற்றுக் கணக்கானவர்கள் இந்தப் போர்ப் படைத் தளம்பலைக் காணக் குழுமியிருந்தனர். பாத யாத்திரை வீரர்கள் உறுதியாக முதலடி எடுத்து வைத்து நடக்க ஆரம்பித்த போது, பூரண அமைதி நிலவியது. பார்வையாளர்கள் சிலரது முகங்களில் கண்ணீர் வடிந்தது. சில விநாடிகளுக்குப் பிறகு ஒரு பாடலின் இசையொலியைக் கேட்க முடிந்தது. ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது...'' என்று சத்தியாக்கிரஹிகள் பாட ஆரம்பித்திருந்தார்கள். இந்தப் பயணத்தின் போது அவர்கள் பாடுவதற்காகவே நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை இயற்றிய பாடல் அது.

வி. ஆர் சற்றுத் தூரம் நடந்த உடனேயே அவரிடம் அன்று காலைப் பத்திரிகை காண்பிக்கப்பட்டது. அது, ''சத்தியாக்கிரஹிகளுக்குப் புகலிடம் தரக் கூடாது'' என்ற தார்னின் உத்தரவைத் தாங்கி வெளிவந்திருந்தது. நிற்காமலும் நடையின் வேகத்தைக் குறைக்காமலும் வி. ஆர். புதிதாக ஒரு பதிலறிக்கையைக் கூற, பின்னோடு வந்த பத்திரிகை நிருபர்கள் நடந்தபடியே எழுதிக் கொண்டனர். தமது மக்களைப் பற்றியும் அவர்களது விருந்தோம்பும் பண்பு பற்றியும் ஒரு பிரிட்டிஷ் அதிகாரியைவிடத் தமக்கு நன்றாகத் தெரியும் என்றார் வி. ஆர். இந்த உத்தரவு பொது மக்கள் தங்களுக்கு அளிக்கவிருக்கும் வரவேற்பை அதிகரிக்கும் என்ற தமது கணிப்பினைச் சொன்னார். தொடர்ந்து, கலெக்டரின் பெயர் 'தார்ன்' என்பதால், கண்களில் விஷம ஒளி மின்ன, சிலேடையாக ''முன்னேறி வரும் விடுதலை அலையை முட்களும் புதர்களும் தடுத்து நிறுத்தி விட முடியாது'' என்றார்.

ஆரம்பத்தில், தார்னின் போர்த் தந்திரம் பலித்து விடும் என்றே தோன்றியது. பயணத்தின் இரண்டாம் நாளன்று கோவிலடியில் சத்திரத்துக்குள் இவர்கள் நுழைய முடியாதபடி கதவு சாத்தித் தாளிடப்பட்டு இருந்தது. தனியார் ஒருவரது இல்லத்துக்கு வருமாறு வி. ஆர். அழைக்கப்பட்டார். மற்றவர்கள் காவேரிப் படுகையில் உறங்கினார்கள்.

''எங்கு பார்த்தாலும் பரந்து விரிந்து இருக்கும் காவேரி எங்களுக்கு உற்ற நண்பனாகவும் தாயாகவுமே இருந்து உதவுகிறது'' என்று வி. ஆர். தம் குழந்தைகளுக்கு எழுதினார். ''அவள் எங்களுக்குத் தங்க இடமளிக்கிறாள், துணி துவைத்துக் கொள்ள உதவுகிறாள், தனது மணற் படுகையில் ஆயிரக் கணக்கானவர் கூடி எங்கள் பிரசங்கத்தைக் கேட்க வழி செய்கிறாள். இப்படிக் கூடுபவர்களில் பெண்மணிகளும் ஏராளம். '' லக்ஷ்மிக்கும் நரசிம்மனுக்கும், ''இன்னும் இரண்டு அல்லது இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு தான் உங்களை மறுபடியும் சந்திக்கும்போது நீங்கள் சிரித்தபடி எங்களை வரவேற்க வேண்டும்'' என்று எழுதினார் வி. ஆர்.

(தொடரும்)

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**

‘அம்மா!

மூணு மாசமாச்சே எனக்கு!



‘ஆமாம், இப்போதே தொடங்க வேண்டும்

ஃபாரெக்ஸ்®’

உங்கள் பாப்பாவுக்கு திட உணவுகளைத் தொடங்க டாக்டர்கள் சிபாரிசு செய்வது **ஃபாரெக்ஸ்®**

விரைவான முழுவளர்ச்சி பெற
பாப்பாவுக்கான உன்னதமான
திட உணவு




லின்டாஸ்-GLF.65-2014 TM

எல்லா தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றது!

ஃபோர்ட் 3600

- இணையில்லா செயல் திறன்
- இணையில்லா நம்பிக்கை
- இணையில்லா சிக்கனம்



எஸ்கார்ட்ஸ் லிமிடெட்
ஃபார்ம் எக்விப்மெண்ட் டிவிஷன்,
18/4 மதுரா ரோடு, ஃபரிதாபாத்

EL-5140 TAM A

பூம்புகாருக்குள் புகுந்தால்...

உட்புற அலங்காரக் கலை நிபுணர்களில் (Interior Decorators) மிகவும் புகழ் பெற்றிருக்கும் திருமதி ரோஹிணி சங்கர், 'பூம்புகார்' அலுவலகத்தின் வியாபார மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரி திரு ஆர். கிருஷ்ணசாமிஅவர்களைச் சந்தித்து உரையாடும்போது நமக்குத்தான் எவ்வளவு விஷயங்கள் கிடைக்கின்றன!

ரோஹிணி: கடந்த சில வருடங்களில் வேகமாக முன்னேற்றமடைந்து இன்று தென்னகத்தின் மிகச் சிறந்த, டிசைன் சென்டராக பூம்புகார் விளங்கி வருகிறது என்பது என் கணிப்பு. ஆனாலும் இந்த அமைப்பு ஏற்றுமதி நோக்கத்தையே முக்கியமாகக் கொண்டு செயலாற்றுவதுபோலவும், சாதாரண இல்லங்களை அலங்கரிக்க மலிவு விலையில் அலங்காரக் கைவினைப் பொருட்களைத் தயாரிப்பதில் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லையோ என்று சில சமயங்களில் தோன்றுகிறது. என் எண்ணத்தை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

கிருஷ்ணசாமி: கடந்த மூன்றாண்டுகளாக நாங்கள் பல துறைகளில் தேர்ந்த கலைஞர்களைத் தேடிப் பிடித்து எங்கள் குடையின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டிருக்கிறோம். அதில் வெற்றியும் கிடைத்து வருகிறது. இக் கலைஞர்கள் பரம்பரை பரம்பரையாக ஒரு குறிப்பிட்ட கலைத்தொழிலில் தேர்ந்தவர்கள். அவர்களைக் கொண்டு சாதாரண மக்களுக்கும் உபயோகப்படும் சிறிய அலங்காரப் பொருட்களைத் தயாரிக்க முடியுமா என்று முயன்று வருகிறோம். ஒரு காலத்தில் தேக்குமரம், மற்ற மரங்களில் தான் பர்னிச்சர்கள் செய்ய வேண்டும் என்றிருந்ததை மாற்றி மூங்கிலால் நாங்கள் பல்வேறு டிசைன்களில் மேஜை நாற்காலி சாதாரண மரத்தில் அழகான 'பென் ஹோல்டர்' போன்ற அலுவலகத் தேவைகளைத் தயாரிக்கிறோம். சட்டைக்குப் போடும் பொத்தான்கள் கூட இங்கே மலிவு விலையில் உருவாகிறது. வீட்டில் வைக்க மிகவும் குறைந்த விலையில் மரப் பொம்மைகள், வர்ண சுவர் அலங்கார பேப்பர்மெஷ் வார்ப்புகள் இவையெல்லாம் மத்தியதர, குறைந்த வருமானப் பிரிவினரை மனத்தில் வைத்துக் கொண்டுதான் திட்டமிடப்படுகிறது. அதே போல் சாதாரண காடா துணியில் சாயம் போகாத வண்ணங்களை உபயோகித்துப் புராணங்களையும் தெய்வீகக் காட்சிகளையும் பிரதிபலிக்கும் ஓவியங்களை வரைந்து தயாரிக்கும் கலம் காரி விரிப்புகள் பெருமளவுக்குப் பிரபலமாகி இருக்கின்றன. திரைச்சீலைகளாகவும், படுக்கை, தலையணை உறைகளாகவும், பூஜை அறையிலும் இவை உபயோகிக்கப்படுகின்றன. மீட்டர் 20 ரூபாயிலிருந்து இவை கிடைக்கின்றன.

ரோஹிணி: பழங்காலத்திலிருந்து வரும் டிசைன்களையே இங்கு உபயோகிக்கிறீர்களா? அல்லது உங்கள் கலைஞர்களைப் புதிது புதிதாக அவர்களின் கற்பனைக்கேற்ப டிசைன்களை உருவாக்க அனுமதித்து ஊக்குவிக்கிறீர்களா?

கிருஷ்ணசாமி: இங்குள்ள மாஸ்டர் கிராப்ட்ஸ்மெனுக்கு டிசைனில் எந்த மாற்றத்தைச் செய்யவும் ஆதரவு உண்டு. காலத்துக்கு ஏற்பத் தம் கருத்தை ஓவியங்களில் அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். புதியனவற்றை ஆதரிப்பது தானே எங்களது நோக்



※ திருமதி ரோஹிணி சங்கர், மக்கள் தொடர்பு அதிகாரி திரு. கிருஷ்ணசாமி

கழும்? கலம் காரிக்கு இந்த ஒரு நிலையம்தான் செயல்படுகிறது.

ரோஹிணி: காகிதக் கூழில் நீங்கள் தயாரிக்கும் உருவங்கள் அற்புதமாக இருக்கின்றன. அவற்றின் மார்க்கெட் நிலவரம் எப்படி?

கிருஷ்ணசாமி: இவை மிகவும் பிரபலமானவை. அதிலும் கொலு போன்ற சில திருவிழாக் காலங்களில் சில குறிப்பிட்ட தெய்வ உருவங்களுக்கும், மற்ற பொதுவாக பேப்பர்மெஷ் பொம்மைகளுக்கும் ஏகப்பட்ட கிராக்கி இருக்கும். வர்த்தகப் பொருட்காட்சி போன்ற இடங்களில் மத்தியதரப் பொருளாதார வர்க்கத்தினர் பெருமளவில் கூடுகிறார்கள் இல்லையா? அப்போது பேப்பர் மெஷ் சிலைகள், விலை குறைவாகவும், அழகாகவும் இருப்பதால் அவர்களைக் கவருகின்றன. இவர்களைத் தவிர வெளிநாட்டவர்களை இவை ஈர்த்திருக்கின்றன. நிறைய ஆர்டர்கள் வந்தாலும் எங்களால் இவற்றை ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. காரணம் கடல் மூலம் இவற்றை அனுப்பும்போது பாக்கிங் சிரமங்களும், இவற்றின் அழகு பாழாகிப் போவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. இருந்தாலும் நிறைய வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தாங்கள் கைகளில் கொண்டு போகும் அளவுக்கு அமைந்த பேப்பர்மெஷ் படைப்புக்களை வாங்கிப் போகத் தயங்குவதேயில்லை.

ரோஹிணி: எந்தெந்த நாடுகளுக்கு 'பூம்புகார்' தயாரிப்புக்கள் ஏற்றுமதியாகின்றன?

கிருஷ்ணசாமி: மத்திய கிழக்கு நாடுகள், ஜப்பான், சிங்கப்பூர் இவை முக்கியம்.

ரோஹிணி: இது சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு. நமது குழந்தைகளுக்காக ஏதேனும் சிறப்புப் பொம்மைகளைப் பூம்புகார் உருவாக்குகிறதா?

கிருஷ்ணசாமி: பொம்மைகள் தயாரிக்க ஒரு தனிப்பிரிவே இயங்கி வருகிறது. 24 பொம்மைகள் அடங்கிய செட் ஒன்று, மூன்று வயது வரையிலான குழந்தைகள் விளையாடும் வகையில் இங்கு தயாரிக்கப்படுகிறது. சொப்பு என்று சொல்லுகிறோமே, அது போன்றது. ஐந்து முதல் ஏழு வயதுக் குழந்தைகளுக்காக முதலுதவி, சாலை விதி முறைகளை விளக்கும் எஜுகேடிவ் பொம்மைகளைத் தயாரிக்கிறோம். அதேபோல மோட்டார் கார், ஆகாய விமானம் போன்றவை. சிறிய குழந்தைகள் நடை பயில வண்டிகளைக் கண்கவரும் முறையில் செய்கிறோம்.

ரோஹிணி: நமது எந்த திறமையில் வெளிநாட்டவர்களுக்கு மோகம் அதிகம்?

கிருஷ்ணசாமி: நமது மர வேலைப்பாடுகளில் அவர்கள் மனத்தைப் பறிகொடுக்கிறார்கள். பிறகு வெண்கல, பித்தளை வடிவங்கள்.

ரோஹிணி: சில வீடுகளில் திறமையுள்ள பெண்மணிகள் இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் சில கலைப் பொருட்களின் அழகு நம்மைப் பிரமிக்க வைக்கும். அப்படிப்பட்டவர்களை ஊக்குவித்து அந்தப் பொருட்களை உங்களது ஷோரூம்களின் மூலம் விற்றுத் தர முடியாதா?

கிருஷ்ணசாமி: செய்கிறோமே! துணிப் பொம்மைகள் கைப்பைகள், அப்படித்தான் விற்பனையாகின்றன. தனிப்பட்ட பெண்மணிகள் சிலர் எங்களுக்கு ரெகுலராகத் தயாரித்து இவற்றை அனுப்புகிறார்கள். ஆனால் வேண்டும் அளவுக்கு அவர்களால் சீக்கிரமாக அவற்றைச் செய்ய முடிவதில்லை. காரணம் அதில் சிரமம் அதிகம். புதுமையான பொருட்களை (மணிப் பொம்மைகள் போன்றவை) யார் செய்தாலும் நாங்கள் அவற்றை மொத்தமாக வாங்கிக் கொள்கிறோம்.


ரோஹிணி: இங்கு தயாரிக்கும் பொருட்களின் குறைந்த விலை என்ன? அதிகபட்ச விலை எவ்வளவு?

கிருஷ்ணசாமி: பனை ஓலையில் நாங்கள் செய்யும் சின்ன சின்ன உபயோகப் பொருட்கள் (கூடை போன்றவை) 2 ரூபாயில் கிடைக்கின்றன. நீங்கள் சற்றுமுன் பார்த்தீர்களே 4 அடி வெண்கலச் சிலை அது 12,500 ரூபாய்!

ரோஹிணி: எனது தொழிலுக்கும் உங்கள் தயாரிப்புக்கும் தொடர்பு உண்டு. சமீபத்தில் ஓரிரண்டு ஆண்டுகளில் நீங்கள் பல புதிய தயாரிப்புக்களை உருவாக்கியிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். இது மேன்மேலும் வளர்ந்து "பூம்புகார்" ஆல் போல் தழைக்க வேண்டும். என் வாழ்த்துக்கள்.

கிருஷ்ணசாமி: நன்றி, மிஸஸ் ரோஹிணி சங்கர்.

சந்திப்பு ஏற்பாடு, கட்டுரை: விஜய் நிர்மல்
புகைப்படங்கள்: என். எஸ். மணியன்




பேரன் பேத்திகளே!

மகாஜன சபா சார்பில் பாரதியார் விழாவை ஒட்டி நடந்த பேச்சு, பாடல் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆரம்பப் பள்ளிச் சிறுவர் சிறுமிகளுக்குப் பரிசளிப்பு விழா. ம. பொ. சி. தலைமை தாங்கினார். துவக்கத்தில் பேசிய நாரண துரைக் கண்ணன் "எனது அன்பார்ந்த தம்பி தங்கைகளே!" என்று ஆரம்பித்ததும் அருகில் இருந்த ம. பொ. சி. சிரித்து விட்டார். "அதிக வயதான நீங்களும் நானும் இக்குழந்தைகளை விளிக்கும் போது "பேரன் - பேத்திகளே!" என்றுதான் கூற வேண்டும்" என்றார். சிறுவர் - சிறுமியர் "கொல்" என்று சிரித்தனர்.

அடுத்துப் பேசிய ம.பொ.சி. "பாரதி மதித்துப் போற்றிய பாப்பாக்களே" என்றதும் கைத்தட்டல் வானைப் பிளந்தது.

தகவல்: "சங்கரி புத்திரன்."

நாலு



நாலு பேரிடம் நான்கு நூல்களைத் தந்துவிட்டு ஒரு வாரம் சென்றபின் சந்தித்தபோது...

பேரிடம் நாலு நூல்கள்



அமைந்தகரையில் வசிக்கும் கல்லூரி மாணவர் திரு அ. நாகப்பன்:

"தமிழகம் தந்த மகாகவி"

இந்தப் புத்தகம் முழுவதுமே விறு விறுப்பா ஒரு சினிமாப்படம் பார்ப்பது போல் இருக்கு. பாரதியின் கவிதை நயம், வசன நடை முதலியவற்றைப் பற்றிப் பல பெரிய அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. 'கல்கி'யின் நகைச்சுவைக் கட்டுரை திரும்பப் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. இதில் என்னை மிகவும் கவர்ந்தது பாரதியின் ஆத்திச்சூடி ஆகும். ஔவை சொன்ன ஆறுவது சினம், போர்த் தொழில் புரியேல் ஆகியவற்றுக்குப் பதிலாகப் பாரதி ரௌத்ரம் பழகு, போர்த் தொழில் பழகு என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

பாரதி லட்சியப்படி பெண் வீரமும் நிமிர்ந்த நடையும், எவர்க்கும் அஞ்சாத ஞானச் செருக்கும் உடையவளாய் இருக்க வேண்டும். ஆண்களும் கற்பு கொண்டு வாழ வேண்டும்.

பாரதி ஏன் பட்டு அணியவில்லை என்று மகள் தங்கம்மாள் பாரதி கேட்க, கவி வேந்தன் "நான் இன்பம் கொள்வதற்காகப் பல பட்டுப் பூச்சிகள் உயிரை வாங்க மாட்டேன்" என்று சொன்ன கருத்து என்னை மிகவும் கவர்ந்தது.

பாரதி தமிழனாய்ப் பிறந்து, இந்தியனாய் வாழ்ந்து உலக 'மக்களோடு தொடர்பு கொண்ட திறத்தை அழகாகப் புத்தகம் காட்டுகிறது. பாரதி நூற்றாண்டு நெருங்குகிறது. எல்லோரும் படிக்க வேண்டிய புத்தகம்.

தமிழகம் தந்த மகாகவி, நூல் வடிவப் பொறுப்பாளர்: சீனி விசுவநாதன், ஸ்ரீ புவனேசுவரி பதிப்பகம், 3399 அண்ணாநகர், சென்னை–600040, விலை: ரூ. 13.00.

"இன்ப இல்லம்"

சேப்பாக்கத்தில் வசிக்கும் க. ஸ்ரீபால், போலீஸ் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல்:



கொடுத்த வாக்குக் காவது படிக்கணும் என்று எண்ணித்தான் ஆரம்பித்தேன். சிறிய வாக்கியங்கள், நல்ல நடை, பல புதிய செய்திகள் இவை என்னைக் கவர ஆரம்பித்தன. லட்சிய மனைவி நடந்து கொள்ள வேண்டிய முறையை யெல்லாம் விவரிக்கும் புத்தகம்.

பெண்கள் வீட்டை எப்படித் துப்புரவாக வைத்துக் கொள்ளணும், அழகு படுத்தணும், பலவகை தின்பண்டங்கள், எப்படித் தயாரிப்பது போன்றவையெல்லாம் நன்கு சொல்லப் பட்டிருக்கின்றன.

கணவரைக் கவர யுக்திகள் என்ற பகுதி ரொம்ப நல்லா இருக்கு.

வீட்டின் அமைப்பு, வீட்டை அழகு படுத்துதல் ஆகியவற்றை விளக்கும் போது படங்கள் போட்டுக் காட்டி இருக்கலாம். அதேபோல் தின்பண்டங்கள் பற்றிக் குறிப்பிடும்போது வாக்கியங்களுக்குப் பதிலாகப் பட்டியல் போட்டுக் கொடுத்திருந்தால் வசதியாக இருக்கும்.

"இன்ப இல்லம்", ஆசிரியர்: குயிலி ராஜேஸ்வரி, வெளியீடு: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம், 2/96 பெரியதெரு, சென்னை–5, விலை: ரூ. 6.00.

ஆனந்த மாநடம்

அசோக் நகரில் மீனாட்சி கல்லூரி மாணவி குமாரி பி. வி. மீனா:

இந்த ஆராய்ச்சி நூலைப் படிக்க முதலில் பயமாக இருந்தாலும் போகப்போக 'த்ரில்'லாக இருந்தது.

'ஆனந்த மாநடம்' என்பது பதினைந்து கட்டுரைகள் கொண்ட தொகுப்புப் புத்தகம். எதைத் தொடுவது எதை விடுவதுன்னு புரியலே. ஒவ்வொன்றும் நன்றாக ஆராய்ச்சி செய்து ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

கட்டுரைகளில் ஆங்காங்கே மேல்நாட்டு கவிஞர்களோட எழுத்துக்களை மேற்கோள் காட்டி ஒப்பிட்டிருப்பது பொருத்தமாயிருக்கிறது.



மூன்று கட்டுரைகள் என்னை அதிகமாகக் கவர்ந்தன. ''திருக்குறள் நுண்கலைகள்'', ''மைம் மூலிலே சந்தாக மாட்டாயோ?'' ''தேனுந்தும் ஆனந்த மாநடம்'' ஆகியன. தலைப்புக் கட்டுரை வெகு ஜோர்.

''தமிழ் இலக்கியப் படைப்புக்களைப் பயில்வோர் கடலுக்குள் மூழ்கிக் கிடக்கும் முத்துக்களைத் தேடுவரையொப்பர்'' என்று ஆசிரியர் கூறுகிறார். திரு கமலையா கண்டெடுத்துள்ள முத்துக்கள் அசாதாரணமாக ஒளிர்கின்றன.

''ஆனந்த மாநடம்.'' ஆசிரியர்: க. சி. கமலையா, B– 194 பதினோராவது அவென்யூ, அசோக்நகர், சென்னை–600083.

'' நிலமெனும் நல்லாள் ''

திருவான்மியூரில் வசிக்கும் இன்ஜினீயர் திரு என். சுப்ரமணியன்:

''சாதாரணமா இன்ஜினீயரிங் புஸ்தகங்களை மட்டும் படிக்கும் எனக்கு இது ரொம்ப புதுமையாக இருந்தது. இரண்டு நாட்களில் படித்து முடித்தேன்

நகரத்திலிருந்து டாக்டர் ஒருத்தர் தன் மனைவியின் நடத்தை பிடிக்காமல், கிராம சேவை செய்வதைச் சித்திரிக்கும் கதைதான் இது.

பொருளாதார ஏற்றத்தாழ்வு, பண்பாடு, இவைகளைச் சித்திரிப்பதோடு சில மனிதர்களின் ஆசா பாசங்களையும் ஆசிரியர் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.



''நிலமெனும் நல்லாள்'' – தலைப்புக்கும் கதைக்கும் என்ன சம்பந்தம்னு புரியலே.

பல இடங்களிலே படிக்க முடியாத அசிங்கமான வசனங்களைக் கதா பாத்திரங்கள் சொல்வது போல் ஆசிரியர் எழுதியுள்ளார். இவைகள் தவிர்க்கப் பட்டிருக்கலாம்.

ஆசிரியர் நிறையப் படித்திருக்கலாம், ஆனால் பாமர மக்கள் எல்லாம் தெரிந்தவர்களாக இருப்பார்களா என்ன? உதாரணத்துக்குச் சொன்னால் ''எக்ஸிஸ்டென்ஷியல் தத்துவம், ஸைகிகல் டிஸ்டன்ஸ்,'' போன்றவை எத்தனை பேருக்குத் தெரிந்திருக்க முடியும்? ஆராய்ச்சிக் கட்டுரைகளில் எழுத வேண்டியதைக் கதையில் எழுதுவது அவசியந்தானா?

பிராமண சமூகத்தைச் சேர்ந்த பெண் அசைவம் சாப்பிடுவதாகவும் கீழ்த்தரமாக நடப்பதாகவும் எழுதியிருக்க வேண்டாம். படிப்பதற்கே கஷ்டமாக இருந்தது. சினிமாவைப் போல் புத்தகங்களுக்கும் சென்ஸார் இருக்கலாம் என்றால் சென்ஸாரும் இப்போது ரொம்பத்தான் தாராள மனத்துடன் நடக்கிறார்களே!

''நிலமெனும் நல்லாள்,'' எழுதியவர்: இந்திரா பார்த்தசாரதி. தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை–5, விலை: 7.50.

பேட்டி: 'சிக்கி'

பெல்ஹாம் 1:23


பெல்ஹாம் ஸ்டேஷனிலிருந்து பதினேழு பயணிகள் ஒரு கண்டக்டர் ஆகியோர் உள்ள ஒரு பாதாள ரயிலைச் சரியாகப் பிற்பகல் 1-23க்கு நாலு பேர் கடத்திச் செல்கின்றனர். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அவர்களின் கைக்கு ஒரு மில்லியன் டாலர் பணம் கிடைத்தாக வேண்டும். இல்லாவிட்டால் ஒரு நிமிடத்துக்கு ஓர் உயிர் வீதம் பறிக்கப்பட்டுவிடும். இவர்களது கட்டளை எப்படி நிறைவேற்றப்படுகிறது! பணம் எவ்வாறு சேகரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறது; ரயில் கடத்தல்காரர்கள் இறுதியில் என்ன ஆகிறார்கள் என்பதைப் படு சுவாரசியமாகச் சித்திரிக்கிறது ''தி டேக்கிங் ஆப் பெல்ஹாம் 1.23'' என்ற ஆங்கிலப் படம், ஒரே த்ரில்தான்!

— த-மு-ரா.''





சுவையறிஞரின் குதூகலம்.
குவாலிடி மாரி பிஸ்கோத்துகள் சிறந்த ஆவல்களை நிறைவு படுத்துகின்றன. நுணுக்கமான உலை எட்டுப் பொரையான மாவை நிதானமாகப் பக்குவப்படுத்துகிறது. உள்ளும் புறமும் ஒரே சீரான பொன் நிறம். ஒவ்வொரு நிலையிலும் தீவிரமான தரக்கட்டுப்பாடு, சுத்தமான சத்து நிறைந்த பிஸ்கோத்துகளுக்கு உறுதியளிக்கிறது. நாலு உறைப் பாக்கெட்டுகள் இந்தத் தனிப்பட்ட மொறு மொறுப்பையும் புதுமையையும் கட்டிக் காக்கின்றன.
குவாலிடி மாரி—உலகத்தின் மிகச் சிறந்த பிஸ்கோத்து தயாரிப்பாளர்களிடம் பெற்ற பரிபூரணமான பயிற்சியால் தயாரிக்கப்பட்ட பரிபூரண பிஸ்கோத்துகள்.
குவாலிடீஸ்
மாரி
பிஸ்கோத்துகள்
சத்து நிறைந்த சிற்றுண்டி.
இணையில்லா 6 பொரை அச்சிறல் ஒப்பில்லாக் கரகரப்பு.
IS: 1011
குவாலிடி உயர்தர பிஸ்கோத்துகளைத் தயாரிக்கிறது.
KWALITY'S MARIE BISCUITS
குவாலிடி புட் ப்ராடக்ட்ஸ்
பெங்களூர் 560 039
ASP-KFP-7902



✠ "மூன்று மைல் தீவு" என்னுமிடத்தில் அணு விசை நிலையம்

அணுவிசை அரசியலாகிறது!

அடுத்த ஆண்டு நடக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில், அணுவிசை வேண்டுமா; கூடாதா என்பதே முக்கியக் கேள்வியாக மூளப் போகிறது. ஏனெனில் நாடு நெடுகிலும் அணு மின்விசைக்கு எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. மே மாதம் முதல் ஞாயிறன்று ஏறத்தாழ லட்சம் பேர்கள் தலைநகர் வாஷிங்டனிலேயே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். தலைமை தாங்கியவர்கள் பெரும் புள்ளிகள்: கலிஃபோர்னியா கவர்னர் ஜெரி பிரவுன், விலை உயர்வு எதிர்ப்புத் தலைவர் ரால்ஃப் நாடர், சூழ்நிலை கெடாமல் காப்பதில் முனைந்துள்ள தலைவர்கள் பாரி காமனர் ஹெலன் அம்மையார், மகளிர் உரிமை வீராங்கனை நடிகை ஜேன் ஃபாண்டா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

மறுநாள் அவர்களை அதிபர் ஜிம்மி கார்ட்டர் வெள்ளை மாளிகைக்கு அழைத்து, அமைதியாகவும் திறமையாகவும் கிளர்ச்சி நடத்தியதற்காக வாழ்த்துக் கூறினார். ஆனால் அணு மின்விசை "மிக ஜாக்கிரதையாக ஆராய்ந்து, முடிவு எடுக்க வேண்டிய" பொறுப்பைத் தம் மேல் சுமத்தியுள்ளது என அவர் விளக்கினார். உதாரணமாக, சிக்காகோ நகரில் உபயோகிக்கப்படும் மின்விசையில் பாதி அணு மின்விசை. திடீரென்று அணு மின் நிலையத்தை மூடுவதென்றால் எப்படி முடியும் என்று அவர்களிடம் அவர் கேட்டார்.

அணு மின்விசை உபயோகத்தைக் குறைத்துக் கொண்டே போவதற்குத் தமது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையெல்லாம் விவரமாக விளக்கினார். ஆனால் ஜனநாயக நாட்டில் சட்டமன்றத்தின் இசைவு வேண்டுமே என்றும் வினவினார்.



✠ மூன்று மைல் தீவு என்னுமிடத்தில் அணுக்கதிர் கசிவு ஏற்பட்டதால் பீதியுற்று வீடு வாசலைத் துறந்து வெளியேறும் குடும்பம்

அணு எதிர்ப்பு அணி வகுப்பில் உரையாற்ற அதிபர் மறுத்து விட்டபோதிலும், அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கிளர்ச்சி நியாயமானதே என்றும், அணு உலைகளால் அறவே ஆபத்து நிகழாமல் காக்க அரசு அனைத்தும் செய்து வருகிறதென்றும் உறுதிமொழி அளித்திருந்தார். அமெரிக்காவில் 120 அணு மின் நிலையங்கள் உள்ளன.

அமெரிக்காவில், "மூன்று மைல் தீவு" என்னுமிடத்தில் அணு மின் நிலையத்தில் கதிரியக்கக் கசிவு ஏற்பட்டதன் விளைவாக, அணு எதிர்ப்பாளர்கள் நடத்திய மிகப் பெரிய ஆர்ப்



✖ நியூயார்க்கில் அணுவிசைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

பாட்டம் இது. அண்மைக் காலத்தில் இவ்வளவு பெரிய கிளர்ச்சி நடந்ததேயில்லை.

வாஷிங்டன் கிளர்ச்சி ஆரம்பம்தான்; முடிவல்ல என்று ஒரு தலைவர் கூறினார். ''அடுத்து சட்டமன்ற உறுப்பினர் முன்பு போராடுவோம். சட்டமன்றத்தோடு விட்டு விட மாட்டோம்; அதிபர் கார்ட்டரை எதிர்த்தும் கிளர்ச்சி நடத்துவோம்'' என்று அவர் முழங்கினார்.

''அணுவிசை, அரசியல் சிக்கலாகி விட்டது. அதிபர் தேர்தலில் அதுவும் போட்டியிடும்'' என்றார், கவர்னர் பிரவுன்.

இது அமெரிக்கப் பிரச்சினை மட்டுமல்ல, உலகின் கவனத்தைக் கவரும் பெரிய பிரச்சினையாகிவிட்டது.



✖ அதிபர் ஜிம்மி கார்ட்டர்


ஓய்வற்ற பணி

போன வருடம் திருப்பதியில், பக்தர்கள் வேங்கடாசலபதிக்கு காணிக்கையாகச் செலுத்திய தலைமுடி நூற்றிருபத்தைந்து டன்கள்! இருபது லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. கல்யாண கட்டா, என்ற இடத்தில், தேவஸ்தானத்தால் அமர்த்தப்பட்ட சுமார் 555 நாவிதர்கள் இரவும் பகலும் ஓய்வின்றிப் பக்தர்கள் தலையை மழித்துக் குவிக்கிறார்கள்! அவர்கள் மழிக்கும் போது காயம்படாமலிருக்கப் பக்தர்கள் அதிகப்படி பக்ஷீஸ் ஒரு ரூபாய் தர வேண்டும்; அவர்களுக்குத் தர வேண்டிய கூலி - ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசா!

'ஆன்லுக்கர்' இதழிலிருந்து: எடுத்து எழுதியவர்: 'தஞ்சை மணியன்.'



ரெடிமேட் ஜோக்குகள்



கமல்

இப்போதெல்லாம் பத்திரிகைகளில் வரும் ஜோக்குகள் அன்றுடப் பிரச்னைகளின் பின்னணியில் அமைகின்றன — இதுவே பல ஆசிரியர்களுக்குப் பிரச்னை! ஆமாம்; உதாரணமாக மண்ணெண்ணெய் பற்றாக் குறை வந்தால், உடனே வாராவாரம் இதை வைத்து ஜோக்குகள் போடுவதற்குப் படாத பாடு படுகிறார்கள்; இதைப் பற்றி எழுத்தாளர் ஏகாம்பரத்திடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் ரெடிமேட் ஜோக்குகள் என்ற தம் கட்டுரையைக் கொடுத்தார்;

●

பற்றாக்குறை ஜோக்குகள்:

மண்ணெண்ணெய், துவரம்பருப்பு, புளி, காப்பிக் கொட்டை ஆகியவைகளுக்குப் பற்றாக்குறை ஏற்படும் போது, கீழ்க்கண்ட ஜோக்குகளில் கோடிட்ட இடத்தில் மேற்கண்ட ஒன்றைப் போடவும்.

●

''என்ன அவர் வீட்டைச் சுற்றிப் போலீஸ் காவல் போட்டிருக்கிறார்;

''ஒன்றுமில்லே; நேற்று ———— வாங்கி ஸ்டாக் பண்ணியிருக்கிறாராம்; அதனால் தான்!''

●

''ஆயிரம் இரண்டாயிரம் என்று பணத்தைக் காட்டினால் வைர இறக்குமதி லைசென்ஸ் கொடுத்து விடுவேன் என்று நினைக்கிறாயா?''

''இல்லேங்க... ஹி... ஹி...''

''முதலில் ———— கொண்டு வா; உடனே லைசென்ஸ் தருகிறேன்.''

●

''ஏங்க... அவங்க வீட்டுக் கல்யாணம் நின்னு போச்சாமே.''

''ஆமாம்; சீர் வரிசையில் ————யை வைக்க வேண்டும் என்றார்கள்; பெண்ணைப் பெற்றவன் என்ன செய்வான்?''

●

''ஈரானிலிருந்து மாப்பிள்ளை வருகிற வாரம் ஃப்ளைட்டில் வருகிறாராம்.''

''அப்படியா... அவரைக் கொஞ்சம் ———— வாங்கிக் கொண்டு வரச் சொல்லுங்கள்.''

●

''யாரய்யா இந்த ஊரில் நாலுமாடி பங்களா கட்டிக் கொண்டிருப்பவர்?''

''தெரியாதா உனக்கு; அவர்தான் ———— ஸ்டாக்கிஸ்ட்!''

●

''என்னங்க; சௌகாரே... நூறு ரூபாய் கடனுக வேண்டும்; ————யை அடமானமாக வைக்கிறேன்.''

●

''என்னது; மெடிகல் காலேஜில் அட்மிஷன் கிடைச்சிட்டதா? பிரின்சிபாலின் பியூனை உனக்குத் தெரியுமா?''

''பியூனைப் பர்சனலாகத் தெரியாது; அவருக்குக் கொஞ்சம் ———— கொடுத்தேன். காரியம் நடந்துட்டுது.''

●

''ஒரு பெரிய கூட்ட சீன் எடுக்கணுமே ஐயாயிரம் எக்ஸ்ட்ரா வேண்டும் என்கிறார் டைரக்டர்.''

''நீங்க கவலைப்படாதீங்க; நான் சுலபமாக முடிச்சுடறேன்.''

''எப்படி?''

''ஒரு பெரிய போர்டு எழுதி வைக்கணும்; 'இங்கு ———— தாராளமாகக் கிடைக்கும்' என்று அவ்வளவுதான் கூட்டம் பொங்கி வழியாதா?''

●

(இவைகளை நான் படித்துக் கொண்டிருந்த போது எழுத்தாளர் ஏகாம்பரம், ''இவை மட்டுமல்ல; காலேஜ் அட்மிஷன் ஜோக், வெய்யில் ஜோக், சங்கீத சீசன் ஜோக், கிரிக்கெட் டெஸ்ட் ஜோக், பரீட்சை சீசன் ஜோக் என்று பல சப்ஜெக்டுகளுக்குத் தயார் பண்ணி வைத்திருக்கிறேன்'' என்றார்; தங்கள் தேவைகளுக்குப் பத்திரிகை ஆசிரியர்கள் எழுதலாம்!)

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran

மிகச் சிறிய விஷயங்கள்தான் எங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பினை அளிக்கின்றன.

ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களின் முன்னோடிகளான சுந்தரம்-கிளேட்டனுக்கு பாதுகாப்பு என்பது ஒரு அர்த்த மற்ற உறுதிமொழி அல்ல. எங்கள் சாதனங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிப்பதற்கேற்ப உருவாக்கப்பட்டவை.



ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் அவர்களுடைய அன்புச் செல்வங்களைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர் — வர்த்தக வண்டிகளில் பொருத்தியுள்ள பாதுகாப்பு சாதனங்களில் நம்பிக்கை வைத்தே.

இந்த பாதுகாப்புச் சாதனங்களை உருவாக்கிய நாங்கள் பெருமிதமடைவது இயற்கைதானே. இருந்தபோதிலும் இது ஒரு மிகப் பெரிய பொறுப்பு. முழுமையான காற்று மற்றும் காற்று-உதவி பிரேக் சாதனங்களின் ஒவ்வொரு சிறிய உறுப்பினையும் மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கிறோம். இதனால்தான் அனேகமாக ஒவ்வொரு ஹெவி-ட்யூடி வர்த்தக வண்டியிலும் எங்களுடைய ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்கள் அசல் உறுப்புகளாகப் பொருத்தப்பட்டுள்ளன. இது ஒரு அத்யாவசியமான தேவையுங்கூட.

உங்கள் பாதுகாப்பிற்கு எங்கள் உத்திரவாதம்

தொடர்ச்சியான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தரக் கட்டுப்பாடு — இவைகள் முழுமையான பாதுகாப்பினை அளிக்கும் ஒரு பிரேக் சாதனத்திற்கு வித்திடுகின்றன.

நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றோம் — அதனைப் பாதுகாக்கவும்

CD-TVS' அளிக்கும் முழுமையான காற்று மற்றும் காற்று-உதவிகொண்ட பிரேக் சாதனங்களின் உறுதியான பாதுகாப்பு எப்பொழுதும் உங்களுக்குக் கிடைப்பதற்கு உங்கள் சாதனத்தை முறையாகப் பராமரியுங்கள். மற்றும் எப்பொழுதும் அசல் CD-TVS உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். இதனை அலட்சியம் செய்ய வேண்டாம். உங்கள் நன்மைக் காகத்தான் சொல்கிறோம்.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பாடி, சென்னை 600 050

உங்கள் பாதுகாப்பு எங்கள் தொழில்

CD TVS

SAA/SCL/2588

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

